உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை - 20
பக்கங்கள் - 28
சுடர் 31 | கதிர் 351 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 26. வெள்ளிக்கிழமை 11.11.2016

## மானிய விலையில் சில பொருள்கள்

கொழும்பு, நவ. 11
லங்கா சதொச வர்த்தக நிலையத்தினூடாக மானிய விலைக்கு விற்பனை செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள உணவுப் பொருள்களை நிதியமைச்சர் நேற்றுச் சபையில் அறிவித்தார்.
சீனி, மைசூர் பருப்பு, கோதுமை மா, நெத்தலிக் கருவாடு, ரின் மீன், மாசி, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், பயறு, அரிசி, கருவாடு, >> 23



## சமூகப் பொருளாதார இடைவெளி 2020 இல் நீங்கும்

### வரவு – செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையே நிலவுகின்ற சமூகப் பொருளாதார இடைவெளியை 2020 ஆண்டளவில் நீக்குவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.
இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.
நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
தேசிய கருத்தொருமைப்பாடுடைய இந்த அரசு, அரசமைப்பு சட்டவாட்சியின் மீளுருவாக்கம், வலுப்படுத்தல் >> 21

## வடக்கிலும் திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 11
வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்குச் சில திட்டங்கள் அரசினால் முன்மொழியப்பட்டுள்ளன.

- காங்கேசன்துறையிலிருந்து பொன்னாலை வரையில் ரயில் சேவையை விரிவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபா.
- வல்வெட்டித்துறையில் குமார் ஆனந்தன் நீச்சல் தடாகம் அமைக்க 25 மில்லியன் ரூபா.
- யாழ். மாவட்ட தபால் சேவை மேம்பாட்டுக்கு 10 மில்லியன் ரூபா.
- வடக்கு மாகாணத்தில் தனியார் துறை வியாபாரங்களை விரிவுபடுத்துவதற்காக உறுதியளிக்கும் வகையில் கட்டட நிர்மாணத் துக்காக ஆயிரம் மில்லியன் ரூபா.
- யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் மற்றும் நீதிமன்றக் கேட்போர் கூட நிர்மாணத்துக்கு 600 மில்லியன் ரூபா.
- வடக்கு-கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபா.
- யாழ்ப்பாணத்தில் உப்பு நீக்கப் பொறித் தொகுதி நிறுவுவதற்கு 250 மில்லியன் ரூபா.
- யாழ்ப்பாணத்தில் சிறப்பு சிறுவர் நோய் சிகிச்சைப் பிரிவு நிறுவ ஆயிரம் மில்லியன் ரூபா.
- மன்னார் மற்றும் வவுனியாவில் நிலக் கீழ் நீரைக் கண்காணிப்பதற்கான முன்னோடித் திட்டத்துக்கு 200 மில்லியன் ரூபா.
- யாழ்ப்பாணம் உள்ளிட்ட 10 மீன்பிடிக் கிராமங்களை மேம்படுத்த ஆயிரத்து 200 மில்லியன் ரூபா.
- மன்னாரில் நீரியல் கைத்தொழில் வலயம் நிறுவ 500 மில்லியன் ரூபா. (த-5)

# பச்சைத் தண்ணீர் பட்ஜெட் தாக்கல்

## எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை
## எதிர்க்கட்சிகளின் காரசாரமான விமர்சனம்

- ⇨ வடக்கு-கிழக்குக்கு எதுவும் இல்லை-கூட்டமைப்பு
- ⇨ குழந்தைத்தனமான வரவு - செலவுத் திட்டம் - மகிந்த அணி
- ⇨ இது ஒரு பேய் பட்ஜெட்- மக்கள் விடுதலை முன்னணி

யாழ்ப்பாணம், நவம்பர் 11
பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு – செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டது. கடந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்ட நிலையில் இம்முறை மக்களுக்கு நிவாரணங்களும் நலத்திட்டங்களுக்கு அதிக ஒதுக்கீடுகளும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவற்றுக்கு மாறாக எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனத்தை எதிர்கொண்ட ஒரு 'பச்சைத் தண்ணி' வரவு செலவுத்திட்டமே முன்வைக்கப்பட்டது.
நல்லாட்சி அரசின் வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கை கட்டியெழுப்புவதற்கான சிறப்புத் திட்டங்கள் எதுவும் இல்லை என்று >> 21



## பொருள்கள் சில விலை குறைப்பு

நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றுக்கு விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

| பொருள்கள் | தற்போதைய விலை | விலைக் குறைப்பு |
|---|---|---|
| பாசிப் பயறு (ஒரு கிலோ) | 200 ரூபா | 15 ரூபா |
| பருப்பு (ஒரு கிலோ) | 180 ரூபா | 10 ரூபா |
| உருளைக் கிழங்கு (ஒரு கிலோ) | 120 ரூபா | 5 ரூபா |
| நெத்தலி (ஒரு கிலோ) | 495 ரூபா | 5 ரூபா |
| வெள்ளைச் சீனி (ஒரு கிலோ) | 95 ரூபா | 2 ரூபா |
| மண்ணெண்ணெய் (ஒரு லீற்றர்) | 49 ரூபா | 5 ரூபா |
| எரிவாயு (12.5 கிலோ) | 1560 ரூபா | 25 ரூபா |
| உள்நாட்டு பால்மா (400 கிராம்) | 310 ரூபா | 15 ரூபா |
| உள்நாட்டு ரின் மீன் | 140 ரூபா | 15 ரூபா |

## வருமானம் 2,098 பில்.
## செலவீனம் 2,723 பில்.
## பற்றாக்குறை 625 பில்.

வரவு செலவுத் திட்ட அறிவிப்புகள் 2ஆம் பக்கத்தில்

## தமிழருக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 11
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசும், தமிழ் மக்களை ஏமாற்றி விட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா குற்றம் சாட்டியுள்ளார். >> 21



## மைத்திரி–ரணில்–மங்கள தீவிர மந்திராலோசனை

### பட்ஜெட் உரை நடந்தவேளை

யாழ்ப்பாணம், நவ. 11
2017 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்ட உரையை நிதி >> 23

## அயலுறவுக் கொள்கையை மாற்றாது அமெ.

### தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11
அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்த நாட்டின் அயலுறவுக் கொள்கையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது என்று அமெரிக்கத் தூதுவர் >> 23

## கூட்டமைப்பினர் இனி இளநீரைக் குடிக்கட்டும்

### ஹிலாரியின் தோல்வியால் மகிழ்கிறார் கோத்தபாய

கொழும்பு, நவ. 11
ஒபாமாவின் காலத்தில் இலங்கையின் மனித உரிமை விவகாரம் பெரிதாக இருப்பதற்கும் ட்ரம்பின் வெற்றிக்குத் தடையாக இருந்த அமெரிக்கச் சிறுபான்மையினரே காரணம். அதனால் ஹிலாரியின் வெற்றிக்காக தேங்காய் உடைத்த கூட்டமைப்பினர் தற்போது இளநீரைக் குடிக்கட்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் >> 21



## ஒரு வாரத்தில் அகலும் அம்பாறை புத்தர் சிலை

### ஹக்கீமிடம் ரணில் உறுதி

கொழும்பு, நவ.11
அம்பாறை மாவட்டம் இறக்காமம் – மாணிக்கமடு, மாயக்கல்லிமலையில் பலாத்காரமாக >> 23

**செல்பியால் மாட்டியது திருட்டுக் குழு**

திருடச் சென்ற குழு அங்கிருந்த புதிய அலைபேசியைக் கண்டு ஆசைப் >> 21

## தடுப்புக் காவல் கொலை
## சடலத்தையும் விட்டுவைக்காது சித்திரவதை செய்த பொலிஸ்

### நீதிமன்றில் சாட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11
தடுப்பிலிருந்த சந்தேக நபர் சுமணனின் நகங்களைப் பிடுங்கியும், மின்சாரத்தால் தாக்கியும் >> 23



எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு
- வாகனக் கடன்
- லீசிங்
- தனிநபர் கடன்
- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - செலவுத் திட்டம் 2017



## விவசாயம் - கால்நடை - மீன்பிடி

- விவசாயத்துறைக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- ஏற்றுமதி சந்தைகளில் இடம்பிடிக்க பழங்களை பயிரிடுவதற்காக 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு
- விவசாய களஞ்சியசாலைகள் வவுனியா-மன்னார்-கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்படும்
- விவசாயத்துக்கான இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படும்போது வரிக் குறைப்பு வழங்கப்படும்
- பால் பண்ணையாளர்களுக்கு ஒரு வீட்டுக்கு 10 மாடுகள் வழங்கத் திட்டம். இரண்டு சமுர்த்திப் பயனாளிகளை அவர் வேலைக்கு அமர்த்த வேண்டும்.
- ஒரு மெற்றிக் தொன் கரும்புக்கு 5 ஆயிம் ரூபா
- உயர் தரப் பால் மாடுகள் 15 ஆயிரத்தை இறக்குமதி செய்யத் திட்டம். 400 மில்லியன் ஒதுக்கீடு
- கோழிப் பண்ணையாளர்களுக்கு 15 ஆயிரம் குளிரூட்டி சாதனங்கள் வழங்கப்படும்
- கோழி இறைச்சியின் அதிகபட்ச மொத்த விலை 420 ரூபா
- மன்னாரிலும், அம்பாந்தோட்டையிலும் 500 மில்லியனில் மீன்பிடித் துறைமுகம்
- மீன்பிடித் துறையில் 163 பில்லியன் இலாபம் கிடைத்துள்ளது. இதனை ஐந்து மடங்குகளால் அதிகரிக்க நடவடிக்கை
- மீன்பிடி கைத்தொழிலுக்காக உட்கட்டமைப்பு, நங்கூர வசதிகளுக்காக ஆயிரத்து 350 மில்லியன் ரூபா
- மன்னாரில் உள்ள தாராக்குளம் புனரமைக்கப்படும்.
- தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு 74 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

  2020 ஆண்டளவில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தேயிலையை ஏற்றுமதி செய்யத் திட்டம்
- இறப்பர் பெருந்திட்டம் அறிமுகம் செய்யப்படும்
- இறப்பர் தொழிற்றுறையை அபிவிருத்தி செய்ய 900 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- கொக்கோ, கோப்பி, மிளகு, வெற்றிலை உற்பத்திகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

## வீடு - சமுர்த்தி

தனி வீட்டுத் திட்டத்தில் முதலில் 5 இலட்ச வீடுகள், மலையகத்துக்கு 25 ஆயிரம் வீடுகள்.

மாடி வீடுகளைக் கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு 40 சதவீதக் கடன்.

அரசுக்குச் சொந்தமான வீடுகளில் 10 வருடத்துக்கு மேல் தங்கியிருந்தால் வீடுகள் சொந்தமாக்கப்படும்.

சமுர்த்தி வேலைத் திட்டம், 'ஜன இசுறு' என்று பெயர் மாற்றப்படும். சமுர்திப் பயனாளிகளின் வருமானம் அதிகரிக்கப்படும்.

வடக்கு-கிழக்கில் வீடுகள் அமைக்க 5 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அடுத்த ஆண்டு வீடுகள். ஒரு லட்சம் வீடுகள் இவ்வாறு நிர்மாணிக்கப்படும்.

## போக்குவரத்து

- அதிவேக நெடுஞ்சாலை பகுதியில் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் வியாபார நிலையங்களை அமைக்க ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு. தனியார் துறைக்கும் அழைப்பு.
- தனியார் பேருந்துச் சேவைகள் 11 மணிவரை இயங்க வேண்டும்.
- பதுளையில் 15 உள்ளூர் விமான நிலையங்கள் அமைக்கப்படும்.
- நனோ நிறுவனங்களுக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வான்கள் 32 ஆசனங்களைக் கொண்டதாக அமைக்க வேண்டும். 150 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- முச்சக்கர வண்டிகளுக்கு புதிய கார்கள். இதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- ரயில் திணைக்களம் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை 2018 ஆம் ஆண்டு சுய வருமானத்தில் இயங்கும்.
- புகையிரத சேவையில் மீள்நிரப்பு அட்டை அறிமுகம்

## வர்த்தக, வாணிபம்

- தனியார் துறையினருக்கு 5 நாள் மற்றும் 45 மணி நேர வேலை.
- வணிக நிலையங் களைப் பதிவு செய்வதற்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- கடைகள் இரவு 11 மணி வரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.
- சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு கடன் வசதிகள் 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- 15 தொழிற்றுறை ஏற்றுமதி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.
- வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் 250 தொழில் வாய்ப்புகளை பெறுவதற்காக 300 மில்லியன் ரூபா முதலீடு.
- சிறப்பான முதலீட்டாளர்களுக்கு 5 வருடங்களுக்கான விசா.
- 500 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முதலீடுகளை மேற்கொள்ளுபவர்களுக்கு சிறப்பு ஊக்கச் சலுகை.
- வர்த்தக திணைக்களத்துக்கு 50 மில்லியன்.
- ஏற்றுமதிக் கிராமங்கள் 15 உருவாக்கப்படும்.

## கல்வித் துறைக்கான திட்டம்

கல்வித் துறைக்காக 90 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கல்.

அடுத்த வருடம் கல்விப் பொதுத்தராதர உயர் தரத்துக்கு தெரிவாகும் மாணவர்கள் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேருக்கும் மற்றும் உயர்தர கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்கள் 28 ஆயிரம் பேருக்கும் இலவச டெப் கணினி வழங்கப்படும்.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 21 ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 5 ஆயிரம் மில்லியன் உட்கட்டுமானத்துக்காக மேலதிகமாக வழங்கப்படும்.

பாடசாலைத் தளபாடங்களுக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த சகல வங்கிகளிலும் கணக்குகள் திறக்கப்படும்.

சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு 175 மில்லியன் ஒதுக்கீடு.

மாணவர்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான காப்புறுதி வழங்கத் தீர்மானம். இதற்காக 2 ஆயிரத்து 700 மில்லியன் ஒதுக்கீடு.

பல்கலைக் கழக மாணவர்களுக்கான வகுப்புக்கள் 8 மணிவரை நீடிக்கப்படும்.

2020 ஆம் ஆண்டு 50 ஆயிரம் பேரை பல்கலைக் கழகத்தில் இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பு.

பாலின வன்முறை மற்றும் பகிடிவதைகளை தடுப்பதற்கு பல்கலைக்கழகங்களில் சிறப்பு நிலையங்கள்.

பல்கலைக்கழகங்களில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு பன்னாட்டுத் தரத்தில் உயர் கல்வியைக் கற்பதற்கு புலமைப்பரிசில். இதற்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

பல்கலைக்கழக விளையாட்டு அலகுக்கு 100 மில்லியன் ஒதுக்கீடு.

றுகுணு பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குக் கராப்பிட்டிய வைத்தியசாலையில் புதிய கட்டடம் அமைக்கத் திட்டம்.

கேகாலை மற்றும் பதுளையிலுள்ள பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

250 மில்லியன் ரூபா செலவில் களனி பல்கலைக் கழகத்தில் மின் கற்றல் மையம்.

மாணவர்களுக்கு இலகுவாக அறிவைப் பெறுவதற்கு ஸ்மார்ட் வகுப்பறைகளைப் பெற்றுக் கொடுக்க 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா.

பத்தாயிரம் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு மேலதிகமாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா.

சிறிய வெட்டுப் புள்ளிகளால் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகாமல் இருக்கும் 15 ஆயிரம் மாணவர்களுக்குத் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வியை மேற்கொள்ள 8 இலட்சம் ரூபா வழங்கப்படும். இதற்கு 300 மில்லியன் ஒதுக்கீடு.

## சுகாதார அபிவிருத்தி

- சுகாதாரத் துறைக்கு 25 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.
- தேசிய அறக்கட்டளைக்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- பாலர் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு தவணையிலும் மருத்துவச் சோதனை.
- மருந்தகங்கள் பதிவு செய்யாவிட்டால் ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு
- தாதியர் பயிற்சி நிலைய மேம்பாட்டுக்கு 200 மில்லியன் ரூபா.
- யாழ்ப்பாணம், அம்பாறை, கராப்பிட்டிய வைத்தியசாலைகளில் சிறப்பு மகப்பேற்று நிலையங்கள் உருவாக்க ஆயிரம் மில்லியன் ரூபா.

## ஏனையவை

போர் வீரர்களுக்காக 3 ஆயிரத்து 500 மில்லியன்.

ஏரிஎம் இயந்திரத்தின் ஊடான பணக்கொடுப்பனவுக்கு 10 ரூபா அறவீடு.

இலங்கை புகையிலை நிறுவனத்தை 500 மில்லியன் ரூபாய் ஜனாதிபதி செயலகத்துக்கு வழங்குமாறு கோரிக்கை.

வணக்க தலங்களைப் புனரமைக்க 25 மில்லியன்.

நீதிமன்ற புனரமைப்புக்கு ஆயிரத்து 750 மில்லியன் ஒதுக்கீடு

வீடுகளுக்கு சூரிய ஒளிமின்கலம் வழங்கல்.

அக்கரகார காப்புறுதித் திட்டம் வாழ்நாள் முழுவதும் நீடிப்பு.

ஒரு நாளைக்கு 2 அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள். இதற்காக ஆயிரத்து 221 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக, 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

காலம்சென்ற பண்டித் அமரதேவவின் ஞாபகமாக கலைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கு 25 மில்லியன் ரூபா.

சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காண்பதற்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. சுகததாச அரங்கை புனரமைக்க 175 மில்லியன் ஒதுக்கீடு.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

ஊடகவியலாளர்களுக்கு தொழில்சார் உபகரணக் கொள்வனவுக்கு வரி விலக்குடனான கடன் வசதி.

தேசிய இளைஞர் அமைப்பு மற்றும் இளைஞர் படையணிக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

புதிதாக புத்த துறவியாகுபவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா புலமைப்பரிசில்

போதைவஸ்துக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வுக்காக பொலிஸ் துறைக்கு 150 மில்லியன் ரூபா. தேசிய இளைஞர்சேவைமன்றத்திற்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

அரச சேவையாளர்களுக்கான ஆயிரம் சேவை நிலையங்களை அமைப்பதற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

சிறு குளங்களின் புனரமைப்பிற்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

இரவு 9 மணியிலிருந்து அதிகாலை 5 மணி வரை அதிவேக நெடுஞ்சாலை கட்டணத்தில் 50 ரூபா குறைக்கப்படும்.

100 பொருள்களுக்கான தீர்வை குறைப்பு.

இணையத்தளத்தின் ஊடாக இடம்பெறும் வணிக செயற்பாடுகளுக்கு வரி.

இலத்திரனியல் மோட்டார் வாகனங்களுக்கான வரி குறைக்க தீர்மானம்.

நாட்டிலுள்ள பெரிய 100 தனியார் நிறுவனங்களை அரசுடன் இணைய கோரிக்கை.

இலங்கையின் பெயரைப் பிரபலப்படுத்த 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

தொழிநுட்ப இயந்திரங்களின் இறக்குமதிக்காக 75 சதவீத வரி நீக்கம்.

மெகாபொலிஸ்திட்டத்துக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் நோயாளிகள் சிகிச்சைக்காக செலவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட கரையோர மாவட்ட மக்களின் ஜீவனோபாய விருத்திக்கு ஆயிரத்து 200 மில்லியன் ஒதுக்கீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை அழிக்க உதவிய குடியரசுக் கட்சி ஆட்சியில்

## உவகையடைகிறார் மகிந்த



கொழும்பு, நவ. 11

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க உத விய குடியரசுக் கட்சி மீண்டும் அமெரிக்காவில் பதவிக்கு வந்திருப்பதையிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் மகிந்த வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

உங்களின் ஆட் சியில் எல்லா நாடுகளின் இறைமைச் சமத்துவக் கொள்கையின் அடிப்படையிலும், தேசிய அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிடாத வகையிலும் புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்குவதற்கு நாம் எதிர் பார்க்கிறோம்.

முன்னைய குடியரசுக் கட்சி நிர்வாகம், வழங்கிய இராஜதந்திர மற்றும் புலனாய்வு ஒத்துழைப்புகள், எனது அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்க உதவியாக இருந்தது என்பதை நன்றியுடன் நினைவு படுத்துகிறேன்.

உங்களது ஆட்சிக் காலத்தில் எல்லா வெற்றிகளையும் பெறுவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மகிந்த தெரிவித்துள்ளார். (த-5)

# நிரந்தர நியமனம் கேட்டு நடத்திய பேச்சுத் தோல்வி

## தொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்.மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணியாற்றும் தற்காலிக இணைப்பிலுள்ள தொழிலாளர்களின் நிரந்தர நியமன விடயம் குறித்து பலமுறை மாநகர சபை நிர்வாகத்துடனும் மாகாண சபை நிர்வாகத்துடனும் கலந்துரையாடி ஏமாற்றப்பட்டுள்ளோம்.

இவ்வாறு வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எம்மில் பலர் குடும்பத் தலைவர்கள். வயதானவர்கள். ஒட்டுமொத்தப் பணியாளர்களின் நலன்கருதி எமது சங்கம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளது. எமது பணியின் மகத்துவம் பொதுமக்கள் யாவரும் அறிந்ததே. பொதுமக்கள், வர்த்தகர் அனைவரினதும் சுகாதார நலன்கருதி தெரிந்து கொண்டும் இந்தக்கால நேரத்தில் புறக்கணிப்பில் ஈடுபடுவது சிலருக்குத் தவறாகத் தெரியலாம். எனினும் நிர்வாகத்தின் அசிரத்தை எவ்வித உத்தரவாதமும் தருவதாக இல்லை.

அதனால் தமது போராட்டத்தை தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பொதுமக்களின் அசௌகரியத்துக்கு வருந்துகிறோம். எனினும் எங்கள் நிலைபற்றியும் சிந்திப்பீர்களா? இதில் எவரும் தனிநபர் வருமான நோக்கோடு செயற்படவேண்டாம் என்பதையும், குழம்பிய குட்டையிலே மீன்பிடிக்க எத்தனிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (வ-4)

# உண்மைத் தகவல்களை ஆவணமாக்கல் அவசியம்

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்னாள் ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.11

உண்மைத் தகவல்களின் அடிப்படையிலான ஆவணத் தொகுப்புகள் பல வெளியிடப்பட வேண்டும். இப்படியான ஆவணங்களைத் தயாரித்துப் பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்குவதன் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.




பிரிட்டன் தமிழர் பேரவையின் 8 மாத ஆய்வின் வெளிப்பாடு கடந்த 5ஆம் திகதி அமெரிக்கத் தமிழ் சங்கத்தின் வருடாந்த நிகழ்வில் ஐ. நா மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் கலந்து கொண்டதுடன் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு ஆவணத்தின் முதல் பிரதியையும் பெற்றுக் கொண்டார்.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

காலத்தின் தேவை கருதிக் கொண்டுவரப்பட்ட முக்கிய ஆவணம் இதுவாகும். மேற்குலகின் கொள்கை முடிவெடுப்போர் மற்றும் ராஜதந்திரிகள் மத்தியில் தமிழர் தாயகத்தில் சமகாலத்தில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புப் பற்றிய விவரங்களை இந்த வெளியீடு ஆதாரபூர்வமாக -இலகுவாகப் புரிய வைக்கும் என்பதிலும் ஐயமில்லை-என்றனர்.

இந்த ஆவணத்தைத் தமிழர்கள் வாழும் முக்கிய நகரங்களில் தொடர்ச்சியாக வெளியிட்டு வைக்கப் பல அமைப்புகள் முன்வந்துள்ளன. இந்த ஆவணம் பிரிட்டனில் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவினருடன் இணைந்து பிரிட்டன் தமிழர் பேரவையினால் கடந்த ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்ற அரங்கினுள் வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன் ஆஸ்திரேலியா தமிழ் காங்கிரஸினால் ஆஸ்திரேலியாவிலும் வெளியிடப்பட்டது. (த-10-101)

# அரசியல் கைதிகளின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

அநுராதபுரம் சிறையிலுள்ள 2 அரசியல் கைதிகளின் வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு சுலக்சன், தர்சன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ராணுவத்தினரதும் கடற்படையினரதும் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தனர் என்று குற்றஞ்சாட்டி இன்றுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 2 பேரும் கடந்த பெப்ரவரியில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் 6 நாள்கள் ஈடுபட்ட நிலையில், சட்டமா அதிபர் திணைக்கள அறிவுறுத்தலின்படி, போராட்டம் கைவிடப்பட்டு குற்றப்பதத்திரம் தாக்கல் செய்வதாகக் கூறப்பட்டது. எனினும் அவர்களுக்கு எதிராக இன்னும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்நிலையில், அந்த வழக்கு சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக ஒத்திவைத்தது வவுனியா மேல் நீதிமன்று. வ-4)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 574
சீட்டிழுப்பு திகதி 2016.11.10
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
06 33 57 59 P
சுப்பர் ஜக்பொட்
ரூ.59,480,540 /=
நீல நிற டிக்கட்டுக்கள் 2016.11.12 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1313
சீட்டிழுப்பு திகதி 2016.11.10
வெற்றி இலக்கங்கள்
06 21 26 64 V
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,402,200/-

# சில பகுதிகளுக்கு இன்று மின்தடை

யாழ்ப்பாணம், நவ.11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் வாதரவத்தை, பெரிய பொக்கணை ஆகிய இடங்களிலும் - கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கோட்டைக்கட்டிய குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, முழங்காவில், வேரவில், வலைப்பாடு, 651ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், 2ஆவது அதிரடிப்படை முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்- வவுனியாப் பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்.




திருமதி
ஸ்ரீரஞ்சனி தெய்வேந்திரன்
(யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
04.11.2016 இல் 60 ஆவது அகவையைப்பூர்த்தி செய்து இளைப்பாறிய எமது இசை ஆசிரியை தனது ஓய்வு காலத்தில் நலமே வாழவும் இசைத்துறையில் மிளிரவும் இறைவனை வேண்டுதல் செய்வதோடு ஆசிரியருக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வலிகாமம் கல்வி வலைய இசை ஆசிரியர்கள்.
(4/23539)(19.20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## British College of Higher Studies
### வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

**Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான**

## A1 IELTS *Life Skills*

இப்பாடநெறியானது எளிதாகக் கற்கக்கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்றது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் **British High Commission** இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி.

***Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான***

## IELTS *(Academic / General)*

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன்கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
**இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.**

**Diploma in English 2½ Months**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. **Spoken English Course** முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக **(Audio & Video Visuals)** கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.
எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teacher's Panel & Individual Attention
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

No.15, Sirambiyadi Lane, (Off Stanley Road,) Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
**Tel: 021 222 4550 Hotline: 077 730 4545**


# ஜம சங்கார உற்சவம் இன்று

கோண்டாவில் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலய ஜம சங்கார திருவிழா இன்று மாலை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப வழிபாடு இடம்பெற்று மாலை 6 மணிக்கு ஜம சங்காரம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)


**சைக்கிள் மாறிவிட்டது**

கிளிநொச்சி கரடிப்போக்குக்கும், கனகபுரத்துக்கு மிடையில் இம்மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமையன்று லேடீஸ் சைக்கிள் ஒன்று மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர் சைக்கிளை மாற்றிக் கொள்ளவும்.

**077 482 6794**

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி, கச்சேரிக்குப் பின்பக்கம் (தூரம் 100 மீற்றர்) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

**077 770 6884, 077 959 1701**

**தவறிவிட்டது**

அளவெட்டி வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த வீரசேகரம் உதயசேகரன் என்பவரின் பெயரிலுள்ள BAA 4674 இலக்கமுடைய மோட்டார் வண்டியின் வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன கடந்த சனிக்கிழமை யாழ். நகருக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 9033 770**

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1995 இல் பிறந்த ரோகினி நட்சத்திரம் 3 ஆம் பாதம் மணமகளுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை.

**077 264 7292**


## வடக்கு மாகாண சபை- பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு தொடர்பான அறிவித்தல்

வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவிற்கு முறைப்பாடுகளை முன்வைப்பவர்கள் தங்களின் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இல என்பவற்றை முறையாகக் குறிப்பிட்டு கையொப்பமிட்டு " **தலைவர், பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு, பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை, A9 வீதி ,கைதடி** " என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ் விவரங்கள் இன்றி அனுப்பப்படும் முறைப்பாடுகள் மற்றும் முறைப்பாட்டுக் குழுவின் தலைவருக்கு முகவரியிடப்படாத முறைப்பாடுகள் அல்லது வேறு எவருக்கும் முகவரியிட்டு முறைப்பாட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும் பிரதிகள் தொடர்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என அறியத்தரப்படுகின்றது.

**பேரவைச் செயலகம்,**
**வடக்கு மாகாண சபை,**
**கைதடி.**
**10.11.2016**

**க.தெய்வேந்திரம்**
**செயலாளர்**




# யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ
# வீரகத்திப் பிள்ளையார் கோயில்
## புனராவர்த்தன உத்தம யாக நவகுண்ட (9)
## பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்
## 11.11.2016 வெள்ளிக்கிழமை



### மஹா கும்பாபிஷேக பிரதமகுருவின் ஆசியுரை

அத்தியடி எனும் ப்தியில் அழகுற அமர்ந்துள்ள அத்திமுகத்தனன் ஆலயப் புனர்நிர்மாணப்பணிகள் நிறைவுக்கு வந்து துர்முகி வருஷம் ஐப்பசித் திங்கள் 26.11.2016 வெள்ளிக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் தனு லக்சனமும் கூடிய காலை 09.02 - 10.31 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. எம் பெருமான் ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் அருள் அனைவருக்கும் கிடைக்க கும்பாபிஷேகத்தினைக் கண்டு இரட்சித்து இன்புற்று பிறவிப் பயனடைந்து சிறக்க குருவருளோடு இறையருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

**தேவஸ்தான பிரதமகுரு**
**சிவஸ்ரீ. யோகீஸ்வர சுபாஸ்கரக்குருக்கள்**



### ஆதீன முதல்வர் அருளாசிச் செய்தி

யாழ் அத்தியடிப் பகுதியில் எழுந்தருளி அருளாட்சி புரியும் சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் அத்தியடி மக்களுக்கு மட்டுமன்றி யாழ். குடாநாட்டு மக்களுக்கும் பெருமைக்குரிய ஆலயமாக அமைந்துள்ளது. விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக இக் கும்பாபிஷேகத்தைச் செய்யும் குருமாருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் அத்தியடிவாழ் சைவத் தமிழ் மக்களுக்கும் விநாயகருடைய அருள் கிடைப்பதாக!

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**

- கிரியைகள் ஆரம்பம்
  07.11.2016 (திங்கள்) காலை 5.30 மணி
- எண்ணெய்க் காப்பு சாத்துதல்
  10.11.2016 (வியாழன்) காலை 9.00 முதல் 5.00 வரை
- மஹா கும்பாபிஷேகம்
  11.11.2016 (வெள்ளி) காலை 9.02 மணி 10.31 மணிக்குள்

பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தை
பிரதம குரு சிவஸ்ரீ யோகீ சுபாஸ்கரக்குருக்கள் அவர்கள்
நடத்தி வைப்பார்கள்.



### ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்து

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண மாநகரின் அத்தியடிப் புனிதபதியில் கோயில் கொண்டு எழுந்தருளி திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய திருப்பணி யாவும் பொலிவுற நிறைவுற்று ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் இன்று சிறப்புற நடந்தேற வீரகத்தி விநாயகப் பெருமானை வணங்கி சகலருக்கும் அருளாசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாலயத்தை நீண்டகால நோக்குடன் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற நிர்வாகசபை தீர்மானத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் பெருநிதி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், நிதியுதவி வழங்கிய புலம்பெயர்ந்தும் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் பெருமக்களுக்கும், இன்றைய ஆலய வளர்ச்சிக்கு அடித்தளம் இட்ட முன்னோர்கள், ஈடுபாடு கொண்டு உழைத்த முன்னாள் நிர்வாகிகள், இன்றைய திருப்பணிகள் சிறப்புடன் நிறைவுற பணியாற்றி கும்பாபிஷேக விழாவையும் நடத்திக் கொண்டிருக்கும் அடியார்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள்பெற்று வாழ்வும் வளமும் கொண்டு நல்வாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**விநாயகமூர்த்தி ஸ்ரீ சக்திவேல், ஆலய பரிபாலன சபைத் தலைவர்.**



### ஆசிச் செய்தி

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் ஈழத்தமிழர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் இருந்து விடுபட்டு சுபீட்ச வாழ்வு பெற அருள் பாலிப்பாராக ஆலயங்கள் அறப்பணி மையங்களாகவும், சமூக சேவை மையங்களாகவும், பண்ணிசையை மேம்படுத்தும் நிலையங்களாகவும் திகழ வேண்டும்.கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற ஆசி வேண்டி எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருளையும் பூஜ்ய கிருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் குருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

விக்கினம் தீர்ப்பாய் வீரகத்தி விநாயகா!

**இறைபணியில்**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
**வதிவிட ஆச்சார்யார்சின்மயா மிஷன்,நல்லூர், யாழ்ப்பாணம்.**

**பிள்ளையார் பணியில் நிற்கும்**
**கோயில் நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கந்தரோடை
அருளானந்தப்பிள்ளையார்
கோயிலடியைச் சேர்ந்த
சிவஸ்ரீ. ப.ஜெயகுமாரக்குருக்கள்
உஷாதேவி
தம்பதிகளின் புதல்வன்

**ஜெ.ராஜீவன்**

அவர்கள் (08.11.2016) அன்று
Colombo Kings Bury
ஹோட்டலில் இடம் பெற்ற
Pioneer Institute of Business in and Technology இன் பட்டமளிப்பு
விழாவில்
BSc(Hons) Computer System & Net working(University of Greenwich)
பட்டம் பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர் -



# Fashion Beauty Corner

(CENTER OF MODERN WOMEN)

முதல் முறையாக கிளிநொச்சி மண்ணில்

12ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு பெண்களுக்கு உதவும் நோக்குடன் விஷேட சலுகைகள் வழங்கப்பட்டு இருநாள்கள் இலவச கருத்தரங்கு நடைபெற இருப்பதனால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

Date : Nov 14 - 15
Time : 8.00 am - 4.00pm
Venue : கருணா நிலையம், ஏ9 வீதி, கிளிநொச்சி.

16 hours of makeup training

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் விரைவில் தொடர்புகளை மேற்கொள்ளுங்கள்.
கருத்தரங்கு முடிவடைந்தவுடன் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறும்.

**Day 1** – 14th Nov
- Gold Facial
- Whitening Facial
- Straightening
- Pimple Treatment
- Wats remoal

**Day 2** – 15th Nov
- Bridal Makeup
- Hair Cutting
- Hair Styles

இல.43, ஆடியபாதம் வீதி, (NSB வங்கிக்கு முன்னால்) திருநெல்வேலி

To Contact - Mrs. Jeyavani (vani)
Diploma in Aromatharapy & Spa (Srilanka), (India)- 021 320 3514

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

# பதவி வெற்றிடம்

**களஞ்சிய பற்றுச்சீட்டு (Warehouse Receipt) நிதிக்கருவி செயற்திட்டம்**

நிதி அமைச்சின் களஞ்சியசாலை பற்றுச்சீட்டு (Warehouse Receipt) நிதிக்கருவி செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள மன்னார்- முருங்கன் அரச தானிய களஞ்சியம் மற்றும் தற்பொழுது இயங்கி வரும் அநுராதபுரம் - உடுல்தெனிய தானிய களஞ்சியம் ஆகியவற்றில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் தகுதிவாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | தகுதி | வெற்றிடங்கள் எண்ணிக்கை | நிலையம் |
|---|---|---|---|
| களஞ்சியசாலை பொறுப்பாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற டிப்ளோமா. களஞ்சியபடுத்தல் சம்பந்தமாக 05 வருட அனுபவம். அறுவடைக்குப் பிந்திய களஞ்சியப்படுத்தல் பற்றிய அனுபவம் விசேட தகுதியாக கருதப்படும். வயதெல்லை - 30 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 02 | மன்னார்- முருங்கன் மற்றும் அநுராதபுரம் - உடுல்தெனிய |
| கணக்கு இலிகிதர் | க.பொ.த. (உ/த) சித்தி,கணக்கியல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், உரியதுறையில் 03 வருட அனுபவம். வயதெல்லை - 28 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | மன்னார் முருங்கன் |
| பட்டியல் இலிகிதர் | க.பொ.த. (உ/த) சித்தி, உரியதுறையில் 02 வருட அனுபவம். வயதெல்லை - 28 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 02 | மன்னார் முருங்கன் மற்றும் அநுராதபுரம் உடுல்தெனிய |
| ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.(உ/த) விஞ்ஞான துறையில் சித்தி, உரியதுறையில் 02 வருட அனுபவம். வயதெல்லை - 28 . வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | மன்னார் முருங்கன் |
| பாரந்தூக்கி இயக்குனர் (Forklift operator) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற தொழில்சார் நிபுணத்துவ சான்றிதழ். உரியதுறையில் 02 வருட அனுபவம். வயதெல்லை - 35 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | மன்னார் முருங்கன் |
| தொழிலாளர் | உரியதுறையில் அனுபவம், வயதெல்லை - 40 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 02 | மன்னார் முருங்கன் |

நிபந்தனைகள்-
- ★ விண்ணப்பப் பத்திரங்கள் 2016 /11 /25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
- ★ களஞ்சியசாலை அமைந்துள்ள மாவட்டத்தில் நிரந்தர பதிவுடையவராக இருக்கவேண்டும்.
- ★ வருடாந்த புதுப்பித்தலின் அடிப்படையில் 05 வருட ஒப்பந்த காலத்திற்கு மேற்படி பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- ★ சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றி பேசித்தீர்மானிக்கப்படும்.
- ★ விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின்இடது பக்க மேல்மூலையில் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி
பிரிவுத் தலைவர்- மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்,பிரதேச அபிவிருத்தி வங்கி,இல.933,கண்டிவீதி,வெதமுல்ல,களனி.

# மண்ணின் மகளின் மாண்புறு மணிவிழா - 13.11.2016




உயர் திருமதி
## உதயராணி முனீஸ்வரன்
(இலங்கை கல்வி நிர்வாக சேவை)
(வலயக்கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு கல்வி வலயம்)

### நாளையும் நீவீர் எம் நிழல்

கருமுகில் வானம் திரை கடலள்ளிப் பொழியும்
கருணை சூழ் வதனமே கவர
தரு நிழல் விருட்சம் தாங்கிய கிளைகளால்
தனிப்பெரும் அறிவொளி பரவ
வருபகை குளிருற வகையுடை வார்த்தைகள்
வானவர் பண்மொழி நிரவ
கருவெனக் கடுந்தனம் கவசமாய் நிமிருயர்
கல்விக் குடும்பத்து முல்லை வலய
அருகமர் அயல்வராய் ஆற்றுதற் புலமையால்
அளப்பரு " கருமத்திருதி " காண் திருவே !

நாதமாய் நேர்மையும் நிதம் நாவுறையுண்மையும்
நேரிடப் பேசிடும் நிகர் திகழ
கீதப்பண் தமிழிசை பெருங்கீர்த்தி செய் கிரீடமாய்
கேடில் விழுச்செல்வம் நிறைந்தருளி
ஓதிய திருமறை யாயிரமுடன் – ஓங்காரப் பொருளீந்த
ஓப்பிலா உயர்வுகள் உச்சமாய் நீள
வாதினால் வென்று மேவுறும் வளங்களைக் கல்வியுள்
வான் நிகர் தூறலாய்ப் பொழிந்து
யாதிடர் நேரினும் யாரெதிர் பகைக்கினும் – நிமிர்ந்து
" யாவர்க்குமாங் கல்வி " ஈந்த பேரொளியே !

ஆழ்ந்து மண் கிளறும் ஏர் முனைக் கூரால்
அறிவுடைக் குழந்தைகள் செய்யும்
சூழ்ந்து கண் காக்கும் சுழல் இமைப் பேறாய்
கடும் போரிடர் நாளிலும் போர்த்து
வீழ்ந்திடும் போதிலும் தலைகவிழ்ந் தெரிந்திடா
வான் நிமிர் சுடர்களை வார்த்தும்
வாழ்ந்திடும் மனிதருள் வரலாற்றுப் பேழையாய்
வற்றிடாப் புகழ்பணி கூர்த்த
தாழ்ந்திலா தோள்களால் எமைத்தாங்கிய பேரன்பில்
தாயுனை வாழ்த்தினோம் – வாழீ !!

வலயக்கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு.

(C 23538)
(14,17,18)

நிறைந்த அன்புடன்
கல்விப்பணியாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைத் தூண்டும் நல்லாட்சி அமைச்சர்கள்

## கிழக்கு முதலமைச்சர் கண்டனம்



திருமலை, நவ.11
இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களைக் கூறி இன முறுகல்களை ஏற்படுத்தும் விதமாகப் பேசும் அமைச்சர்கள் நீக்கப்படவேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர்ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.


இனங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் கருத்துகளை நல்லாட்சியில் உள்ள அமைச்சர்களே கூறுவது கண்டிக்கத்தக்க விடயமாகும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு - கல்குடா தொகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இதனைக்கூறினார்.

அமைச்சரொருவர் இனவாதத்தை ஏற்படுத்தும் விதமாகப் பேசுவது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் செயற்பாடுகளை பன்னாட்டு தேசரீதியில் அபகீர்த்திக்கு உள்ளாக்கும். எனவே, அவ்வாறானவர்களை உடனடியாக நீக்கவேண்டும். இவ்வாறு செய்வது இனவாதம் பேச முற்படும் ஏனைய அரசியல்வாதிகளுக்குப் பாடமாக அமையும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.(து-ய-45)

# நாட்டைச் சீரழிக்க சிலர் தீவிர முயற்சி

## ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 11
தேசிய நல்லிணக்கத்தை ஏற் படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளைச் சிலர் புரிந்து கொண்டிருந்தாலும் அதனைப் புரிந்து கொள்ள முடியாத சிலர் நாட்டினுள் பழியுணர்வையும் குரோதத்தையும் விதைத்து நாட்டைச் சீரழிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் புகழ்பூத்த சமூக சேவையாளரான சர்வோதய இயக்கத்தின் நிறுவுநர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன அவர்களது 85 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ராவத்தாவத்த, மொரட்டுவ சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒழுக்கமும் ஐக்கியமும், நற்பண்பும், ஒற்றுமையும் இன்றியமையாததெனச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்காகவே எப்போதும் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கம் எனும் சொற்பதத்தைப் பெரும்பாலானோர் கேலியாக்கி விமர்சித்தபோதிலும் அந்தச் சொற்பதம் யதார்த்தமாவதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது -என்றார்.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் முன்மாதிரியாகச் செயற்பட்ட ஏ.ரி.ஆரியரத்னவின் சமூகப்பணியை ஜனாதிபதி பாராட்டியதுடன் அவரது 85 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சிறப்பு நினைவுப் பரிசினையும் இதன்போது வழங்கினார். (த-5)

# கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, நவ.11
மட்டக்களப்பு - கொம்மாதுறைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மூன்று கைக் குண்டுகள் மீட்கப்பட்ட தாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கொம்மாதுறை தீவுப் பகுதியில் பனை மரமொன்றுக்கு அருகில் கண்ணாடிப் போத்தலில் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்த கைக் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலிஸார் கைக் குண்டுகளைச் செயலிழக்கச் செய்ய இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளதாகத் தெரிவித்தனர்.

(த-ய-47)

# நாடாளுமன்றத்தில் எளிமையாக நடந்துகொண்டார் மைத்திரிபால

கொழும்பு, நவ. 11
நாடாளுமன்றில் நட்சத்திரவிடுதிக்குரிய தரத்தில் உணவு கிடைக்கின்றபோதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வீட்டிலிருந்து உணவு கொண்டு சென்று மதிய நேர உணவை உட்கொண்ட சம்பவம் பலரையும் ஆச்சரியப்படுத்தியது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் எளிமையானர் என்ற நன்மதிப்பை பெற்றுள்ளநிலையில், அதனை மேலும் நிரூபிக்கும் வகையில், நேற்று அவர் அவ்வாறு செயற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் வரவு - செலவுத்திட்டம் தொடர்பான சிறப்பு அமர்வு நேற்று ஆரம்பமானது. அதில் ஜனாதிபதியும் கலந்து கொண்டார்.



இதேவேளை, நேற்று சபையில் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் பெரும் விமர்சனத்துக்குட்பட்ட போதும் ஜனாதிபதியின் இந்தச் செயலை தென்னிலங்கை ஊடகங்கள் முதன்மைப்படுத்தி உள்ளன. (வ-4)

# யாழ்ப்பாணத்தில் நேற்று ரவிராஜுக்கு நினைவஞ்சலி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்து சுட்டுக் கொல்லப்பட்ட நடராஜா ரவிராஜின் 10ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து முன்னணி அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசினால் 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜ், 10ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.கந்தர்மடம் மணல்தரை வீதியில் உள்ள அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் பொருளாளர் ஸ்ரீ கிருஸ்ண குமார் மற்றும் ஆங்கில ஆசிரிய பயிற்றுவிப்பாளர் கோபாலகிருஸ்ணன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரவீந்திரன் ஆகியோர் நினைவுச் சுடர்களை ஏற்றினர். முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர்மாலை அணிவிக்க கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்களும் மாமனிதருக்கு மலர்தூவி வணக்கம் செலுத்தினர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசியல் ஆய்வாளர் சி.ஜோதிலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர் - என்றுள்ளது. (வ-4)

வாடகைக்குண்டு
திருநெல்வேலிக்கு அருகில் அனைத்து வசதிகளுடன் தனியார் கல்வி நிலையம் வாடகைக்கு உண்டு.
முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு - 076 991 2971 (நிரோஜன்)
(ஜெ6032)(17.19.20)

வாகனங்கள் வாடகைக்கு உண்டு
அனைத்து விதமான பொருள்களும் யாழ்ப்பாணம் முழுவதுக்கும் குறைந்த விலையில் விநியோகம் செய்து தரப்படும்.
பயணங்கள், விநியோகங்களுக்கு தேவையான வாகன வசதிகளும் எம்மிடம் உண்டு.
தொடர்பு: 077 3895395
(J 6033) (16,19)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
கபிரியேல் றொற்றிக்கோ மதியாபரணம்
பிறப்பு
18.07.1941
இறப்பு
11.11.2015

மண்ணுலகில் தந்தையாய் வாழ்ந்தீர்
விண்ணுலகில் இறைவன் பாதம்வாழ
என்றும் வேண்டுவோம்.
நெடுந்தீவு -10.
குடும்பத்தினர்.
(J 6036) (16,19)

# கைதான சந்தேகநபர் பொலிஸாரைத் தாக்கி தப்பியோட முயற்சி

போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டவர், பொலிஸ் உத்தியோகத்தரைக் கடித்துவிட்டுத் தப்பியோட முற்பட்ட சம்பவம் யாழ். நகரில் நேற்று இடம்பெற்றது.

4 கிராம் குடு போதைப் பொருளைஉடமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சுமத்தி கொக்குவிலைச் சேர்ந்த ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர். அவரைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லமுற்பட்டபோதே பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கடித்துக்குதறி விட்டு அவர் தப்பிச் செல்ல முற்பட்டார். எனினும் சக பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்துகின்றனர். காயப்பட்ட பொலிஸார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-4,106)

# டிரானுக்கு பிணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் உட்பட மூவரை 5 இலட்சம் ரூபா ரொக்க பிணையிலும் 25 இலட்சம் ரூபா 4 சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. ராடா நிறுவனத்தின் ஊடாக அரசநிதியை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், டிரான் அலஸ் உள்ளிட்ட மூவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று பிணையில் விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# நீதிமன்றில் சத்தமிட்டவருக்கு சமூகப்பணி ஈடுபட உத்தரவு

சாவகச்சேரி, நவ. 11
நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சத்தத்துடன் சோம்பல் முறித்த நபரை 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் கடந்த 27ஆம் திகதி வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வழக்கு விடயமாக காத்திருந்த கொடிகாமம் நபர் திடீரென எழுந்து திறந்த மன்றில் கைகளை விரித்து சத்தத்துடன் சோம்பல் முறித்தார். நீதிமன்ற நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கும் (அமைதியைக் குலைக்கும்) வகையில் செயற்பட்டமைக்காக நீதிவானின் பணிப்பின் பேரில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நீதிமன்றப் பொலிஸார் முயன்றபோது, அவர் மதுபோதையில் காணப்பட்டதால் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் சாவகச்சேரி வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் மதுபோதையில் காணப்படுகிறார் என மருத்துவ அதிகாரி அறிக்கை வழங்கினார். அதனையடுத்து பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். நேற்று வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விசாரணையின் பின்னர் அவரை 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப்பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (வ-4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

“மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம்
ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை.”

- கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்).

கார்த்திகை
01-30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்”



## சிறப்பாக செயற்பட்ட சதுரங்கவுக்கு பரிசு

கிளிநொச்சி, நவ.11
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சத்துரங்க மிகவும் சிறப்பாகச் செயற்பட்ட, சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சிறப்பு பொலிஸ் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி-முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன தெரிவித்தார்.
கிளிநொச்சிப் பொலிஸாரின் கடமைக்கான ஊக்குவிப்புப் பரிசு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்ட வழக்குப் பதிவுகளின் அடிப்படையில் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மிகவும் சிறப்பாக செயற்பட்டு முதல்நிலையில் உள்ள தருமபுரம் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி டி.எம் சத்துரங்கவுக்கு அறுபதாயிரம் ரூபாவுக் மேலான பணத் தொகை பரிசாக வழங்கப்படுகின்றது - என்று அவர் குறிப்பிட்டார். (ரு-21,34,35)

# ஏ.ரி.எம். அட்டை தயாரித்து சூட்சுமமாக திருடிய கும்பல் வவுனியாவில் சிக்கியது





வவுனியா, நவ.11
ஏ.ரி.எம். இயந்திரங்களில் உபயோகிக்கும் ஏ.ரி.எம். அட்டைகளின் இரகசிய இலக்கங்கங்களைக் கண்டறித்து, போலி அட்டைகளைத் தயாரித்து கொள்ளையில் ஈடுபட்ட நால்வர் நேற்று வவுனியாவில் பொலிஸாரால் மடக்கப்பட்டனர்.
வவுனியாவில் அண்மைக்காலமாக ஏ.ரி.எம். இயந்திரங்களின் ஊடாகப் பணம் கொள்ளையிடப்படுகின்றது எனப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.
வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி எஸ்.ஐ. பெரேரா தலைமையில் பொலிஸ் குழு இரகசிய விசாரணைகளில் இறங்கியது.
ஏ.ரி.எம். இயந்திரங்களின் செயற்பாடுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. அதையடுத்து பாதுகாப்புக் கமராக்கள் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டன.
நேற்று வவுனியா நகரப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றின் ஏ.ரி.எம். கூட்டுக்குள் ஒருவர் புகுந்தார். ஏ.ரி.எம். இயந்திரத்தில் இருந்து கண்ணாடி போன்ற பொருள் ஒன்றை உரித்து எடுத்துக் கொண்டு, வேறொன்றைப் பொருத்தினார். பாதுகாப்புப் கமராவில் இந்த நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் குறித்த நபர் அந்த இடத்திலேயே மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

> “நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிறிய உபகரணம் ஒன்று ஏ.ரி.எம். இயந்திரத்தில் பொருத்தப்பட்டு வாடிக்கையாளர்கள் வங்கி அட்டையைப் பயன்படுத்தும்போது அவற்றின் இரகசிய இலக்கங்களைப் பெற்று இந்த மோசடி நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.”

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் ஏனையோர் சிக்கினர்.
நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிறிய உபகரணம் ஒன்று ஏ.ரி.எம். இயந்திரத்தில் பொருத்தப்பட்டு வாடிக்கையாளர்கள் வங்கி அட்டையைப் பயன்படுத்தும்போது அவற்றின் இரகசிய இலக்கங்களைப் பெற்று இந்த மோசடி நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. வங்கி அட்டையின் இரகசிய இலக்கங்களைப் பெற்று போலியான அட்டைகளைக் குறித்த நபர்கள் தயாரித் துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
வவுனியாவைச் சேர்ந்த இருவரும், ஆஸ்திரேலியாவில் வசித்த ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியாவைச் சேர்ந்த இருவரில் ஒருவர் வெளிநாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர் என்று தெரியவருகின்றது.
அவர்களிடம் இருந்து ஏ.ரி.எம். இயந்திரத்தில் பொருத்தும் உபகரணங்கள், மிகச் சிறிய கமரா, இலத்திரனியல் அட்டைகள் உட்படப் பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கைதானவர்களில் ஒருவர் மிகச் சிறந்த முறையில் தொழில்நுட்பங்களைக் கையாளக் கூடியவர் என்று தெரியவருகின்றது.
விசாரணைகளின் பின்னர் கைதானவர் வவுனியா நீதிவான் மன்றில் முற் படுத்தப் படுவர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ரு-21)



யாழ். மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் 127 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கடந்த 7ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பு நடத்தப்படுகின்றது. சுகாதாரத் தொழிலாளர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் முன்வைக்கும் கோரிக்கை [illegible] வேண்டும் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் [illegible] வரைக்கும் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபடுவார்கள் தெரிவித்தனர். யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் கழிவுகள் தேங்கியுள்ளன. (ரு-7)



## இடர் முகாமைத்துவ ஒத்திகை

அம்பாறை - கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் இடர் முகாமைத்துவ ஒத்திகை நிகழ்வொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பாண்டிருப்பு தாளவட்டவானில் நடை பெற்றது. இதன்போது முப்பதுக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிவந்த பஸ்ஸொன்றும் கனரக வாகனமும் நேருக்குநேர் மோதுண்டு விபத்துக்குள்ளாவது போன்று ஒத்திகை இடம்பெற்றது. இவ்விபத்தானது வீதியால் சென்ற அனைவரையும் ஒரு கணம் திகைப்பில் ஆழ்த்தியது. (சு-யு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்பு வீணானது

## ட்ரம்பின் வெற்றி குறித்து தயான் ஜயதிலக கருத்து



கொழும்பு, நவ. 11

ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தால், இலங்கைக்குப் பெரும் பாதிப்பாக அமைந்திருக்கும். ட்ரம்பின் வெற்றியால் வடக்குத் தமிழர்களின் பெரும் எதிர்பார்ப்பு வீண்போயுள்ளது என அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனல்ட் டிரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இலங்கையின் உறவில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இவரது பெரும்பாலான நடவடிக்கை இலங்கைக்கு சிறந்ததாக அமையும். ட்ரம்புக்கு எதிராகப் போட்டியிட்ட ஹிலாரிக்கு, புலம்பெயர் தமிழர்கள் அதீத ஆதரவை வழங்கினர். இந்த வகையில், ஹிலாரி ஜனாதிபதியாகத் தெரிவாகி யிருந்தால், இலங்கைக்குப் பெரும் பாதிப்பாக அமைந்திருக்கும். ட்ரம்பின் வெற்றியால் வடக்கு தமிழர்களின் பெரும் எதிர்பார்ப்பு வீண்போயுள்ளது.

ட்ரம்பின் வெற்றி, இலங்கை அரசியலுக்குச் சிறந்த பாடமொன்றை சொல்லித் தருகின்றது. இலங்கையின் தற்போதைய அரசு கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற வெற்றிக்குப் பயன்படுத்திய உபாய முறைமைகள், அமெரிக்காவில் தோல்வியில் முடிவடைந்துள்ளன. சிறுபான்மையினரை இணைத்துக் கொண்டு வெற்றிபெறலாம் என்ற எதிர்பார்ப்பு அமெரிக்காவில் தோல்வியடைந்துள்ளது. சந்திரிகா பயன்படுத்தி வருவதும் ஹிலாரியின் அணுகுமுறையையே ஆகும் -என்றார். (த)

# தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக ஆட்சிக்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தலைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கோகுலம், இல .90, ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு அலுவலகத்தில் இடம்பெறவுள்ள இந் தக் கூட்டத்தில் நாவலர் விழா ஒழுங்குகள், அங்கத்தவர் இணைப்பு பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# பௌர்ணமி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 11

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் இந்த மாதத்துக்கான பௌர்ணமிக் கலந்துரையாடலானது எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்று சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் தெரிவித்தனர்.

இல-62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

2017 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் வரவு - செலவுத் திட்டமும், அதன் சமூக பொருளாதார அரசியல் தாக்கங்களும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சமூக, விஞ்ஞான, அறிவியல், கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (வ-10)

# சூழலை பாதுகாக்கும் பன்னாட்டுத் தினம்

யாழ்ப்பாணம், நவ. 11

இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்கான பன்னாட்டு போராட்ட தின பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பொதுக் கூட்டமானது, இல. 62, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சிறப்பு உரைகளை பேராசிரியர் சி. சிவசேகரமும், எழுத்தாளர் க. தணிகாசலமும் சமூக நீதிக்கான பொதுஜன அமைப்பின் செயலாளர் ச. தனுஜனும் ஆற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# கஞ்சா வைத்திருந்தவர் பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி நவம் 11

54 கிராம் கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த 21 வயது இளைஞரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்தனர். அவரை ஆள் பிணையில் விடுவித்தது சாவகச்சேரி நீதிவான் மன்று.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சாவகச்சேரி – தனங்களப்பு வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞரை சோதனையிட்டபோது, அவரிடம் 54 கிராம் கஞ்சா இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞரை நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது, அவரைத் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்து, வழக்கை ஒத்தி வைத்தார். (வ-9)

# வலி.மேற்கு கலாசார பெருவிழா இன்று

சங்கானை, நவ.11

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வலி. மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான அ. சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், யாழ். மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் முதன்மை விருந்தினராகவும், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் சிறப்பு [illegible] கொள்வர். நிகழ்வில் [illegible] டும் இடம்பெறும் என்று விழா ஏற்பாடளர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# அட்டூழியம் செய்த கும்பலில் மூவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, நவ. 11

யாழ்ப்பாணம், மட்டுவில் பகுதியில் வாள்களுடன் அட்டூழியம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

நுணாவில் மற்றும் மட்டுவில் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பத்து மோட்டார் சைக்கிள்களில் சென்ற 20 பேர் கொண்ட கும்பல் வாள்கள் மற்றும் கோடரி பொல்லுகளுடன் வீதிகளில் அட்டகாசம் புரிந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக நுணாவில் மத்தியில் அந்தக் கும்பலின் அட்டூழியத்தைக் கண்ட ஊர் இளைஞர்கள் திரண்டுள்ளனர். இதனால் அங்கிருந்து தப்பித்த கும்பல் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியில் அட்டகாசம் புரிந்துள்ளது. அந்தவேளையில் பொலிஸார் அங்கு சென்றபோது, வாள் மற்றும் கோடரியைக் கைவிட்டு கும்பல் தப்பியோடியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைதடிப் பகுதியைச் சேர்ந்தவர்களென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததையடுத்து, கைதடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார், நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது மேலும் இருவர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் மூவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை மிருசுவில் பகுதியில் அட்டகாசம் புரிந்த கும்பல் ஒன்று அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளது. படுகாயங்களுக்கு இலக்கான நபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது வாக்குமூலத்தைப் பெற்ற கொடிகாமம் பொலிஸார், ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவரையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

மேலும் பொல்லுகளால் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,9)

# சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 11

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொதுநூலகத்தின் பன்னாட்டுச் சிறுவர் தின நிகழ்வும் சிறுவர் நூல் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நிகழ்வானது வலி.தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் பொதுநூலக நூலகர் ம.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபை செயலர் தி.சுதர்சன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# சமய தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.11

சைவபரிபாலன சபையினால் நடாத்தப்படும் சைவசமய தீட்சை இன்றையதினம் மு.ப. 8 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. தீட்சை பெறவிரும்புவோர் கலந்து கொள்ள முடியும் என்று சைவபரிபாலன சபை அறிவித்தது. (வ-8)

# உலக நீரிழிவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.11

உலக நீரிழிவு தினத்தையொட்டி எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் உலக நீரிழிவு தின நிகழ்வுகள் முற்பகல் 10 மணியளவில் யாழ். நீரிழிவு அமைப்பின் தலைவர் தி.மைக்கேல் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நீரிழிவை வெற்றி கொள்வோம் என்ற நூலும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றுவதற்காக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.சுரேந்திரகுமார், யாழ் போதனா வைத்திய சாலை மருத்துவர் எம்.அரவிந்தன், யாழ். மாநகர சபை சுகாதார மருத்துவஅதிகாரி பொ. ஜெசிதரன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் நவ 11

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அருணாச்சலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் கே.கிரிஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ரவீந்திரன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வைத்தியசாலையில் குருதிக் காப்பகம்

சாவகச்சேரி, நவ.11
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுதல் குருதிக் காப்பகம் இயங்க ஆரம்பித்தது.
குருதிக் காப்பகத்துக்குரிய வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றிருந்த போதும் கட்டட வசதி இல்லாததால் குருதிக் காப்பகம் சாவகச்சேரி வைத்தியசாலை யில் அமைக்கப் படாதிருந்தது.
வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து வைத்தியசாலையில் உள்ள விடுதி ஒன்றில் குருதிக் காப்பகத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான உபகரணங்கள் கொண்டு வரப் பட்டு யாழ். போதனா வைத்தியசாலை குருதிக் காப்பகத்தினரால் அவை பொருத்தப்பட் டன.
நேற்றுமுதல் குருதிக் காப்பகம் இயங்க ஆரம்பித்தது. 52 ஆவது படையணியைச் சேர்ந்தவர்கள் நேற்று குருதிக் கொடை வழங்கினர். குருதிக் கொடை வழங்க விரும்புவோர் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு குருதிக் கொடை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மகிந்தவின் அணியே கலகத்துக்கு காரணம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ 11
ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக குழப் பத்தை தோற்றுவித்த அவயவங்களை இழந்த ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்களுக்குப் பின்னால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களே சதி செய்திருப்பதாக இராஜாங்கப் பாதுகாப்பு அமைச்சர் ருவன் விஜேவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.
ஒன்றிணைந்த எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கைகோர்த்திருக்கும் சில பௌத்த பிக்குமார்களும் இந்தக் கூட்டுச் சதிக்கு உடந்தை என்றும் அவர் குறிப்பிட்டார்.
அவயவங்களை இழந்த ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய்கள் அண்மையில் தொடர் போராட்டத்தை அடுத்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கூச்சலிட்டு, குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர்.
குழப்பகரமான நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.
இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத் தில் நடைபெற்றது,
இதன்போது உரையாற்றிய இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ருவன் விஜேவர்தன,
ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்கள் மீதான பொலிஸாரின் நடவடிக்கை குறித்து கவலை யடைகின்றேன்.
எனினும் முன்னாள் இராணுவச் சிப்பாய் களின் இந்த நடவடிக்கைக்குப் பின்னால் ஒன்றிணைந்த எதிர்கட்சியிலுள்ள சில நாடாளு மன்ற உறுப்பினர்களும், அவர்களுடன் இணைந்திருக்கும் கடும்போக்கு பௌத்த பிக்குகளுமே சதி செய்துள்ளனர்.
ஓய்வூதியக் கொடுப்பனவுக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்ட அடுத்த நொடி யில் குழப்பத்தை ஏற்படுத்தாமல் ஆர்ப்பாட் டத்தை கைவிடும்படி வாய்மூலமாகவும், எழுத்து மூலமாகவும் முன்னாள் இராணுவச் சிப்பாய்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஒன்றுகூடிய சூழ்ச்சிக்காரர்கள், அவயவங்களை இழந்த ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்களுக்குப் பதிலாக வேறொரு தரப்பினரை அனுப்பிக் கலகத்தை ஏற்படுத்தினர்–என்றார். (தி)

## வீட்டில் கள் விற்றவருக்கு 23,000 ரூபா தண்டம்

தென்மராட்சி, நவ.11
அதிகாரிகளின் அறிவுரையை உதாசீனப்படுத்தி வீட்டில் வைத்துக் கள் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் 23 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் வீட்டில் வைத்து தினமும் கள் விற்பனை செய்யப்படுகின்றது என்று கிராம அலுவலருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து வீட்டில் வைத்துக் கள் விற்பனை செய்யவேண்டாம் என்று கிராம அலுவலர் பல தடவைகள் அறிவுரை கூறியுள்ளார்.
ஆயினும் தொடர்ச்சியாக வீட்டில் கள் விற்பனை செய்த நபர் சாவகச்சேரி மதுவரி நிலைய அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தர விட்டது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் பிரிவு கிராம அலுவலரின் அறிவுரையை அனுசரிக்கத் தவறியமைக்கு 20 ஆயிரம் ரூபாவும் வீட்டில் அனுமதியின்றி கள் விற்பனை செய்தமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார். (ற-9)

# எம்மை நாமே பரிபாலிக்க அரசியல் யாப்பில் இடம்

## வழங்க வேண்டும் என்கிறார் வடக்கு முதலமைச்சர்

முல்லைத்தீவு, நவ.11
எம்மையும், எமது பாரம்பரியங்களைப் பாதுகாத்து எம்மை நாமே பரிபாலிப்பதற்கு அரசியல் யாப்பு இடமளிக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.
பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட - போரால் பாதிக்கப்பட்டதுமான குடும்பங்களுக்கான சுயதொழில் வாழ்வாதார உதவித் திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே வடக்கு முத லமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித் ததாவது–



கொடிய போரால் இருப்பை இழந்து பொருள், பண்டங்களை இழந்து, வீடு, காணி, நீர் நிலைகள் என அனைத்தையும் எம் மக்களில் பலர் இழந்துள்ளார்கள். பலதரப்பட்ட கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களில் குடியமர்ந்து வாழ்வதற்கு அடிப்படை உதவிகள் ஏதும் அற்ற நிலை யில் அல்லல்படுவதை நாம் நன்கு அறிந்துள் ளோம். வடக்கு மாகாண சபையின் நிதியில் இருந்து சிறிய உதவி களையாவது வழங்க நாம் முன் வந்தாலும் அனைவருக்கும் வழங்குவதற்கு அந்த நிதி போதாது. போரால் பாதிக்கப்பட்ட பெண் தலை மைத்துவக் குடும்பங்களுக்காவது ஏதாவது வகை யில் உதவிகளைப் புரிய வேண்டும் என்ற நோக்குடனேயே இன்று இந்த உதவிகளை வழங்குகின் றோம். சுமார் 4.85 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் பலதரப்பட்ட தொழில் முயற்சிகளுக்காக உதவு தொகைகள் வழங்கப்பட வுள்ளன. இங்கே வழங் கப்படுகின்ற உதவிகள் இவர்களின் வாழ்க்கை முறைமையை மேலோங் கச் செய்வதற்கு போது மானதாக இல்லாத போதும் அடிப்படைத் தேவை களையாவது பூர்த்தி செய்ய உதவும் என்ற நம் பிக்கையில் வழங்கப்படுகின்றது.
போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட எம் மக்களை எவ்வாறு கரையேற்றுவது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கும்போது ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள் அதாவது வாள்வீச்சு, போதைப் பொருள் பாவனை, அளவுக்கு மிஞ்சிய மதுபானப் பாவனை எம்மக்களிடையே பரவுகின்றமை எமக்கு மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணுகின்றது. போராட்டகாலங்களில் மிக அமைதியாகக் காணப்பட்ட வடபகுதி இன்று கேரளக் கஞ்சா வர்த்தகத்தின் வர்த்தக மையமாக உருவாகியிருப்பது எமக்கு கவலையைத் தருகின்றது. வேலியே பயிரை மேய்ந்து வருகின்றதோ எனச் சந்தேகம் கூட எழுகின்றது.
போரில் ஈடுபட்ட படையினர் வடமாகாணத்தில் பல ஏக்கர் காணிகளில் தொடர்ந்திருந்து வருவது மக்களின் சுமுகமான சுதந்திரமான வாழ்வுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. முக்கியமாகப் பெண்களையே அது பாதிக்கின்றது. படிப்படியாக வடக்கு மாகாணத்தில் இருந்து படையினர் மீளப் பெறப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.
வனங்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவை பற்றிய தகவல்கள் கிடைத்தால் எமது அலுவலகத்திற்கு அறிவிக்கத் தவறாதீர்கள். எமது செயலாளரிடம் இருந்து தொலைபேசி விவரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். வட பகுதியில் தமிழர்களுக்குரிய அடையாளங் கள், தெற்கில் உள்ள கடும் போக்காளர்களாலும் மற்றையோராலும் மறுக்கப்பட்டு வரும் இந்தத் தருணத்தில் அநுராதபுரம் இராச்சியம் அமைந் துள்ள பகுதியில் 12ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் அமைந்திருந்த ஒரு சிவன் ஆலயம் உருக்குலைவின்றி மண்ணுக்கடியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் இந்துக்களின் இருப்பிடம் எங்கு வரையெல்லாம் வியாபித்திருந்தது என்பதற்கு சான்றுகளாக இவை விளங்குகின்றன. வடக்கு மாகாணத்தில் கருங்கற் பாவனை குறைவாக இருந்ததால் கல்வெட்டுக்கள் போன்ற நீண்டகால அடையாளச் சின்னங்கள் அல்லது நடந்தவற்றை நிரந்தரமாகப் பொறித்து வைக்க உதவும் பொருள்கள் குறைவாகவே எமது பாரம்பரியத்தை விளக்கி வந்துள்ளன. அதனால் எமது பாரம்பரியம் அண்மைய காலத்தினதே என்று கூறுவது தவறானது. போகப் போக எமது சரித்திரம் வெளிக் கொண்டு வரப்படும்.
மக்களின் உரித்துக்கள், யார் முதலில் வந்தார்கள் என்பதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அப்படியானால் அமெரிக்கா செவ்விந்தியருக்கே உரித்தாக வேண்டும். எம்மைச் சார்ந்திருக்கும் எமது பாரம் பரியங்களைப் பாதுகாத்து எம்மை நாமே பரி பாலித்து வர எமது அரசியல் யாப்பு இடமளிக்க வேண்டும். எமது கொள்கைகளில் நின்று எந்தவித மாற்றமும் இன்றி எமது இருப்புக்களை உறுதி செய்வதற்கும் எமது மக்களின் அமைதியான வாழ்க்கை முறைமைக்கு ஏற்ற சூழல்களை ஏற்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றோம்.–என்றார். (ற-21)

## பாடசாலைக் கட்டடத்துக்கு எதிராக பொலிஸில் முறையீடு

நுவரெலியா. நவ.11
ஹற்றன் – டிக்கோயா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றுவரும் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு எதிராகத் தோட்ட நிர்வாகம் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.
கட்டட நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் காணி தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமானது என முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இதனைத் தொடர்ந்து பாடசாலைக்குக் காணியை முறையாகப் பெற்றுக் கொள்ளும் வரை நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் திறைசேரிக்கே திரும்பிவிடும் எனப் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-ய-43)

## உதய கம்மன்பில வெளிநாட்டுக்கு செல்ல அனுமதி

கொழும்பு, நவ 11
நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய இந்தியாவில் நடைபெறும் திருமண வைப வம் ஒன்றில் கலந்துகொள்ள அவர் இந்தியா செல்லவுள்ளார்.
எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை குறித்த திருமண நிகழ்வு நடைபெறவுள்ளது. அதே வேளை, டிசெம்பர் 9ஆம் திகதி முதல் ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாடொன்றில் கலந்துகொள்ளவும் உதய கம்மன்பிலவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமனத்துக்காக போராடும் நிலைக்குத் தள்ள வேண்டாம்

## வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.11

நிரந்தர நியமனத்துக்காக இனியும் போராட்டங்கள் நடத்தும் நிலைக்கு தொண்டராசிரியர்களைத் தள்ள வேண்டாம். இந்த ஆண்டு இறுதிக்குள் எமக்கான நியமனங்களைப் பெற்றுத் தாருங்கள்.

இவ்வாறு வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் இ.ஜெயராசா தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அதில் உள்ளதாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் போர்ச் சூழல் காலங்களிலும், நலன்புரி நிலையங்களிலும், மீள்குடியமர்ந்த போதும், தற்போதும் பல வருடங்களாக எதுவித கொடுப்பனவுகளும் இன்றித் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றுகின்றோம். 2011, 2013ஆம் ஆண்டுகளில் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றும் நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை.

எமது நியமனம் தொடர்பான கோரிக்கைகளையும், பெயர் விவரங்களையும் சம்பந்தப்பட்ட சகலரிடமும் கையளித்துள்ளோம். கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தபோது இந்த வருட முதலாம் தவணை விடுமுறையில் மீண்டும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. எமது பெயர்கள் நியமனத்துக்காகக் கல்வி வலயங்கள் தோறும் காட்சிப்படுத்தப்பட்டன. எனினும் எமக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. கடந்த ஓகஸ்ட் மாதம் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக எமது கோரிக்கையை முன்வைத்து உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தினோம். இந்த வருட முடிவுக்குள் எமக்கான நியமனம் வழங்கப்படும் என்று-ஆளுநர் உறுதி அளித்தார்.

பின்னர் எமக்கான நியமனத்தை உள்ளீர்ப்புப் பரீட்சை நேர்முகத்தேர்வு என்பவற்றின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என்று வட மாகாணக் கல்வி அமைச்சர் தெரிவித்தார். ஆனாலும் எதுவும் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படாததால் கடந்த மாதம் மத்திய கல்வி அமைச்சின் செயலகத்துக்கு முன்பாக உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தோம். மத்திய கல்வி அமைச்சின் கல்வி இராஜாங்க அமைச்சர் எமது கோரிக்கைகளை ஏற்று ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களுக்கு நிலையறி பரீட்சை ஒன்றை நடத்தி, நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இந்த வருட இறுதிக்குள் நிரந்தர நியமனமாக்குவோம் என உறுதியளித்தார்.

இன்றுவரை தொண்டராசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்குரிய சரியான நாளைத் தெரிவிக்கவில்லை. அதற்கான முன்னேற்பாடுகள் எதுவும் நடந்ததாகவும் நாம் அறியவில்லை. நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொடர் சேவையில் இருக்கும் எமக்கு இது ஏமாற்றத்தை அளித்துள்ளது. சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகள் காலம் தாழ்த்தாது எமது சேவையையும்-நிலையையும் கருத்தில் கொண்டு இந்த வருட முடிவுக்குள் எமக்குரிய நியமனத்தைப் பெற்றுத்தாருங்கள். தொண்டராசிரியர் பணியை முன்னெடுக்கும் எம்மை எமது நியமனத்துக்காக இனியும் போராட்டங்களை நடத்தும் நிலைக்குத் தள்ள வேண்டாம் - என்றுள்ளது. (ற-21,7)



## ஓயார்சின்னக்குளத்தில் 4 எறிகணைகள் மீட்பு

வவுனியா, நவ.11

வவுனியா, ஓயார் சின்னக்குளத்தில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் இருந்து 4 எறிகணைகள் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்தபோது எறிகணைகளைக் கண்டுள்ளார். கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கு அவர் தகவல் தெரிவிக்க, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

எறிகணைகளைப் பார்வையிட்ட பொலிஸார் அவற்றை அகற்றுவதற்கு நீதிவானிடம் அனுமதி பெற்றனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் எறிகணைகளைச் செயலிழக்கச் செய்வதற்காக எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ற-21)

## தாக்கப்பட்ட பள்ளிவாசலை பார்வையிட்டார் மஸ்தான்

வவுனியா, நவ.11

பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டு தாக்குதலுக்கு உள்ளான குருநாகல், நிக்கவரட்டிய பள்ளி வாசலுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் நேற்றுமுன்தினம் இரவு நேரில் சென்று சம்பவம் தொடர்பில் ஆராய்தார் என அவரது ஊடக பிரிவு தெரிவித்தது.

பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டு நேற்றுமுன்தினம் தாக்குதலுக்கு உள்ளான குருநாகல், நிக்கவரட்டிய பள்ளிவாசலுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் நேரில் சென்று சம்பவம் தொடர்பில் ஆராய்ந்தார். குறித்த பள்ளிவாசல் நிர்வாகத்துடன் கலந்துரையாடினார். பள்ளி வாசலுக்கான பாதுகாப்பை வழங்குதல் தொடர்பாகவும், இனி வரும் காலங்களில் இவ்வாறான நாசகார செயல்கள் நடைபெறாமல் இருக்கவும் தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்குவேன் என்று அவர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களது ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் சில இனவாதிகளால் இவ்வாறான நாசகார செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பள்ளி வாசல் நிர்வாகத்தினர் குறிப்பிட்டனர் - என்று நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடக பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.(ற-21)

## போதையில் அநாகரிகமாக நடந்தவருக்கு 6 மாதச் சிறை

மதுபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட நபரொருவருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத் தண்டனை, 6ஆயிரம் ரூபா தண்டப் பணம் மற்றும் 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்தில் சமுதாயச் சேவையில் ஈடு படுமாறு மட்டக்களப்பு நீதிமன்றநீதிவான் மா. கணேசராசா உத்தரவிட்டார். கன்னங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-ய-47)

## மழை பொய்த்ததால் விவசாயிகள் ஏமாற்றம்

வவுனியா, நவ.11

வவுனியாவின் பல வயல் காணிகளில் நெற் செய்கை மேற்கொள்ளப்படவில்லை. மழை இன்மையே அதற்குக் காரணம் என்று மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.



நெற்செய்யை மேற்கொள்ளவிருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். தற்போது பெய்யும் மழையால் நெற்செய்கை செய்ய முடியாது. புழுதிச் செய்கை மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. பலகை நெற்செய்கை மேற்கொள்ள மழை போதாதுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மழை ஏமாற்றிவிட்டது. நவம்பர் மாதம் வழமையாக பசளை இட்டு மருந்து விசிறப்படும். இந்த முறை வயல்களில் இன்னமும் விதைப்பே நடக்கவில்லை - என்று விவசாயிகள் தெரிவித்தனர்.(ற-21)

## உரிமையாளர் தெரியாத காணியில் விளையாட்டுப் பயிற்சிக்குத் தடை

### பொலிஸ் உத்தியோகத்தர் மிரட்டுகிறார் என்று இளைஞர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, நவ.11

உரிமை கோரப்படாத காணியைத் தனது காணி என்று கூறும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், காணியில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடும் இளைஞர்களை அச்சுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா, வேப்பங்குளம் 6ஆவது ஒழுங்கையிலுள்ள உரிமை கோரப்படாத காணியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக குறித்த பகுதியிலுள்ள இளைஞர் கழகத்தினர் தமது விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த வருடம் அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸ் உடை தரித்த ஒருவர் அது தனது காணி என்றும்-அங்கு விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றும்- அத்து மீறி உட்சென்றால் கைது செய்வேன் என்றும்-தனது அதிகாரத்தை அந்தப் பகுதி இளைஞர்களிடம் பிரயோகித்துள்ளார். அதன் பின்னர் அடிக்கடி சென்று காணியையும் பார்வையிட்டுள்ளார். இது தொடர்பாக இளைஞர் கழகத்தினர் முறையிட்டனர்.

அச்சுறுத்தினார் என்று பொலிஸ் உத்தியோகத்தருடன் தொலைபேசியில் உரையாடினேன். குறித்த காணி தனது நண்பர் ஒருவருடையது. அவர் தற்போது வெளிநாட்டில் உள்ளார். அதை பராமரிப்பதற்கு தன்னிடம் ஒப்படைத்தார். தான் தற்போது கொழும்பில் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பணிபுரிகின்றேன் என்று அவர் கூறினார். காணி உரிமையாளராகக் கூறப்படுபவரை என்னுடன் தொடர்பு கொள்ளுமாறும், காணி அளிப்புப் பத்திரங்களையும் காண்பிக்குமாறும் தெரிவித்துள்ளேன்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியாவில் செயற்பட்ட இயக்கம் ஒன்று இந்தக் காணியைப் பயன்படுத்தியது. பகுதியில் இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு எந்தவித காணி அளிப்புப் பத்திரமும் வழங்கப்படவில்லை.

இளைஞர்- கழகத்தினர் தமது செயற்பாட்டுக்கு கடந்த ஐந்து வருடங்களாக பயன்படுத்தி இந்த காணியை பயன்படுத்துகின்றார்கள். மைதானத்துக்கு பின்னாலுள்ள பகுதியில் வசித்து வருபவர் ஒருவர் காணியை அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடிய பின்னர்-எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேப்பங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்றார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதிரடிப்படை வர்ணம் பூசப்பட்ட மோட்டார் சைக்கிள் பறிமுதல்

வவுனியா, நவ.11
அதிரடிப்படையின் சீருடையை ஒத்த வர்ணம் பூசப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று வவுனியா பொலிஸாரால் பறி முதல் செய்யப்பட்டது. வவுனியா நகரப் பகுதியில் குறித்த மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது என்று வவு னியா பொலிஸார் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்களின் வர்ணம் மாற்றப்படும்போது மோட்டார் வாகனத் திணைக்களத்திடம் அனுமதி பெற வேண்டும். குறித்த மோட்டார் சைக்கிள் வர்ணம் மாற்றப்பட்டது குறித்து ஆவணங்களில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்டமையால் மோட்டார் சைக்கிள் பறி முதல் செய்யப்பட்டது. மோட்டார் சைக்கிள் வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் பாரப்படுத்தப்படும்-. என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)




## முதியோர் தின நிகழ்வு வவுனியாவில் நேற்று

வவுனியா, நவ.11
பன்னாட்டு முதியோர் தின விழா மகிழ்வோர்மன்றம்எனும்தொனிப் பொருளில் நேற்று வவுனியாவில் நடத்தப்பட்டது.
வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.வாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற பஸ்களில் முதியோருக்கான இருக்கைகள் எனும்ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. நிகழ்வின் முதன்மை விருந்தினரான வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஸ்ரிக்கர் களை ஒட்டி நிகழ்வை ஆரம்பித்தார். ஏனைய பிரமுகர்களும் அவற்றை ஒட்டினர். அதன்பின்னர் இளைஞர்கள், பிரமுகர்கள் ஒன்றிணைந்து மகிழ்வோம் மன்றம் எனும் தொனிப் பொருளிலான பதாகைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலம் சென்றனர். ஊர்வலம் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தை அடைந்ததும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.
அதில்வடக்குமாகாணசபைஉறுப்பினர்கள், வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள், முதியோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21,402)

# சமூகச் சீரழிவை தடுக்கவே சமுதாய பொலிஸ் குழுக்கள்

### ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



வவுனியா, நவ.11
கிராமிய மட்டங்களில் உள்ள சமூகச் சீரழிவுகளைத் தடுப்பதற்காகவே சமுதாய பொலிஸ் குழு களமிறக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த டி சில்வா தெரிவித்தார்.
பொலிஸ்மா அதிபர் புஜித் ஜயசுந்தரவின்கிராமசமுதாய பொலிஸ் குழு மறுமலர்ச்சி வேலைத் திட்ட நடைமுறையாக்கலின் கீழ் வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 12 கிராமங்களைச் சேர்ந்த கிராமிய சமுதாய குழுக்களின் தலைவர் செயலாளர்களுக்கான நியமனச் சான்றிதழ்கள் நேற்று ஓமந்தைபொலிஸ்நிலையத்தில் வழங்கப்பட்டன.
அந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே பொலிஸ் பொறுப்பதிகாரி இவ்வாறு தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது:
கிராம மட்டத்தில் எவ்வாறான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டாலும் அதனையும் மீறி சட்ட விரோத செயல்கள் இடம் பெறுகின்றன. அவற்றைத் தடுக்கவே கிராமிய சமுதாயக் குழு பொலிஸ் மா அதிபரால் அமைக்கப்பட்டுள்ளது. இனி நாங்கள் அக்கறையுடன் விழிப்புணர்வுடன் செயற்படுவோம் என்ற உறுதி மொழியை எடுப்போம்.
பொலிஸாருக்கு தெரியப்படுத்த பொது மக்களுக்கு மொழிப் பிரச்சினை இருக்கிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமுதாய பொலிஸ்குழுவின்மூலம்எம்மை அணுகலாம். கிராம அலுவலர் ஊடாக எமக்கு பிரச்சினைகளைத் தெரியப்படுத்தலாம். முன்மாதிரியாக நாங்கள் பல்வேறு பொது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, சமுதாயத்தை நல்லதொரு சிறப்பான சமுதாயமாக மாற்றுவோம்.
கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழ் நிலை இனி உருவாகாதவாறு பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கிருக்கின்றது. தற்போது மருதங்குளத்தில் தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று ஓமந்தையின் ஏனைய பிரதேசங்களிலும் சட்டவிரோத செயல்களை மட்டுப்படுத்த பொலிஸாரின் சேவை செயற்படுத்தப்படும். அதற்கு உறுதுணையாகவேகிராமியசமுதாயபொலிஸ் குழு களமிறக்கப்படுகின்றது.- என்றார். (ற-21-402)

## நேர முகாமையை மாணவர் பழகுவது அவசியம்

### தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, நவ.11
மாணவப் பருவத்தில் நேர முகாமைத்துவம் அவசியம் என்பதைப் பாடசாலைகள் எமக்கு உணர்த்துகின்றன. நேர முகாமைத்துவத்துடன் மாணவர்களுக்கான ஒழுக்கம், கட்டுப்பாடு, விழுமியங்கள் போன்றவற்றையும் பாடசாலைகளே வழங்குகின்றன. அவற்றைச் சிறு வய தில் இருந்து பழகிக் கொண்டால் எதிர் காலம் சிறப்பாக அமையும்.



இவ்வாறு தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன் தெரிவித்தார்.
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவ தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமார் தலைமையில் நடந்த விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது–
கல்லூரியில் கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 67 பேருக்கு மாணவ தலைவருக்கான சின்னங்கள் சூட்டப்பட்டன. சின்னத்தைப்பெற்ற மாணவருக்கு பொறுப்பு கூடுகிறது. 142 ஆவது வருடத்தில் இயங்கும் கல்லூரியின் பெருமை இன்னம் பல வருடங்களுக்கு நீடிக்க வேண்டும். நிகழ்வில் மாணவ தலைவர்களாக சின்னஞ்சூட்டப்பட்ட மாணவர்களுக்கு அதற்குரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. எந்தவொரு பாடசாலையிலும் இல்லாத ஒரு நிகழ்வாக இதனைக் காண்கின்றேன். பாட சாலைக் கல்வி முடிந்ததும் சின்னத்தைக் கையளித்து விட்டே வெளியேற வேண்டும். வழங்கப்பட்ட சான்றிதழ் எதிர்காலத் தேவைக்குப் பயன்படுத்த உதவும். இந்த நடைமுறையை அனைத்துப் பாடசாலைகளிலும் செயற்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்படும். – என்றார்.
நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்களான கனடாவில் வதியும் தினகரன் தம்பதிகள் கலந்து கொண்டனர். மூத்த மாணவ தலைவன், மூத்தமாணவதலைவி, உதவிமூத்தமாணவ தலைவன், உதவி மூத்த மாணவ தலைவி உட்பட 67 மாணவர்களுக்கு சின்னங்கள் சூட் டப்பட்டு, அவற்றிற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ற-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ட்ரம்பின் வெற்றியால் மாற்றம் வருமா?

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவு எல்லா எதிர்பார்ப்புகளையும் புரட்டிப்போட்டுள்ளது. அடுத்த 4 ஆண்டுகளுக்கு ட்ரம்பே உலக வல்லரசை ஆளப்போகும் சக்தி. முன்னாள் அதிபரின் மனைவியும், முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சருமான ஹிலாரி கிளிங்ரனின் வெற்றி உறுதி என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ட்ரம் - அவரே எதிர்பார்க்காத விதத்தில் - வெற்றி பெற்றிருக்கிறார்.

அவரது வெற்றி உலக ஒழுங்கில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை. அதற்கு அவரது இரண்டு கொள்கைகள் முக்கிய காரணம். உலக நாடுகளுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கப்போவதில்லை என்பது அவரது உறுதியான கொள்கை. மற்றையது வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கப் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்வது என்பது. கட்டணம் செலுத்தினால் அன்றி வேறு நாடுகளின் பாதுகாப்புக்காக அமெரிக்கத் துருப்புக்களை நிறுத்தப்போவதில்லை என்று அவர் அறிவித்திருக்கிறார். குறிப்பாக நேட்டோ எனப்படும் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பிற்காக அமெரிக்கா செய்பவற்றுக்கு இனி இடமில்லை என்று கூறியிருக்கிறார்.

அவரது இந்தக் கொள்கைகள் செயலுருவம் பெற்றால், தற்போதைய உலக ஒழுங்கு நிச்சயம் மாற்றம் பெறும். இதுவரையில் "உலகப் பொலிஸ்காரன்" என்கிற அமெரிக்க விம்பம் உடையும். அது தேவையற்று மற்றைய நாடுகளின் விவகாரங்களில் இராணுவ ரீதியிலான தலையீட்டைச் செய்யாது என்று நம்பலாம். இது ஒருவகையில் உலக அமைதிக்கும் பெரும் பங்கு வகிக்கக்கூடும். போர்களின் எண்ணிக்கை குறைவதற்கும் வாய்ப்புகளுண்டு.

அமெரிக்காவின் இத்தகைய கொள்கை மாற்றங்கள் ஆசியாவை, குறிப்பாக இலங்கையைப் பாதிக்குமா? அதன் மூலம் கொழும்பு அரசு மீதான அழுத்தத்தை வொஷிங்ரன் குறைத்துக்கொள்ளுமா என்கிற கேள்விகளே தமிழர்களின் மனங்களைக் குடைகின்றன.

ட்ரம்பின் வெற்றியைத் தமக்கான வெற்றியாக சிங்களவர்களில் ஒரு தொகுதியினர் பார்க்கின்றனர். ட்ரம்பின் வெற்றியை வடக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்புக்குக் கிடைத்த தோல்வி என்று வர்ணித்திருக்கிறார் இராஜதந்திரியும் பத்தி எழுத்தாளருமான தயான் ஜெயதிலக்க. ஹிலாரி வென்றிருந்தால், அது கொழும்புக்குப் பெரும் பாதிப்பாக அமைந்திருக்கும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதேபோன்று தமிழர்களில் ஒரு பகுதியினரும் ட்ரம்பின் வெற்றி ஈழத் தமிழர்களுக்குப் பாதிப்பாக அமையும் என்றே கருதுகின்றனர்.

ஆனால், ட்ரம் மற்றும் கொழும்பு இடையிலான உறவின் துருப்புச் சீட்டாக இருக்கப்போவது எப்போதும் சீனாவே. பரப்புரைக் காலத்தில் ட்ரம் ரஷ்யாவுக்கு நேசக்கரம் நீட்டியபோதுகூட, சீனாவுடன் கடுமையாகவே நடந்துகொண்டார். பண விடயத்தில் சீனா ஒரு தில்லாலங்கடி என்றும், சீனாவுடனான வர்த்தக உடன்படிக்கைகளைத் தூக்கி வீசிவிடப்போவதாகவும், ஆசியாவுக்குத் தமது வேலைகளைத் தூக்கிக் கொடுக்கும் அமெரிக்க நிறுவனங்களைத் தண்டிக்கப்போவதாகவும் தான் ட்ரம் பேசினார்.

அதுவும் தவிர, சீனாவின் வளர்ச்சிப் போக்கைப் பார்த்து அமெரிக்காவுக்கு எப்போதுமே ஓர் அச்சமும் உண்டு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 'ட்ராகனை' கட்டுப்படுத்தி வைத்திருப்பது அவசியம் என்றும் சிந்திக்கிறது. அமெரிக்காவின் இந்த வெளியுறவுக் கொள்கையை ட்ரம் கேள்விக்குள்ளாக்கும் சாத்தியங்கள் ஏதும் இதுவரை தெரியவில்லை. எனவே இலங்கை தொடர்பான அமெரிக்க அணுகுமுறையில் பெருமளவான மாற்றங்கள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே கருதலாம்.

இந்த நூற்றாண்டில் எல்லா விவகாரங்களிலும் தலையிடுவதற்கான தனக்கான பிடிமானமாக மனித உரிமைகள் விடயத்தையே அமெரிக்க வெளியுறவுத்துறை பயன்படுத்திவருகிறது. இலங்கை விவகாரமும் அதற்குள்ளேயே அடங்கியிருப்பதால், அதனை அறவே விட்டுவிடுவதற்கான சாத்தியங்கள் குறைவே. எனவே கொழும்பு விடயத்தில் வொஷிங்ரனின் போக்கில் பெரும் மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. அந்த மாற்றம் 2015 ஆரம்பத்திலேயே நிகழ்ந்துவிட்டது.

# நாட்டு மக்கள் கொதித்தெழுந்தால் அரசால் தாக்குப் பிடிக்க இயலாதே!

சிங்கள மூலம் – சந்துன் ஜீவந்த
தமிழில் – வி.எஸ்.ரீ

இந்த நல்லாட்சி அரசு, உண்மையில் நாட்டு மக்களை நேசிக்கின்ற அரசுதானா என்பதைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமொன்று, கடந்த வாரத்தில் 'வற்வரி' அதிகரிக்கப்பட்ட வேளை கிட்டியது. உண்மையில் இந்த அரசு நாட்டு மக்கள் குறித்து அக்கறை செலுத்த வில்லை என்பது அந்த 'வற்வரி அதிகரிப்பு மூலம் புலனாகியது. கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட 'வற்வரி' அதிகரிப்புச் சட்டம் காரணமாக நாட்டு மக்கள் இனிவரும் காலத்தில் 15 வீத வற்வரி செலுத்த நேர்ந்துள்ளது. அது நாட்டு மக்களைப் பெருமளவில் பாதிக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

உதாரணமாக, நூறு ரூபாவுக்கு 'றீலோட்' செய்வதானால், அதில் கூட 15 ரூபாவை வற்வரியாகச் செலுத்த நேர்கிறது. இருதய நோயாளியொருவர் 'பைபாஸ்' சத்திர சிகிச்சையொன்றை மேற்கொள்ள ஐந்து இலட்சம் செலவு செய்ய நேர்ந்தால், அந்த அப்பாவி நோயாளி அதில் வற்வரியாக 75 ஆயிரம் ரூபாவைச் செலுத்த நேரிடுகிறது. அத்தகைய நிலையில் சாதாரண பொது மக்களது மன உணர்வுகள் எவ்வாறு அமையும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

தாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், தாம் பதவிக்கு வந்ததும் லஞ்சம் ஊழல் செயற்பாடுகளை ஒழித்துக் கட்டி விடுவோமெனவும், நாட்டு மக்களது வாழ்க்கைச் செலவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தம்மால் இயலக் கூடியதாக இருக்குமெனவும் நல்லாட்சித் தரப்பினர் கூறி வந்தனர். மகிந்த தரப்பினரால் சூறையாடப்பட்ட 18 பில்லியன் டொலரைக் கைப்பற்றி அதன் மூலம் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என மங்கள சமரவீர தரப்பினர் தெரிவித்தமையை இன்னமும் நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. மகிந்த ராஜபக்ச தரப்பினர் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டிய 18 பில்லியன் ரூபாவில், இன்று வரை ஒரு சதத்தையேனும் மீட்டிட இந்த நல்லாட்சி அரசால் இயலாது போய்விட்டதே? பச்சைப் பொய்களையெல்லாம் அவிழ்த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றிய தரப்பினர், அன்று தாம் கூறிய எவற்றையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது போயுள்ளமை இதிலிருந்து தெளிவாகிறது.

### பொருளாதாரச் சிக்கலுக்கு முகம் கொடுக்கும் நல்லாட்சி அரசு

சர்வதேசப்புகழ் பெற்ற பொருளாதார நிபுணர்கள் தம்வசம் இருப்பதாக முன்னர் வாயடித்து ஆட்சியைக் கைப்பற்றிய தரப்பினரால், நாட்டின் பொருளாதாரத்தில் எத்தகைய முன்னேற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியவில்லை என்பது 'வற்வரி' அதிகரிப்பின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, சுதந்திரக்கட்சியின் மைத்திரிபால தரப்பு அமைச்சர்களும் கூடத்தான் 'வற்வரி' அதிகரிப்புக்கு ஆதரவு வழங்கினர். ஆயினும் தற்போது அதற்கான பழியை ஐ.தே.கட்சியின் மீது அவர்களால் சுமத்த இயலாத போயுள்ளது. அவர்கள் 'வற்வரி' அதிகரிப்புக்கு எதிராக வாக்களித்திருந்தால், குறித்த சட்டவரவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள இயலாது போயிருக்கும்.

பொது மக்கள் மீது பாரத்தைச் சுமத்தும் விதமான பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளும் பொருளாதார நிபுணர்களெனத் தம்மைக் கூறிக் கொள்ளும் தரப்பொன்றைச் சேர்ந்தோர், அரசில் இருப்பதாகவும், அவர்களை அரசிலிருந்து விரட்டத் தாம் பின்னிற்கப்போவதில்லை எனவும் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

எனவே அத்தகைய எதிர்பார்ப்புடன் 'வற்வரி' அதிகரிப்புக்கு ஆதரவளித்த சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை ஏதாவது மேற்கொள்வாரா என்பது குறித்தும் எதுவும் தெரியவில்லை.

### அரிசி விலையை அதிகரிக்கப் போய் டட்லி பிரதமர் பதவியைத் துறக்க நேர்ந்தது

எது எப்படியோ, தற்போது 15 வீத 'வற்வரி' செலுத்தவேண்டிய நிலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை அறிமுகப்படுத்திய மைத்திரிபால - ரணில் ஆகியோரின் தலைமையிலான நல்லாட்சி அரசுக்கு வற்வரி அதிகரிப்புத் தொடர்பாக ஏற்பட்டுள்ள எதிர்ப்புப் போன்றதொரு எதிர்ப்பு, 1953ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்காவின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசுக்கும் ஏற்பட்டிருந்தது. அந்தவேளையில் டட்லி சேனநாயக்கா ஒரு கொத்து அரிசியின் விலையை 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்த்தினார். அந்த விலை அதிகரிப்புக்கு எதிராக முழுநாடுமே கிளர்ந்தெழுந்தது. அரசுக்கு எதிரான போராட்டங்களில் பத்துப் பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். பெருந்தொகையான பெண்கள் காலிவீதியைத் தடைசெய்து வீதியில் வைத்து றொட்டி தயாரித்தனர். இந்தப் பெரும் எதிர்ப்பு இயக்கத்துக்கு அஞ்சி டட்லியின் அமைச்சரவை மீண்டும் கூடி ஆலோசித்தது. கடைசியில் டட்லி சேனநாயக்கா தாம் வயிற்றுக்கோளாறால் அவதியுறுவதாகக் கூறி பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். சேர்.ஜோன் கொத்தலாவலை புதிய பிரதமராகப் பதவியேற்றார். அந்த வகையில், அன்று ஒரு கொத்து அரிசியின் விலையை அதிகரித்தன் காரணமாக டட்லிக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டமை போன்று, இன்று 'வற் வரியை' அதிகரித்ததன் காரணமாக ரணிலுக்கும் வயிற்றுக் கோளாறு ஏற்படுமா? என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அவ்வாறு ரணிலுக்கு சிரமமெதுவும் ஏற்படுமானால், அன்று சேர்.ஜோன் போன்று இன்று அதற்குத் தோள்கொடுத்துத் தாங்க முன் வரக்கூடியவர் மகிந்த ராஜபக்சவே என்று மட்டும் கூறிக் கொள்ள இயலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# நம்பிக்கையே வாழ்க்கை என்றாகி விடுமா?

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இலங்கை பொதுஜன முன்னணி கட்சியின் மூலம் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கும் தீர்வைத் தருவோம் என அதன் தவிசாளரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் கூறியிருக்கிறார். பொதுஜன முன்னணி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சியைப்பிடிக்கப் போவதாக ஆரூடம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆரூடத்தை நம்பி ஆட்சியைப் பறி கொடுத்தவர்கள் இவர்கள் என்பது பழைய கதை.

பதவிகளை இழந்த துயரம், குளவிக்கூடாக இருந்த குடும்ப ஆட்சி குலைந்து போன வருத்தம், ஏற்கனவே அரசைக் கவிழ்ப்போம்; ஆட்சியைப் பிடிப்போம், எனக்கூறி புதிய கட்சியை ஆரம்பித்த எதிரணியினர், இப்போது சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கும் தீர்வு தருவோம் என்று வேறு, பொடி வைத்துப் பேசத் தொடங்குகின்றனர். மோசமான இனப்படுகொலையையே நிகழ்த்தி விட்டு, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவேயில்லை என்று கூறியவர் இந்த ஜீ.எல்.பீரிஸ். தற்போதைய அரசு, புதிய அரசமைப்பின் ஊடாகத், தமிழ் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை வழங்குவோம் என உறுதியளிக்கிறது. அந்த ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு என்ன என்பது இன்னமும் மறை பொருளாகவே உள்ளது. இந்த நிலையில், புதிய அரசமைப்பு அவசியமற்றது; அது, நாட்டைத் துண்டாடிவிடும் என்றெல்லாம் உசுப்பேத்திச் சிங்கள மக்களிடையே இனவாதச் செடி கருக விடாமல் பாதுகாக்க முயலும் கூட்டு எதிரணியினர், தமது புதிய கட்சி, சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எனப்பரப்புரை செய்வது அந்த மக்களின் ஒற்றுமையைச் சிதைக்க முயலுமொரு சூழ்ச்சியே.

## சிறுபான்மைத் தரப்புக்களையும் தம்முடன் இணைக்க முயற்சி

மலையகத் தமிழ்க்கட்சி ஒன்று சமீபத்தில் தம்முடன் இணைந்துள்ளதாகவும், முஸ்லிம் அமைப்புக்கள் பல தங்களுடன் இணையத்தயாராவதாகவும் கூறும் பீரிஸ், ஒரு கூட்டமைப்பாக இணைந்து செயற்படவும் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஏற்கனவே முஸ்லிம் தலைமைகளையும் சந்தித்துப் பேசியுள்ளார். முன்னைய ஜனாதிபதி மகிந்த, வடக்கும் கிழக்கும் இணையக்கூடாது என்பதில் தீவிர கவனம் செலுத்தியவர். நீதிமன்றத் தரப்பினூடாக அந்தக் கருத்தை நிலை நாட்டியவர். இந்த நிலையில் சிறுபான்மை மக்களை மேலும் ஏமாற்றிக் கழுத்தறுக்கவே, இலங்கைப் பொதுஜன முன்னணி முளைத்துள்ளதாகவே கொள்ளமுடியும்.

நம்பினோர் கெடுவதில்லை என்பது நான்கு மறைத் தீர்ப்பாகச் சொல்லப்பட்டாலும், நம்பியவர்களை நட்டாற்றில் விடுவதே எமது நாட்டு அரசியலின் வழமை. காலம் காலமாக நிரூபிக்கப்பட்டு வரும் உண்மையும் இதுவே. வடக்கில் இடம்பெறும் கஞ்சாக் கடத்தல், போதைப்பொருள் பாவனை, வாள் வெட்டுக்கள் போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் தென்பகுதி முக்கியஸ்தர்களாகக் கூறப்படுபவர்களின் ஆதரவுகள் உண்டு என செய்திகள் கூறுகின்றன. தெற்கில் குழப்பங்களை உண்டுபண்ணுவதுடன், பிக்குமார்களையும் ஏவிவிடுவதாக அங்குள்ள இனவாதிகள் மீது குற்றம் சுமத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மக்களின் நம்பிக்கை சிதையாது பாதுகாக்க, 'அவர்கள் என் மீதுவைத்துள்ள நம்பிக்கை ஒரு போதும் சிதைவடைய விடமாட்டேன்' எனக் கூறியிருக்கிறார்.

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும்கூட, கணிசமான, நியாயமான தீர்வை, சிறுபான்மை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மனப்பூர்வமாகவே சிந்திக்கிறார்போல் தெரிகிறது.**



## சிறுபான்மை மக்கள் நல்லாட்சி அரசை இன்னமும் நம்புகின்றனர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும் கூட, கணிசமான, நியாயமான தீர்வை, சிறுபான்மை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மனப்பூர்வமாகவே சிந்திக்கிறார் போல் தெரிகிறது. அதற்காக தமிழ்த் த்லைமைகளும் அரசுடன் முரண்பாடுகளைத் தவிர்த்து வருகின்றன. இந்தப் புரிந்துணர்வு நடவடிக்கைகள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு கடந்த காலங்களைவிட நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் முஸ்லிம் தலைமைகள், வடக்கு கிழக்கு இணைப்புக்கு மாறான கோசங்களை எழுப்புவது இனவாத கூட்டணிக்கு சாதகமான வாய்ப்புக் களை தென்பகுதியில் தோற்றுவிக்க ஏதுவாக இருக்கும் என்பது மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கூறுவது போல, ஆபத்தான நிலமைகளை உண்டுபண்ணவும் கூடும். எதிரணியின் ஆதரவு பெற்ற பொது பலசேன போன்ற இனவாத அமைப்புக்கள், பள்ளிவாசல்கள், மசூதிகள் மீது மேற்கொண்ட அடாவடித்தனங்களை பெரிதுபடுத்தாது இனவாதிகளுடனும் எதிரணியுடனும் முஸ்லிம் தலைமைகள் கைகோர்ப்பது முஸ்லிம் மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கும் தீர்வு தருவோம் என்றால், அது எந்த வகையானது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். கடந்த ஆட்சியில், சிறுபான்மை இனங்களின் பிரச்சினைக்கு எந்த வகையிலாவது இன்றைய எதிரணியினர் தீர்வுகாண முனைந்தனரா என்பதை இலங்கை பொதுஜன முன்னணியினர் ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும். முள்ளிவாய்க்காலும், இறுதிப் போரும் தமிழ் மக்களது மனங்களில் அழியாத நினைவுகளாக ஆகிவிட்ட நிலையில், இப்போது புதிய கட்சியின் பெயரால், பழைய பாணியில் நம்பிக்கையை ஊட்ட முனைகின்றனர். நம்பிக்கைதான் வாழ்க்கை என்கின்றார்கள்; ஆனாலும் நம்பிக்கையே வாழ்க்கை என்றாகி விடுமா?

# சுகாதாரப் பகுதியினர் இதையும் கவனிப்பார்களா?

கடந்த சில நாள்களுக்கு முன்னர் சங்கானை மரக்கறிச் சந்தையில் மரக்கறி வாங்க நான் சென்றிருந்தபோது, எனக்கருகில் நின்ற ஒருவர் வெங்காய வியாபாரி ஒருவரிடம் வெங்காயம் ஒரு கிலோவை 60 ரூபா செலுத்தி வாங்கினார். வாங்கியவர், ஒரு நிமிடம் கழித்துதிரும்பி வந்து, தம்பி வேண்டாம் சரியில்லை என்று திருப்பிக் கொடுத்தார். வியாபாரியும் அப்படியானால் 100 ரூபா விலையிலானதை வாங்குங்கள் என்றார். 'இல்லைத்தம்பி வேண்டாம்' என்று அவர் கூற வியாபாரியும் காசைத் திருப்பிக் கொடுத்தார். அவர் வாங்கி, பின்னர் திருப்பிக் கொடுத்த வெங்காயம், பம்பாய் வெங்காய ரகத்தைச் சேர்ந்தது. ஆனால் அளவில் சிறியது. 60 ரூபாவுக்கு மலிவுதான். அப்படியானால் கொள்வனவு செய்தவர் ஏன் திருப்பிக் கொடுத்தார் என்பதை விற்பனைக்காகக் குவித்து வைக்கப்பட்டிருந்த அந்த வெங்காயக் குவியலை அவதானித்தபோதுதான் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. திருப்பிக் கொடுத்தவர் சற்றுத் தள்ளி இருந்த பிறிதொரு வியாபாரியிடம் அதே விலைக்கு தரமான வெங்காயத்தை வாங்கிச் செல்வதையும் கவனித்தபோது முன்னைய வெங்காயத்தின் சீத்துவமும் தெரிந்தது.

குவியலின் மேற்படையில் கண்ணை உறுத்தும் படியாக மணி மணியான தரமான வெங்காயமும், குவியலின் உள்ளே மழையில் நனைந்தோ என்னவோ, மேற் சருகுகள் அவிந்த, ஈரப்பற்றான வெங்காயமும் இருந்தன. நுகர்வோருக்கு கொடுக்கும்போது கையிலுள்ள சிறிய சவள் போன்ற ஒரு சாதனத்தால் அடியிலிருந்துதான் கோலி எடுத்துத் தராசில் போடுகிறார் வியாபாரி. மேற்படையைப் பார்த்து விட்டு வாங்க முடிவெடுத்து, அவர்தரும் சொப்பிங் பையில் உள்ள வெங்காயத்துடன் வீடு சென்றால், அரைவாசிக்கு மேல் கழிவு போகும் என்பது நிச்சயம். அதனைவிட முக்கியமானது, இந்த மாதிரி வெங்காயத்தை வாங்கிச் சென்றவரின் இல்லத்தரசி அவரை 'நீங்கள் சரியான வெங்காயம் தான்' என்று சொல்லாமல் விட்டால் அது அவரது அதிர்ஷ்டம் தான். நல்லவேளை, வாங்கிய வெங்காயத்தை சொப்பிங்பையில் இருந்து எடுத்துப் பார்த்ததால் தப்பித்தார் அவர்.

இப்படியாக சருகுகள் அவிந்து அழுகும் நிலைக்கு வந்து கொண்டிருக்கும் வெங்காயத்தை அந்தப் பகுதிக்குரிய சுகாதார அதிகாரிகள் பார்த்திருப்பார்களேயானால், நிச்சயம் அதனை விற்பதற்கு தடை விதித்திருப்பார்கள். சருகுகள் அவிந்து ஈரப்பற்றான வெங்காயத்தை நுகர்வோர் தலையில் கட்டி அடிக்கும் வேலையை தொடராமல் இருப்பது இருபகுதியினருக்குமே நல்லது. சுகாதாரப்பகுதி அதிகாரிகளின் கவனம் இடைக்கிடையாவது, இதுபோன்ற விடயங்களில் ஈர்க்கப்படுமா?

க.விநாயகன்
சித்தங்கேணி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/புனித ஜோண் பொ

## பாடசாலை பரிசளிப்புத் தினமும் தரம் 5 



### அதிபரின் வா

மங்காப் புகழ் பூத்து கல்விக் கடலில் கலங்கரை வி
யத்தின் தரம் 05 மாணவர்களையும் அவர்களைக் கற்ற
கிறேன். **எமது வித்தியாலய மானது இவ் வருடமு**
**முதலாவது இடத்தைப் பெற்றமையுடன் தேசிய ரீதி**
தோடு. யாழ் மண்ணில் இவ் வித்தியாலயமானது **169** மாவ
மகுடம் சூட்டி சாதனை படைத்துள்ளமை போற்றுதற்குரிய
இவ்வித்தியாலயத்தின் உயர்வுக்கு வழிவகுத்
களையும் எம்மோடு ஒன்றிணைந்து எமது உயர்வுக்காய் உழைத்த யாழ். 
கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றையெல்லாம் வழிநடத்தி எம்
காலங்களிலும் புனித ஜோண் பொஸ்கோவின் பெயர்மங்கா வண்ணம் க
வித்தியாலயத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.


கி.லி.வி.ப.டில்சாந்த் பற்றிக் 191


ம.ஏகாட்சரி 188


அ.மெல்ஷா 188


ஜெ.கேதுஷாத் 185 | ஜெ.ஜெகப்பிரியன் 184 | சி.மிஷாலி 183 | கே.சங்கவி 183 | டெ.துஷாரி 182 | வ.திஷானா 182 | டு.டுஷிக்கா 182 | கி.கிறிஸ்ரினா அனுஜிற்றா 181 | ம.வாசனா 180


கே.பிறென்ஜா 177 | இ.திலக்ஷி 177 | இ.சங்கவி 177 | சி.மருதபரணி 176 | வ.பிரகோபன் 176 | சி.வர்ஷினி 176 | லி.லிஷனா 176 | தி.சுவேதிகா 176 | ப.அஞ்சனா 176


ஜெ.சதுர்னா 174 | றெ.சாநுஜன் 173 | சோ.தனுஷிகன் 173 | வி.அபிஷேக் 173 | கோ.யாதுவர்ஷி 173 | பி.மதீஷன் 173 | இ.ஹரிஸ்ஸன் 173 | வை.அபிஷாயினி 173 | பி.சப்தவி 172


ஸ்ரீ.ஸ்ரீசுவிஜா 170 | இ.ஜெனிஸ்ரன் 170 | ச.சர்வேஸ்ராம் 170 | ஜெ.தேனுஜா 170 | கி.லி.வி.ப.கிருஷாந் பற்றிக் 169 | கி.திவ்யன் 169 | யூ.ஜெரூண் பிறின்ரன் 169 | வ.ஹெர்சல் ஷரோன் 169 | யோ.அர்சனா 168


ம.கேஷான் 166 | ம.அனிஸ்ரன் 166 | ச.சத்தியஜெனனி 166 | த.சமிக்ஷா 166 | ர.அபிநயன் 166 | ஸ்ரீ.திவ்யனன் 166 | ம.அபிவர்ஷினி 166 | செ.ஆரபி 166 | கி.அடம்சுரிரோ 165


அ.தரணிகா 164 | வி.சுவிற்றனா 164 | ஸ்ரீ.சுஸ்மினா 164 | ஜெ.கஜானன் 164 | செ.அஸ்மிதா 164 | லி.கோதையமுகி 163 | ச.அர்ஜயன் 163 | இ.அக்ஷயன் 163 | ர.வினோஜன் 163


அ.செரோமியா 162 | அ.ஆதித்யா 162 | ச.அர்சனா 161 | அ.அல்றின் றொஷ்னி 161 | த.ஸ்யாமளி 160 | பா.கிஷானி 160 | ப.லக்ஷானி 160 | பி.ஜெய்சன் டீவையஸ் 160 | உ.சுரோஷன் 160


அ.கோபினி 158 | செ.வைஷாலி 158 | இ.பானுஷிகா 158 | தி.காருண்யன் 158 | ம.ஹரினி 158 | மா.மார்க் பிரவின் 158 | ச.திருஜா 157 | சு.சுபர்ணன் 157 | இ.திஜிதா 157


ச.மதுமிதா 156 | சு.ஹரோன் 155 | பா.சபேசர்மா 155 | செ.அனர் ஷிவோலின் 155 | சு.சுகஸ்திகா 154 | ஜெ.அஸ்வினி 154 | ச.துஷிதா 154 | ஜெ.திஷாரகி 153 | உ.கேதுஜா 153

2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 169 மாணவர்களையும் அவர்களோடு 70 புள்ளிகளுக்கு மேல் பெறுபேறு பெற்ற அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று (11.11.2016) வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அரங்கில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி றொஷாந்தி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ாஸ்கோ வித்தியாலயம் - 2016

## ் மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும்-11.11.2016

### வாழ்த்துச் செய்தி

றை விளக்காகத் திகழும் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியால
கற்றலில் ஊக்குவித்து வழி காட்டிய ஆசிரியர்களையும் வாழ்த்து
**நடமும் தேசிய ரீதியில் தமிழ் மொழிப் பாடசாலைகளுள்**
**ய ரீதியில் மூன்றாவது இடத்தையும்** பெற்று பெருமை சேர்த்த
9 மாணவர்களை சித்தியடையச் செய்து பாடசாலையின் பெயருக்கு
ற்குரியது. சித்தி வீதமானது **66.54%** ஆல் உயர்ந்து நிற்கின்றது.
வகுத்து நிற்கும் ஆசிரியப் பெருந்தகைகளையும், பெற்றோர்
ாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளையும் உளமாரப் பாராட்டு
எம்மைப் பாதுகாத்து வரும் இறைவனுக்கு நன்றி கூறி இனிவரும்
எம் காத்தருள புனித பொஸ்கோவின் ஆசியும், அருளும் எமது

**அருட்சகோதரி. மேரி றொஷாந்தி**
(அதிபர் - யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)





ர.பரத் 187 | ர.திலக்ஷான் 187



சி.கொஜூசனன் 186 | கு.வித்தகன் 185



180 | ஆ.நிவேதன் 180 | பி.டிவேஷ் 179 | வ.தேனுஹர்ஷன் 179 | கி.கபிஷாந் 179 | சு.நிவேதிதா 179 | ப.தருணிகா 178 | சி.ராகுலன் 178 | நி.அபிஷரோன் 178 | ர.பஷ்மித்திரன் 177



176 | செ.அட்சயன் 176 | ஹ.அய்ங்ஹரன் 175 | ஜெ.சுமித் 175 | ஜெ.அரிசன் 175 | அ.அக்ஷெயா 175 | ச.புதியவன் 175 | கி.ஹரிஸ்ணவி 174 | சி.மானசிகா 174 | ம.மேதினிகா 174



172 | அ.கோபிசன் 172 | பூ.தாகினி 172 | இ.சங்கவி 171 | பி.சதுசனா 171 | சி.வைஷ்ணவி 171 | கு.பவிசன் 170 | சா.அபிஷாந்த் 170 | நா.சுபகோபிகன் 170 | செ.விஸ்வாதிகா 170



168 | த.மோகன மயூரி 168 | மோ.ருக்ஷிகா 168 | ர.அபிசாந் 168 | ற.வேஜின் சாறுக்கா 167 | த.இந்துயன் 167 | ஜெ.திவாகினி 167 | த.ஆகாஷ் 167 | அ.கம்சவர்த்தனி 167 | ப.ஆராதனா 167



165 | ம.அரன் 165 | ம.கிதுர்ஷன் 165 | கி.சோபிகா 165 | மே.பிரகஷ்வினி 165 | க.டிரோஜன் 164 | கே.காவேரி 164 | றொ.தர்னியா 164 | நி.நிலானி 164 | ஜெஅக்கிஷன் 164



163 | ந.பிரியங்கா 163 | ச.அதிசயா 163 | தே.கஜவர்தன் 163 | பி.அபிசனா 163 | ற.ஆதித்தன் 163 | ப.தாரகன் 162 | க.அபினயா 162 | ஞா.வைஷ்ணவி 162 | ச.சிவானுகா 162



160 | ச.ஜானுசா 160 | றீ.இன.வென் ஜஸ்மின் 160 | நா.கேசவர்த்தினி 159 | கு.பிரவீனா 159 | பி.நிருஷ்ரிகா 159 | ச.கருணிகா 159 | ச.சசிந்த 159 | கே.ஷதுசன் 159 | சி.யோகிதன் 158



157 | கி.பெலிக்ஸ் கோணன்ரா 157 | ப.தரணிசன் 157 | ஜோ.அனந்திகா 157 | றொ.வினோஜன் 157 | சி.டக்சிகா 156 | யோ.சிவகாமி 156 | வி.விதுஜனன் 156 | ஸ்ரீ.ஸ்ரீசந்தோஷிகன் 156 | ச.ஹரிசன் 156



153 | சி.பவிநயனி 153 | ர.நிதுசன் 153 | ற.கஜனிகா 153 | க.புஜிதா 153 | அ.டெ.ரமீன்னா 152 | கி.சிவநுஜா 152 | க.அம்பிகா 152 | செ.விசாலன் 152 | யோ.ஆன்ஜொலின் 152

பற்ற மாணவர்கள்
ரிக்கு பாடசாலை

பாராட்டி வாழ்த்துவோர்:
**பாடசாலை அபிவிருத்திக் குழு, பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.**

(C/22976)(10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவம்பர் மாத எண் ஜோதிடப் பலன்கள்

## 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் விவாதங்கள், போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சுற்றியிருப்பவர்களின் சுய ரூபத்தை அறிவீர்கள். பழைய கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். அயல் நாடு செல்ல நுழைவிசைவு கிடைக்கும். சிலருக்கு வேற்றுமாவட்டத்தில் வேலை அமையும். பழைய வீட்டை இடித்துக் கட்டத் தொடங்குவீர்கள். சகோதரங்களின் அரவணைப்பு அதிகரிக்கும். ஆனால் பேச்சில் கடுமை காட்டாதீர்கள். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும். மாதத்தின் மையப்பகுதியிலிருந்து அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். திடீர் பணவரவு உண்டு. உறவினர் வீட்டு வைபவங்களில் கலந்துக் கொள்வீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். அரசியல்வாதிகள் எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப்பாருங்கள்.

**பெண்களுக்கு**

உங்களின் புதுத் திட்டங்களை பெற்றோர் ஆதரிப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். பங்குதாரர்கள், வேலையாள்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். கலைத்துறையினர்கள் பொது நிகழ்ச்சிகளில் தலைமை தாங்கும் அளவுக்கு பிரபலமாவீர்கள். மாறுபட்ட பாதையில் சென்று முன்னேறும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 5, 8, 15, 14, 24**
**அதிர்ஷ்ட எண்கள்: 1, 7**
**அதிர்ஷ்ட நிறங்கள்: ஒரேஞ், ஆலிவ் பச்சை**
**அதிர்ஷ்ட கிழமைகள்: புதன், வெள்ளி**

## 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் மாறுபட்ட அணுகுமுறையால் பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். ஒரு சொத்தைக் காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்க வேண்டிவரும். சகோதரிக்கு திருமணம் முடியும். சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் முதல் மரியாதைக் கிடைக்கும். மனைவி குடும்ப வருமானத்தை உயர்த்த சில ஆலோசனைகள் வழங்குவார். மனைவிவழி உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.
கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். ஆலயங்களைப் புதுப்பிக்க உதவுவீர்கள். குடும்பத் தினருடன் சுற்றுலாப் பயணம் சென்று வருவீர்கள். வேற்றுமொழி பேசுபவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். அவ்வப்போது முன்கோபம், காரியத் தாமதம், அலைச் சல் வந்துப் போகும். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை விரைந்து செலுத்தப் பாருங்கள். வழக்கில் வழக்கறிஞரை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்குள் உட்கட்சி பூசல் வெடிக்கும்.

**பெண்களுக்கு**

கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வியாபார ரகசியங்கள் எவர் மூலம் கசிகிறது என்பதை அறிந்து, புது முடிவு எடுப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி மட்டத்தில் செல்வாக்கு கூடும். கலைத் துறையினர்களுக்கு மூத்த கலைஞர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கொஞ்சம் அலைந் தாலும் அதற்கான பயனை அடையும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 4, 6, 8, 17, 26**
**அதிர்ஷ்ட எண்கள்: 5, 6**
**அதிர்ஷ்ட நிறங்கள்: கிரே, வெளிர் நீலம்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: செவ்வாய், வியாழன்**

**நாளை** ஐப்பசி-27
சனிக்கிழமை -12.11.2016
திதி: திரயோதசி பி.இ. 12.57
நட்சத்திரம்: ரேவதி மு.இ.08.42
ராகுகாலம்: 09.06-10.36 வரை
சுபநேரம்: [illegible]
சனிப்பிரதோச விரதம்

# அரசியல் கைதுகளா? கைதுகளில் அரசியலா?


பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் திடீர் கைது நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாகவே யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 13 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சொல்லப்படும் ஆவா குழுவில் இவர்கள் சேர்ந்து இயங்கினார்கள் - ஒத்தாசை வழங்கினார்கள் என்ற சந்தேகத்தில் கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அறிக்கையிட்டிருக்கின்றனர்.
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் வைத்தும் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அதற்கு முன்னரான கைதுகள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைத்து, ஆவா குழு உறுப்பினர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டவுடன்தான், இந்தச் சம்பவத்தை அரசியலாக்கும் கதைகள் வெளிவரத் தொடங்கின.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்த வரையில் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களைத்தான் அந்தக் கட்சி இதுவரை சந்தித்துள்ளது. இரண்டு தேர்தல்களிலும் மக்கள் ஆதரவை அந்தக் கட்சியால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் - அவரது தயவில் நடந்த ஊர்வலத்தில், தாமும் ஒரு பங்காளிகளாக - கூட்டுச் சேர்ந்து ஒட்டிக் கொண்டனர் மக்கள் முன் னணியினர். தமது அலுவலகத்தில் வைத்து ஆவா குழு என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞன் முதலமைச்சர் தலைமையில் நடந்த ஊர்வலத்தில் முன்னின்று செயற்பட்டவன், இந்த எழுச்சியை அடக்கவே அரசியல் ரீதியிலான பழிவாங்கலை முன்னெடுக்கவே ஆவா குழுச் சாயம் பூசப்பட்டு அவர் கைது செய் யப்பட்டார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.
இதற்கு மேலாகச் சட்டத்தரணியும், அந்தக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டவருமான மணிவண்ணன், ஆவா குழு என்ற ஒன்றே இல்லை என்று சாரப்படக் கருத்தை வெளியிட்டிருந்தார்.
கைது செய்யப்பட்ட இளைஞன் கடந்த காலங்களில் வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர். யாழ். நகரில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய் யப்பட்டவர். அவர் தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. இந்த இளைஞனை பிணையில் எடுத்தவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மணிவண்ணனின் சகோதரரே. அவரும் ஒரு சட்டத்தரணி.




தமது கட்சி ஆதரவாளர் கைது செய்யப்பட்டமைக்கான பின்னணி அறிந்திருந்தும், அதனை மறைத்துப் பூசி மெழுகி, தமது கட்சியின் மீது அனுதாப அலையை உருவாக்குவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முயற்சித்திருக்கின்றார்.
கஜேந்திரகுமார் சொல்வதைப்போல, அரசியல் ரீதியான பழிவாங்கலுக்காகவே இவ்வாறான கைதுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டதாக இருந்தால் ஏனைய 12 பேரும், எந்த அரசியலுடன் - எந்த ஊர்வலத்துடன் தொடர்புடையவர்கள் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.
இந்தக் கைது அரசியலுக்காக மேற்கொள்ளப்பட்டது அன்று. இந்தக் கைதை வைத்து, தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்துகின்றது என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வழிபாட்டினால் இறைவனை அறியமுடியும்



“புராண காலத்தில் துரோணாச்சாரியார் ஏகலைவனுக்கு வில் வித்தை கற்பிக்க மறுத்தார். இருந்தாலும் ஏகலைவன் துரோணாச்சாரியாரைப் போன்று ஓர் உருவம் அமைத்துநம்பிக்கையோடு குருபக்தி கொண்டு துரோணாச்சாரியாரே அதிசயிக்கும்படி பெரும் வில்லாளனாக மாற வில்லையா? ஏகலைவனால் செய்யப்பட்ட அந்த மண் சிலையா அவனுக்குச் சொல்லிக் கொடுத்தது? இல்லை மண்சிலையை அவன் தன் குருவாகவே நம்பினான் அந்த நம்பிக்கை அவனுக்குப் பயன் அளித்தது.

காரை எம்.பி. அருளானந்தன்

நம்முடைய சனாதன சமயத்துக்கு ஆணிவேர் போன்றது நமது நம்பிக்கை. நம்பிக்கை அருவமானது. வழிபாடுகள் உருவமுடையது. இப்படி உள்ளதை அறிந்து தெள்ளத் தெளிவாக அறிவப்பதுதான் சனாதன சமயம்.

இத்தகு சனாதன சமயத்தின் கண் தோன்றி, அனுபவத்தை ஆன்மிக எண்ணம் கொண்டு அறிவினால் அறிய வேண்டியவற்றை அறிந்து, அறிய வேண்டியவர்களுக்கு அறிவிப்பவர்களுக்குத் தான் “குருநாதர்”கள் என்று பெயர்.

பக்தி என்றால் பற்று என்று பொருள். இது உலகப் பற்று அல்ல, பற்றவேண்டியது எதுவோ அதைப் பற்றுவதற்குத் தான் பற்று- பக்தி என்பது பெயர். குருத்துவம் என்பது குருவின் பேரறிவு. அந்தக் குருவினிடத்தில் பற்று வைப்பதற்குத்தான் “குருபக்தி” என்று பெயர். பிறந்த குழந்தைக்குத் தன் தாயைத் தெரியும் . தாய் சொன்ன பிறகுதான் தன் தந்தையை அறிந்து கொள்ளும்.

இல்லாத ஒரு தந்தையை இவர்தான் உன் தந்தை என்று எந்தத் தாயும்கூறமாட்டாள். அதுபோல தாய் போன்று விளங்கும் சற்குருநாதன் இருக்கின்ற அந்த இறைவனை நாம் அறிய - அடைய வழிகாட்டுவார். தாயினும் சாலப் பரிந்தவர் சற்குருநாதன். தாய் தன்னுடைய நாதனைத்தான் காட்டுவாள். சற்குருவோ உலக நாதனையே காட்டுவார். தாயினிடத்தில் ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக நம் தந்தையை நாம் அறிகின்றோம். அதுபோல் தாயினும் சாலப் பரிந்த சற்குருவின் மீது எமக்கு நம்பிக்கை வருமானால் எல்லாம் வல்ல அந்த இறைவனை அறியமுடியும்.

**நம்பிக்கைதான் எல்லாமே**

இவ்வளவுக்கும் மூலகாரணமாக விளங்குவது நம்பிக்கை. நம்பிக்கை இல்லையென்றால் நமக்கு சன்மார்க்கமே இல்லை. உலகத்திலேயே சிறந்த வைத்தியர் ஒருவர், அவர் எப்போதுமே உயர்ந்த மருந்துகளைத் தான் கொடுப்பார். அந்த வைத்தியரிடத்தில் நம்பிக்கையே இல்லாவிடில் வியாதி எப்படிக் குணமாகும்?

ஒரு ரம்ளர் தண்ணீரை தரையில் ஊற்றுவோம். விழுந்த தண்ணீர் சிறிதளவாக இருந்தாலும் பெரிய அளவு பரந்து தரையை நனைக்கின்றது. இது நாம் கண்கூடாகக் காணும் காட்சி. விஞ்ஞான ரீதியாக உலகத்தைப் பார்க்கும்போது, இந்த பூமியானது முக்கால் பங்கு நீர் சூழ்ந்ததும் கால்பங்கு மட்டுமே நிலமாகவும் காணப்படுகிறது. ஆனால் நிலம் நனையாமல் நிலைத்திருக்கிறதே ஏன்? நமக்கு அவ்வளவு நம்பிக்கை. நீர்ப்பகுதி நிலப்பகு தியை ஒன்றும் செய்துவிடாது என்பதுதான் இந்த நம்பிக்கையின் காரணமாகத் தான் அதையும் மறந்து வாழ்கின்றோம்.

**ஏகலைவனின் குரு**

புராண காலத்தில் துரோணாச்சாரியார் ஏகலைவனுக்கு 'வில்வித்தை கற்பிக்க மறுத்தார். இருந்தாலும் ஏகலைவன் துரோணாச்சாரியாரைப் போன்று “ஓர் உருவம் அமைத்து நம்பிக்கையோடு “குருபக்தி” கொண்டு துரோணாச்சாரியாரே அதிசயிக்கும்படி பெரும் வில்லாளனாக மாறவில்லையா? ஏகலைவனால் செய்யப்பட்ட அந்த மண் சிலையா அவனுக்குச் சொல்லிக் கொடுத்தது? இல்லை. மண்சிலையை அவன் தன் குருவாகவே நம்பினான். அந்த நம்பிக்கை அவனுக்குப் பயன் அளித்தது.

பற்று என்றால் பக்தி-பக்தி என்றால் பற்று மனைவிக்கு கணவன் மீது பக்தி இருக்க வேண்டும். இப்படி உண்மையான பக்தி இருக்குமானால் கணவன் மூலம் அவள் எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம்.

தொழிலாளிக்கு முதலாளியிடத்தும்-தொண்டனுக்குத் தலைவனிடத்தும்-மந்திரிக்கு அரசனிடத்தும்-மாணவர்களுக்கு ஆசானிடத்தும் -சீடனுக்கு குருவினிடத்தும் பற்று அல்லது பக்தி இருந்தால் தான் எவர் மூலம் எதை எதை அடைய வேண்டுமோ அவரவர் மூலம் அதை அடையலாம். உள்ளதை உள்ளபடி அறிந்து அறிய வேண்டியவைகளை அறிவினால் அறிந்து, அதைப்புரிந்து கொள்வோமானால் அடைய வேண்டியவைகளை அடையலாம்.

இதைத்தான் நம்முடைய சனாதன சமயமும் சமயத்தில்தோன்றும் குருநாதர்களும் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அந்தத் தெளிவினால் நாமும் நம்பிக்கையோடு அறிய வேண்டியதை அறிந்து கொள்கிறோம் “வாழ்வு” என்பது இப்படித்தான் வாழ வேண்டும். எப்படி யும் வாழலாம் என்பது வாழ்வு அல்ல அதை தெரிவோம், அறிவோம்-வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# முட்டாள் சீடர்கள்



தோரணமலை என்னும் ஊரில் மடம் ஒன்று இருந்தது. அந்த மடத்தில் குருவும், சீடர்களும் தங்கி இருந்தனர். அவர்கள் அனைவருமே முட்டாள்களாக இருந்தனர்.

சீடர்கள் அனைவரும் ஒருநாள் பேசிக் கொண்டு இருந்தனர். அவர்களில் ஒருவன், "நம் குருவுக்குத் தேவையான பாலை நாம் அலைந்து திரிந்து வாங்க வேண்டி உள்ளது. சில நாள்களில் பால் கிடைப்பதே இல்லை. கிடைக்கிற பாலும், தண்ணீர்ப் பாலாகவே உள்ளது," என்றான்.

"நீ சொல்வது உண்மைதான். இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்றான் இன்னொருவன்.

உடனே மற்றொருவன், "நாமே ஒரு நல்ல பசு மாடு வாங்கி விட்டால் என்ன? வேலையும் குறையும். வேளா வேளைக்கு நல்ல பாலும் கிடைக்கும்," என்றான்.

"அப்படியே செய்யலாம்," என்றனர் மற்ற சீடர்கள்.

உடனே எல்லாச் சீடர்களும் குருவிடம் சென்றனர். மாடு வாங்கினால் நல்லது என்ற தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர்.

குருவும் இதற்கு ஒப்புக் கொண்டார். மாடு வாங்குவதற்காக சீடர்களிடம் பணத்தைத் கொடுத்தார்.

பணத்துடன் சீடர்கள் மாடு வாங்குவதற்காகப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டனர். வழியில் அவர்களின் எதிரே ஒருவன் வந்தான்.

அவனிடம், "எங்கள் குருவுக்கு ஒரு நல்ல பசு மாடு வாங்குவதற்காக வந்துள்ளோம். எங்கே கிடைக்கும்?" என்று கேட்டனர்.

இவர்களை முட்டாள்கள் என்று தெரிந்து கொண்டான் அவன், தன்னிடம் இருந்த முரட்டுப் பசு மாட்டை அவர்களிடம் தள்ளிவிட நினைத்தான்.

"என்னிடமே அருமையான பசுமாடு ஒன்று உள்ளது. வாருங்கள்... மாட்டைப் பார்க்கலாம்," என்று அவர்களை அழைத்துச் சென்றான்.

சீடர்களுக்கும் அந்த மாட்டைப் பிடித்து விட்டது.

"என்ன விலை?" என்று கேட்டான் ஒரு சீடன்.

"மற்றவர்களுக்காக இருந்தால் இருபத்தைந்து பணம். ஒரு பணம் குறைந்தாலும் விற்க மாட்டேன். நீங்கள் குருவுக்கு என்று கேட்பதால் இருபது பணத்துக்குத் தருகிறேன்" என்று இனிமையாகப் பேசினான் அவன்.

சீடர்களும் இருபது பணம் கொடுத்து அந்த மாட்டை விலைக்கு வாங்கினர்.

மாட்டை அவர்களிடம் கொடுத்த அவன், "நல்ல நேரம் தான் இந்த மாடு உங்களுக்குக் கிடைத்தது. நான் சொல்வதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பால் கறப்பதற்கு முன் இதன் கால்களைக் கயிற்றால் கட்ட வேண்டும். யாராவது ஒருவர் கொம்பைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு பால் கறந்தீர்களானால் மாடு ஏராளமாகப் பால் தரும்," என்றான்.

சீடர்கள் மாட்டை ஓட்டிக் கொண்டு குருவிடம் வந்தனர். நடந்ததை அறிந்த அவர், குறைந்த விலைக்கு மாட்டை வாங்கியதற்காகச் சீடர்களைப் பாராட்டினார்.

பால் கறக்கும் நேரம் வந்தது. ஒரு சீடன் ஓடிச் சென்று பால் கறக்கக் குவளை கொண்டு வந்தான்.

இன்னொருவன் பசுவின் காலைக் கட்டக் கயிறு கொண்டு வரச் சென்றான். கயிறு எங்கும் கிடைக்கவில்லை. வேறு வழி இல்லாத சீடர்கள் குருவை மாட்டின் அருகில் அமரச் சொன்னார்கள். அவரும் அப்படியே அமர்ந்தார். சீடர்கள் அவர் தலையில் இருந்த நீண்ட சடையால் மாட்டின் கால்களைக் கட்டினர்.

ஒரு சீடன் பால் கறக்கத் தொடங்கினான். ஆனால், அந்தப் பசுவோ உதைக்கத் தொடங்கியது.

இதைப் பார்த்த இன்னொரு சீடன் மடத்திற்குள் ஓடினான். பெரிய ஊது கொம்பை அங்கே கொண்டு வந்தான். அவர்களைப் பார்த்து, "மாட்டை விற்றவன் நம்மிடம் என்ன சொன்னான்? பால் கறக்கும் போது கொம்பைப் பிடிக்க வேண்டும் என்று சொல்லவில்லையா? நாம் அதை மறந்து விட்டோம். அதனால்தான் மாடு தகராறு செய்கிறது" என்ற அவன் கொம்பைப் பிடித்து ஊதினான்.

சத்தத்தைக் கேட்டு மிரண்டது மாடு. தன்னைப் பிடித்திருந்த சீடர்களை முட்டித் தள்ளி விட்டு ஓடத் தொடங்கியது. அதன் கால்களில் குருவின் சடை கட்டப்பட்டு இருந்ததால், அவரையும் இழுத்துக் கொண்டு ஓடியது. வேதனை தாங்காமல் அலறினார் குரு. மாடோ மிரண்டு ஓடிக்கொண்டே இருந்தது. அவருடைய சடை அறுந்ததால், மிகவும் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். முட்டாள் சீடர்களால் தனக்கு ஏற்பட்ட நிலைமையை எண்ணி வருந்தினார் குரு.

## வரலாற்றில் இன்றைய தினம்

1750 - திபெத்திய இளவரசர் கொல்லப்பட்டதையடுத்துலாசாவில் கலவரம் வெடித்தது.

1869 - விக்ரோறியன் பழங்குடி பாதுகாப்புச் சட்டம் ஆஸ்திரேலியாவில் நடை முறைக்கு வந்தது.

1960 - தென்வியட்னாம் ஜனாதிபதி நோடின் டியமுக்கு எதிரான இராணுவப் புரட்சி நசுக்கப்பட்டது.

1966 - ஜெமினி-2 நாசாவில் தொடக்கி வைக்கப்பட்டது.

1981 - அன்ரிகுவா மற்றும் பார்புடா ஐ.நா.சபையில் இணைந்தன.

1992 - முஸ்லிம்களைப் பாதுகாக்க ஆயுதங்களைச் சேகரிப்பது ஒரு சதிச் செயல் என்கிறார் முகம்மது.

1999 - வவுனியாநகர்வெறிச்சோடியுள்ளது. புலிகளின் அறிவிப்பையடுத்தே மக்கள் இடம்பெயர்ந்ததாக பாதுகாப்புத் தலைமையகம் அறிக்கையில் தெரிவிப்பு.


2006 - நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜுக்கு "மாமனிதர்" விருதை தேசியத் தலைவர் வழங்கிக் கௌரவிப்பு.

2006- ரவிராஜ் கொலை தொடர்பாக ஆராய்வதற்கு ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் விருப்பம்.

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## நிலாவில் கார் ஓட்ட முடியுமா?

நிலாவில் கார் ஓட்டி நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால், அங்கு ஓட்டியது பெட்ரோல் அல்லது டீசல் வண்டியோ அல்ல. காரணம், நிலாவில் காற்று இல்லாததால் இவ்வகை வண்டிகளை அங்கு இயக்க முடியாது. அங்கு ஓட்டப்பட்டது மின்சார வண்டிதான். பெட்ரோல் இஞ்சினை இயக்க ஒட்சிசன் தேவை. இல்லையென்றால் பிஸ்ரன் இயங்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா: உன் புருஷன் மந்திரியா இருந்தாலும் இன்னும் ஏன் பாயில படுக்கிறார்?
கீதா: அவருக்கு காலைல எழுந்திருக்கும் போதே எதையாவது சுருட்டனும்...





வெளிநாட்டிலிருந்து ஊருக்கு போய் பசங்களோட டீ குடிச்ச பிறகு...!
ஐந்நூறு ரூபா நோட்டை நீட்டுனா, வந்து ஒரு வாரம் ஆச்சுன்னு அர்த்தம்.
நூறு ரூபா நோட்டை நீட்டுனா, வந்து ரெண்டு வாரம் ஆச்சுன்னு அர்த்தம்.
சில்லறை கொடுத்தா, மூணு வாரம் ஆச்சுன்னு அர்த்தம்
பாக்கெட்டை தடவி சில்லறை இல்லைன்னு சொன்னா, லீவு முடியப்போகுதுன்னு அர்த்தம்...

ஏங்க நான் செத்துட்டா, உடனே நீங்க வேற கல்யாணம் பண்ணிப்பிங்களா?
அதெப்படி முடியும்?




பொண்ணு பார்க்கணும்..., பேசி முடிக்கணும்..., மண்டபம் பார்க்கணும்... எப்படியும்... ஒரு மாசமாவது ஆகும்.

நண்பன் அடிபட்டு கையிலை கட்டோட போட்டோ போட்டிருக்கான்...
அதுக்கு கீழ கமெண்ட்ல "பெறுக கிணறு சீக்கிரம்" என்று எழுதியிருந்தது!



என்னடானா GET WELL SOON க்கு மொழி பெயர்ப்பாம்!
அடேய்.. எங்கடா இருந்து வர்றீங்க?

# புதிய கூட்டணியில் உருவாகும் வேலையில்லா பட்டதாரி இரண்டாம் பாகம்



வேல்ராஜ் இயக்கத்தில் தனுஷ் நடித்து 2014-ஆம்ஆண்டுவெளிவந்த வேலையில்லா பட்டதாரி படம் சூப்பர் ஹிட் வெற்றியைப் பெற்றது.
தனுஷின் 25 ஆவது படமாக வெளிவந்த இந்தப் படத்தின் கதை மட்டுமில்லாது அனிருத்தின் பாடல்களும் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றன. இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் வெளியாகுமா? என்று ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது.
அந்த எதிர்பார்ப்பை முழுமை செய்யும் வகையில் தனுஷ் தனது அடுத்த படத்தைப் பற்றிய புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதன்படி, வேலையில்லாப் பட்டதாரி படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்கப்போவதாக அறிவித்தார். அந்தப் படத்தை கலைப்புலி எஸ்.தாணுவும், தனுஷின் வுண்டர்பார் பிலிம்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது.
இந்தப் படத்தை ரஜினியின் இளையமகள் சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்குகிறார். அனிருத், ஷான் ரோல்டன் என இரு இசையமைப்பாளர்கள் இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார்கள். அதேபோல் இந்தப் படத்தில் கதாநாயகி யார் என்பதை அவர் குறிப்பிடவில்லை.
இந்தப் படத்தின் படப்பிடிப்பு டிசெம்பரில் தொடங்கும் என்றும், தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் ஒரே நேரத்தில் படத்தையும் எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார். தனுஷ் கதையமைப்பில் சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கும் நிலவுக்கு என்மேல் என்னடி கோபம் படம் தான் தற்போது வேலையில்லா பட்டதாரி -2 ஆக மாறியிருப்பதாக கொலிவூட் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | | 7 | | 1 | | |
| 6 | | | | | 9 | | | |
| | 8 | 1 | | | | | | |
| 2 | | | | 1 | | | 4 | |
| | | | 7 | 5 | 4 | | | |
| | 7 | | | 8 | | | | 9 |
| | | | | | | 8 | 7 | |
| | | | 5 | | | | | 2 |
| | | 9 | | 3 | | 4 | | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 7 | 1 | 4 | 9 | 2 | 5 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 | 9 |
| 7 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 4 |
| 1 | 9 | 8 | 2 | 7 | 3 | 4 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 4 | 8 | 1 | 7 | 9 | 3 |
| 3 | 7 | 4 | 5 | 6 | 9 | 2 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி [illegible] 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சிறு செயலையும், நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். லாபம் பன்மடங்கு உயரும். குடும்ப பிரச்சினையில் சாதகமான தீர்வு கிடைக்கும். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள், இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு, வீட்டுத்தேவை திருப்திகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** முக்கிய செயல், நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாரான அளவில் இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கடகம்:** நல்லவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். லாபம் பன்மடங்கு உயரும். வெளியூர் பயணத்தால், மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** முக்கியமான செயல் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**கன்னி:** நண்பரின் ஆலோசனை, நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், நிர்ணயித்த இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் உயரும். குடும்பத்தில், மங்கல நிகழ்வு உண்டாகும். பதவி கிடைக்க யோகமுண்டு.

**துலாம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். எதிர்பார்த்த சுபச்செய்தி வீடு தேடி வரும்.

**விருச்சிகம்:** பேசுவதில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலங்களை பாதுகாப்பது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும். திடீர் வெளியூர் பயணம் செல்ல வாய்ப்புண்டு.

**தனுசு:** பலரும் பாராட்டும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்படும். சேமிக்கும் விதத்தில், வருமானம் வரும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், பிள்ளைகளின் வழியில் செலவழிக்க நேரிடும்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளை ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மீனம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

# பெண்களுக்கான சிகையலங்காரம்








1, 2 தலையின் நடுப்பகுதி தலை முடியை பிரத்தியேகப்படுத்தவும்.

3, 4 பிரத்தியேகப்படுத்திய முடியை மூன்றாகப்பிரித்து, பிரெஞ்சுப் பின்னல் அல்லது டச்சுப்பின்னலை பின்னிக் கொள்ளவும்.

5. பொனிரெய்ல் கட்டும் பகுதி வந்ததும் பின்னலை நிறுத்தி பொனிரெய்ல் கட்டவும். பின்னர் கூட்டிக்கட்டிய முடியில் சிறிதளவு எடுத்து வூல்பாண்டைச் சுற்றிக் கொண்டு கிளிப் செய்யவும்.

6 பங்கி போனிரெய்ல் சிகை அலங்காரம் தயார்.

## இது புதுசு



உரோமங்களை நீக்கும் மின் சாதனம் அறிமுகமாகியுள்ளது. உடலில் உள்ள உரோமங்களை நீக்கி அழகான உடலைப் பெற இந்தச் சாதனம் உதவும். இந்த் கருவி ஆயிரத்து 800 ரூபா வில் இருந்து விற்பனை செய்யப் படுகிறது.




# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 500 | – | 800 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | – | 400 | 400 | 550 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 800 | 500 | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 600 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | 500 | – | 800 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | – | 450 | – | 400 |
| விளை | 650 | 400 | 300 | – | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 200 | 300 | – | 200 | 400 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 350 | – | 350 |
| திரளி | 300 | 200 | 100 | – | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 500 | 100 | – | 400 | 250 | 350 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | 300 | 250 |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | 150 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 100 | 50 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 500 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | – | 400 | 300 | – |



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 50 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 50 | 60 | 50–120 | 60 | 40 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 140 | – | 100 |
| மரவள்ளி | 50 | 60 | 60 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 120 | 70 | 140 | 80 | 140 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 140 | 200 | 120 | 180 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 100 | 100 | 80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 80–100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25–30 | 70 | – | 30 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 80 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 50 | 80 | 80 | 70 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 | 30 | 60 | – | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 60 | 120 | 80 | 80 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 160 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 80 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 100 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 400 | 500 | 600 | 500 | 300 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 140 | 100 | 140 | – | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 80 | 80 | 80 | – | 100 |


# கரட் கேக்

## தேவையான பொருள்கள்

கோதுமை மா – ஒரு கப்
சீனி – ஒரு கப்
முட்டை – 2
கரட் துருவல் – ஒரு கப்
சோடா உப்பு – கால் தேக்கரண்டி
உருக்கிய பட்டர் – ஒரு கப்
முந்திரிப்பருப்பு – 10
ஏலப்பொடி – கால் தேக்கரண்டி
உப்பு – கால் தேக்கரண்டி

## செய்முறை

தேவையான பொருள்களை தயாராக எடுத்து வைக்கவும்.
ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் கோதுமை மா, உப்பு, சோடா உப்பு ஆகியவற்றை ஒன்றாகப் போட்டு நன்றாக கலந்து வைக்கவும்.
முட்டையை உடைத்து ஊற்றி கரண்டியால் அல்லது எக் பீட்டரால் நன்கு அடித்துக் கொள்ளவும்.
அதனுடன் சீனி, பட்டர் சேர்த்து கலந்துக் கொண்டு அதில் கோதுமை மாவை சிறிது சிறிதாக சேர்த்து கலக்கவும்.
கோதுமை, முட்டை கலவையில் முந்திரி, ஏலப்பொடி, கரட் துருவல் ஆகியவற்றைப் போட்டு நன்றாகக் கிளறி விடவும்.
கண்ணாடி பாத்திரத்தில் பட்டர் தடவி அதில் கலந்து வைத்துள்ள மாவை ஊற்றி சமமாக பரப்பி விடவும். பிறகு அந்தப் பாத்திரத்தை அவனில் 350 டிகிரியில் 30 நிமிடங்கள் பேக் செய்து எடுக்கவும்.
கரட் கேக் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினர் இனி இளநீரைக் குடிக்கட்டும்

## ஹிலாரியின் தோல்வியால் மகிழ்கிறார் கோத்தபாய

செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

பேராசிரியர் நவீன் டி சில்வாவின் 'எனது உலகத்தில் 30 வருடங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த டொனால்ட் ட்ரம்பிற்கு தடையாக, எதிரணி வேட்பாளருடன் தொக்கி நின்ற சிறுபான்மையினரே காரணமாக இருந்தனர். அதனால் ட்ரம்ப் வெற்றி பெறுவாரா என்பது கேள்விக் குறியாகவே இருந்தது.

அவர் தற்போது வெற்றி பெற்றுள்ள நிலையில் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவரின் அரசியல் கொள்கைகள் வரவேற்கத்தக்கவை. இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு இதனால் எந்தப் பாதிப்புகளும் ஏற்படாது.

இலங்கை இந்தச் சந்தர்ப்பத்தை உரிய விதத்தில் பயன்படுத்திப் பயனடைய வேண்டியது காலத்தின் தேவையாகும். தற்போதைய அரசின் வெளிநாட்டுக் கொள்கை இந்தச் சந்தர்ப்பத்தில் பயனடையும் வகையில் அமையுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அமெரிக்க வாக்காளர்களின் பக்கத்திலிருந்து பார்க்கையிலும் அந்த நாட்டுப் புத்திஜீவிகளின் கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கின்றபோதும் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த பராக் ஒபாமாவின் ஆதரவு ட்ரம்பிற்கு கிடைக்கவில்லை. எனவே அவர் தோல்வி அடையப்போவது உறுதி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதேநேரம் கறுப்பினத்தவர்களின் ஆதரவும் ட்ரம்புக்குக் கிடைக்காது என்ற கருத்துக்கள் மிகவும் வலுப்பெற்றிருந்தன.

அந்த நாட்டு வெள்ளையினப் பெரும்பான்மையினர் ஒன்று திரண்டு டொனால்ட் ட்ரம்பிற்கு வாக்களித்தன் காரணமாக அவர் சுலபமாக வெற்றி பெற்றார். இதனை இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களும் ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும். இதனால் உருவாக்கப்பட்ட கருத்தியலே மிக முக்கியமானதாகும்.

பெரும்பான்மை ஆதரவினால் மாத்திரம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அது சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பெரும்பான்மை வலுப்பெற்றால் மாத்திரமே சிறுபான்மையினரும் வலுப்பெறுவர். இந்தச் சிறந்த பாடத்தை நாம் தற்போது அமெரிக்காவிடமிருந்து கற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

அதேநேரம் ட்ரம்ப் என்பவர் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் போக்கிலிருந்து விடுபட்ட ஒருவர். அமெரிக்காவிலும் மக்கள் அரசியல்வாதிகளிடத்திலிருந்து தூரம் செல்கின்றனர். காரணம் அரசியல் தலைவர்கள் மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்ற முனைகின்றனர். மக்களை முட்டாளாக்கிவிடுவது இலகுவானது என்று எண்ணி அடுக்காகப் பொய்களைக் கூறி வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

இன்று எமது நாட்டிலுள்ள அமைச்சர்கள் கூறும் கருத்துக்களும் கூட எந்தவித அடித்தளமற்றதாகவும் வேடிக்கையானதாகவுமே உள்ளன. அதனால் மக்கள் அரசியல்வாதிகள் என்றாலே வெறுப்படையும் நிலை தோன்றியுள்ளது.

மனித உரிமை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் பேசப்படுகின்றன. மனித உரிமைகள் என்பதை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. எமது நாட்டு மக்களிடத்தில் மனித உரிமைகள் இயல்பாகவே நிறைந்துள்ளன. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் சபை இல்லாத பல விடயங்களை மனித உரிமைகள் என்ற பெயரில் எமது நாட்டினுள் புகுத்தப் பார்க்கின்றது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் இன்று எமது நாட்டின் மீது விடுக்கப்படும் அழுத்தங்களில் இருந்து விடுபடுவற்குச் சாதகமான காரணியாகவும் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி அமையும். ஒபாமாவின் காலத்தில் மனித உரிமை விவகாரம் பெரிதாக இருப்பதற்கும் ட்ரம்பின் வெற்றிக்குத் தடையாக இருந்தவர்களே காரணம். அதனால் ஹிலாரியின் வெற்றிக்காக தேங்காய் உடைத்த கூட்டமைப்பினர் தற்போது இளநீரைக் குடிக்கட்டும் - என்றார். (த-5)

# பச்சைத் தண்ணீர் பட்ஜெட் தாக்கல்

## எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை எதிர்க்கட்சிகளின் காரசாரமான விமர்சனம்

- வடக்கு-கிழக்குக்கு எதுவும் இல்லை-கூட்டமைப்பு
- குழந்தைத்தனமான வரவு-செலவுத் திட்டம் - மகிந்த அணி
- இது ஒரு பேய் பட்ஜெட்- மக்கள் விடுதலை முன்னணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாகச் சாடியுள்ளது. அத்துடன் மகிந்த அணி 'குழந்தை பட்ஜெட்' என்றும், மக்கள் விடுதலை முன்னணி 'பேய் பட்ஜெட்' என்றும் காரசாரமாக விமர்சித்துள்ளது.

தேசிய அரசின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளு மன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் உள் ளடக்கங்கள் பற்றி நிதி அமைச்சர் விரிவானதொரு விளக்கத்தை வழங்கினார்.

நிதி அமைச்சரின் உரை முடிந்ததும் நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதன் பின்னர் தேசிய அரசின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

'இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் இல்லை. மக்கள் இதை விளங்கிக் கொள்வார்கள். எனவே, வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகவே நாம் வாக்களிப்போம். அரசுக்கு எதிராக பரப்புரை முன்னெடுப்பதற்குரிய சிறந்ததொரு கருவியை நிதி அமைச்சர் எமக்கு வழங்கியுள்ளார்" என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, குழந்தை சைக்கிள் ஓட்டுவது போலவே தேசிய அரசின் வரவு-செலவுத் திட்டம் இருக்கிறது. எந்தவொரு மக்கள் நலத்திட்டங்களும் இல்லை-என்றார்.

'அரசுக்கு எதிராகச் சிறந்த வகையில் பரப்புரை முன்னெடுப்பதற்குரிய கருப்பொருளை வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி அமைச்சர் எமக்கு வழங்கியுள்ளார். அவருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது குறைநிறைகளை உரிய வகையில் சுட்டிக் காட்டுவோம் என்றார் உதய கம்மன்பில.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவும் வரவு-செலவுத் திட்டத்தை விமர்சித்துக் கருத்து வெளியிட்டார். அந்தக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தில் இந்த வரவு-செலவுத் திட்டமானது பேய் பட்ஜெட் என்று குறிப்பிட்டார்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்குச் சிறப்பு ஒதுக்கீடுகள் இல்லையென்பது குறைபாடாக இருக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

எதிரணி உறுப்பினர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டாலும், இது மக்கள் நலன்சார்ந்த-மக்களுக்குரிய வரவு-செலவுத் திட்டம் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இடித்துரைக்கின்றனர்.

'குறுங்கால, நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை பற்றி அரசு உரிய வகையில் தெளிவுப்படுத்தும் என்று மூத்த அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

'அரசுக்கு எதிராகப் பரப்புரை முன்னெடுப்பதற்கு வேறு வழியில்லையென்பதாலேயே மகிந்த அணி, எடுத்த எடுப்பிலேயே வரவு-செலவுத் திட்டத்தை விமர்சிக்கின்றது' என்று அமைச்சர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டார். (த-5)

# தமிழருக்கு ஏமாற்றம்

நல்லாட்சி அரசு நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்த 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் முழுமையாக ஓரம் கட்டப்பட்டுள்ளதாக சாந்தி சிறிஸ்கந்தராசா கவலை வெளியிட்டுள்ளார்.

போரினால் பேரழிவைச் சந்தித்த வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு போரினால் அழிந்த அவர்களது வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கும், வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கும் முடியாதுள்ள நிலையில் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாமை விசனத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# செல்பியால் மாட்டியது திருட்டுக் குழு

பட்டு அதில் செல்பியும் எடுத்துள்ளது. வீட்டிலிருந்தவர்கள் விழித்துக் கொண்டதால் செல்பி எடுத்த அலைபேசியையும் கைவிட்டுத் தப்பிவிட்டனர் திருடர்கள். ஆயினும் அலைபேசியில் இருந்த செல்பியால் அவர்கள் மாட்டிக் கொண்டனர்.

இந்த வினோதத் திருட்டு கோப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

கோப்பாய் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் திருடுவதற்கா இளைஞர் குழு ஒன்று திட்டமிட்டுள்ளது. அதற்காக 5 பே அடங்கிய குழு புறப்பட்டு அதிகாலை வரை அந்தப் பகு யிலுள்ள சனசமூக நிலையமொன்றில் பதுங்கியிரு துள்ளது. அதிகாலையில் வீடொன்றினுள் நுழைந்த அ தக் குழு அங்கிருந்த தங்கச் சங்கிலியையும் சில பொரு களையும் திருடியுள்ளனது. பின்னர் அங்கிருந்த வில யுயர்ந்த அலைபேசி ஒன்றையும் கண்டுள்ளது. அ அலைபேசியால் கவரப்பட்ட திருடர்கள் அதனை ஆராய் பார்த்ததுடன் அதில் செல்பியும் எடுத்துள்ளனர்.

அவ்வேளை, வீட்டுக்காரர்கள் சத்தம் கேட்டு விழித் கொண்டனர். இதனால் திருடர்கள் அலைபேசியை அ கேயே கைவிட்டு தப்பியோடியுள்ளனர். வீட்டிலிருந்தவர் அலைபேசியை ஆராய்ந்தபோது அதில் திருடர்களி படங்கள் பதிவாகியிருந்தமை கண்டறியப்பட்டது.

அதனை தொடர்ந்து பொலிசாரிடம் அலைபேசி படைக்கப்பட்டது. அது பற்றிய விசாரணையின்பே கோண்டாவிலைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞு கோப்பாயைச் சேர்ந்த 20 வயது இளைஞனும் கோப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப் 18 வயதுடைய இளைஞன் அண்மையிலேயே திருமண முடித்தவர் எனத் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்றுமுன்தினம் பெ ஸாரால் யாழ்.நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை இம்மாதம் 21 ஆம் திகதிவ விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் கட வருடம் கோழிப் பண்ணை ஒன்றில் கண்காணிப்பு க பொருத்தப்பட்டிருந்தமையை அறியாமல் பல சே களைத் திருடியதாகவும், பின்னர் கண்காணிப்புக் க வின் உதவியுடன் அவர் கைது செய்யப்பட்டதாகவும் வி விக்கப்பட்டது. (கு-4-

# சமூகப் பொருளாதார இடைவெளி 2020 இல் நீங்கும்

## வரவு - செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் அறிவிப்பு

மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் கருதிய சீர்திருத்தங்கள் மீது முக்கிய கவனமெடுக்கும்.

நாட்டை அபிவிருத்தியடையச் செய்யும் நோக்கிலான தேசிய முக்கியத்துவம் கொண்டமையும் பரந்த கொள்கைகளை உள்ளடக்கிய எமது தூர நோக்கை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது கொள்கை வழிக்காட்டல்கள் உந்துசக்தியாகின்றன. அவை ஆசியப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு உறுதியான உயர் வருமானப் பொருளாதாரமாக எழுச்சியடைவதை நெறிப்படுத்தும் திறன் வாய்ந்த சீர்திருத்தங்களின் அடைவு நிலையினை வசதியாக்குகின்றன.

அரசின் நடுத்தர கால தந்திரோபாயம் என்பது ஒரு உறுதிப்பாடுடைய, செயலூக்கமுடைய மிகப் பரந்த நடுத்தர வகுப்பினரை உருவாக்கக் கூடியவாறு பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், வருமான மட்டங்களை உயர்த்துதல், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறை சார்ந்த வேலை செய்யும் வகுப்பினர், நடுத்தர வகுப்பினர் மற்றும் அரச சேவை ஊழியர் போன்றோரது நிலவுரிமையை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் மீது மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அனைத்து கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் வறுமை ஒழிப்பு தொடர்பில் உறுதியான அக்கறை செலுத்தப்பட்டுள்ளது என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்துடன் முரண்படுவதில்லை; தன் நிலையில் ட்ரம்ப் விடாப்பிடி



உலக நாடுகளுடன் மோதல்போக்கை ஒருபோதும் கடைப்பிடிக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.

உலகமே எதிர்பார்த்துக் காத்திருந்த 58 ஆவது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிகப்பெரும் இடைவெளியில் வெற்றி பெற்று அமெரிக்காவின் 45 ஆவது ஜனா திபதியாகத் தெரிவானார் டொனால்ட் ட்ரம்ப். தேர்தல் அறிவிப்புக்கள் நேற்று முன்தினம் வெளியாகின. குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் போட்டியிட்டனர். 538 தேர்தல் தொகுதிகளில் 276 தொகுதிகளில் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானார் ட்ரம்ப். ஹிலாரிக்கு 218 தொகுதிகள் கிடைத்தன.

வெற்றிபெற்ற பின்னர் வழங்கிய உரையொன்றிலேயே ட்ரம்ப் உலக நாடுகளுடன் முரண்படப் போவதில்லை எனத் தெரிவித்தார். எனக்கு சில நிமிடங்களுக்கு முன்னர் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்டனிடமிருந்து வாழ்த்துச் செய்தியும் பாராட்டுச் செய்தியும் கிடைத்தது. அவர் எங் கள் வெற்றி குறித்துப் பாராட்டினார். நான் அவர் முன்னெடுத்த மிகவும் தீவிரமான பரப்புரைக்காக அவரைப் பாராட்டினேன்.

அமெரிக்கா தனது பிரிவினைக் காயங்களுக்கு முடிவு காண வேண்டிய தருணம் இதுவென நான் நேர்மையாக எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன். நாங்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும். அனைத்து குடியரசுக்கட்சியினருக்கும், ஜனநாயகக் கட்சியினருக்கும், சுயாதீன வேட்பாளர்களுக்கும் ஒரு தேசத்தின் மக்களாக இணையவேண்டிய தருணம் வந்துவிட்டது என நான் தெரிவிக்க விரும்புகின்றேன். நான் ஒரு சாராருக்கான ஜனாதிபதியல்ல. ஒவ்வொரு அமெரிக்கரினதும் ஜனாதிபதி. இதை ஒவ்வொரு பிரஜைக்கும் நான் உறுதியளிக்கின்றேன். இது எனக்கு மிக முக்கியமானது.

"பன்னாட்டு சமூகத்துக்கு நான் ஒரு விடயத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதாவது, நாங்கள் அமெரிக்காவின் நலன்களுக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கும் அதே வேளை, அனைவரையும் நியாயமாக நடத்துவோம். அனைத்து மக்களுக்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் நான் சில விடயங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதாவது, நாங்கள் பொதுவான நிலைப்பாடுகளையே அடைய முயல்வோம். மோதல்களை அல்ல. எனவே உலகத்துடன் முரண்படப் போவதில்லை" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

தனது தேர்தல் பரப்புரைகளிலும் ட்ரம்ப், உலகத்துடனும் ரஷ்யாவுடனும் அமைதியும் சுமூகமான உறவும் பேணக்கூடும். அமெரிக்காவின் வளர்ச்சிக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். (ம-எ)




# அச்சத்தில் முஸ்லிம்கள்

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையால் உலக முஸ்லிம்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் தெரிவுசெய்யப்பட்டார்.

தேர்தலின்போது ட்ரம்ப்பின் பரப்புரைகளில் முஸ்லிம்களுக்கு எதிராக அவர் கொண்டிருந்த கொள்கை பல அமெரிக்கராலும் விரும்பப்பட்டது, ஏற்கப்பட்டது.

அமெரிக்காவின் பள்ளிவாசல்கள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின்றிச் சோதனை செய்யப்படவேண்டும், அமெரிக்க முஸ்லிம்களைத் தனியாக அடையாளம் காண்பதற்காக அவர்களுக்கு விசேட அடையாள அட் டைகள் வழங்கப்பட வேண்டும். ஈராக், சிரிய முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் நுழையவிடக் கூடாது. அமெரிக்கா, அமெரிக்கர்களுக்கே என முழங்கித் தள்ளினார். இதனாலேயே பல அமெரிக்கர்கள் அவருக்கு வாக்களித்தனர்.

தற்போது அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ட்ரம்ப் தான் சொன்னவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தத் தொடங்கும் பட்சத்தில் அது அமெரிக்க முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் உலக முஸ்லிம் களுக்கே மிகப்பெரும் சிக்கலாக அமையும். (ம-எ)

## உலக வர்த்தகம் ஆட்டம்


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை அடுத்து பங்கு வர்த்தகத்தில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. தேர்தல் கருத்துக் கணிப்புகளை முன்வைத்து வர்த்தக முதலீடுகளை மேற்கொண்ட வர்த்தகர்கள் நட்டத்தை சந்தித்தனர்.

எதிர்பாராத விதமாக அமெரிக்க டொலர் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இதனையடுத்து தங்கம் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது. (ம-எ)

# ட்ரம்ப் எங்கள் அதிபர் அமெ. நகர்களில் ஆர்ப்பாட்டம்

வொஷிங்டன், நவ. 11

அமெரிக்க தேர்தலில் ட்ரம்ப் வெற்றியீட்டியதை அடுத்து பல்லாயிரக் கணக்கான மக்கள் நேற்றும், நேற்றுமுன்தினமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. அதில் 5 பேர் காயமடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.




அமெரிக்கத்தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. குடியரசு கட்சியின் முக்கிய வேட்பாளரான ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் முக்கிய வேட்பாளரான ஹிலாரியை வீழ்த்தி அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியானார். இதனை அடுத்து ட்ரம்பை ஜனாதிபதியாக ஏற்க முடியாது என ஹிலாரியின் ஆதரவாளர்கள் கொதித்தெழுந்தனர். சிக்காகோ, நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ், பிலடல்பியா, பொஸ்ரன், வொஷிங்டன் ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ஒட்டுமொத்தமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 'ட்ரம்ப் எமது ஜனாதிபதி அல்ல', 'அமெரிக்காவில் இனவாதம் இல்லை' போன்ற வாசகங்களை ஏந்திய பதாகைகளுடன் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்கள் கூட்டத்தை நோக்கி நபரொருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் காயமடைந்தனர். எவரும் உயிரிழக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

# தோல்வியை எதிர்பார்க்கவில்லை ஹிலாரி கிளிங்டன் வெளிப்படை

வொஷிங்டன், நவ. 11

அமெரிக்கத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் முக்கிய போட்டியாளரும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருமான ஹிலாரி கிளிங்டன் தோல்வியை எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் 58ஆவது தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. ட்ரம்ப் ஜனாதிபதியானார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹிலாரியின் தோல்வி அதிர்ச்சித் தோல்வி என வர்ணிக்கப்பட்டது. உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள்கூட அவ்வாறான ஒரு கருத்தையே தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் ஹிலாரியும் தோல்வியைத் தான் எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்தார். தேர்தல் முடிவு வெளியான பின்னர் "தேர்தலில் தோற்றதற்காக எனக்கு வாக்களித்த அத்தனை மக்களும் மன்னித்துக் கொள்ளுங்கள். நான்



ட்ரம்புக்குவாழ்த்துத்தெரிவித்தேன். அவர் தன்னுடன் இணைந்து செயலாற்ற என்னை அழைத்தார். ட்ரமப் அமெரிக்காவின் சிறந்த ஜனாதிபதியாகத் திகழ்வார் என நம்புகிறேன். ட்ரம்ப் எமது ஜனாதிபதி. அவரது தலைமைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

இந்த முடிவை நான் எதிர்பார்க்கவில்லை. தோல்விக்காக நாம் உழைக்கவில்லை. பாதுகாப்பான தலைமைத்துவத்தில் தான் நாம் இன்றுவரை உள்ளோம்.

இந்த நிகழ்வை அவதானிக்கும் [illegible] பெண்களின் முன்னேற்றம் சாத்தியமே" என ஹிலாரி மேலும் தெரிவித்தார். (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்புக்...

சித்திரவதை செய்ததோடு, அவர் உயிரிழந்த பின்னரும் அவரது உடலுக்கு அடித்துக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு கிளிநொச்சி நீதிவான் மன்றில் இடம்பெற்ற சுன்னாகம் பொலிஸாரின் சித்திரவதைக் கொலை வழக்கில் நேற்றுச் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நேற்று 9 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதோடு, உத்தியோக பூர்வ சாட்சியங்களின் சத்தியக் கூற்றுமூலம் அடுத்த தவணையில் பதிவு செய்யப்படும் என்று அரச சட்டவாதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் தடுப்பில் வைத்துச் சந்தேகநபர் சித்திரவதையின் பின் கொலை செய்யப்பட்டு, சடலத்தைக் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் வீசப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் வழக்கு, சுருக்க முறையற்ற விசாரணைக்காக நேற்றுக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்கம் சார்பாக அரச சட்டவாதி குமார் ரட்ணம் மன்றில் முன்னிலையாகினார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 5 பொலிஸ் அதிகாரிகளும் நேற்று மன்றில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் முற்படுத்தப்பட்டனர்.

நேற்று 9 சாட்சிகள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர். 2 ஆம் சாட்சி, சுமணன் கைகள் பின்னால் கட்டப்பட்டுக் கயிற்றினால் தாக்கப்பட்டார். 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை அவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதைத் தான் கண்டதாகத் தெரிவித்ததுடன், தாக்கிய பொலிஸ் அதிகாரிகளையும் மன்றில் அடையாளம் காட்டினார்.

3 ஆவது சாட்சி, 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி புன்னாலைக் கட்டுவன் பகுதியில், தாய் தந்தை அற்ற பிள்ளைகளுக்குப் புத்தகப் பைகள் வழங்கிக்கொண்டிருந்தேன். அங்கு வந்த பொலிஸார் மாவீரர் நாளுக்காக இவை வழங்கப்படுகின்றதா என்று கேட்டனர். இல்லை என்றேன். இந்த நிகழ்வில் சுமணனும் இருந்தார். பின்னர் நாம் உதவி வழங்குவதைப் புகைப்படம் பிடித்தனர். அன்றிரவு 10 மணியளவில் பொலிஸார் என்னைக் கைது செய்தனர். தனிநாடு வேணுமா என்று கேட்டுப் பொலிஸ் உத்தியோகத்தர் மயூரனும் தொடர்ந்து வேறு பொலிஸாரும் என்னைக் கடுமையாகத் தாக்கினார்கள்.

5 நாள்கள் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தார்கள். பின்னர் சுமணனைக் கைது செய்து கொண்டு வந்தார்கள். சிந்திக்க பண்டார மற்றும் பிரசாத் உள்ளிட்டவர்கள் சுமணனைக் கடுமையாகத் தாக்கினார்கள். பின்னர் சுமணனை வேறு அறைக்குக் கொண்டு சென்று தாக்கினார்கள். தாக்கியவர்களில் பிரசாத் உட்பட 3 பேர் இங்கு (நீதி மன்றில்) இல்லை என்று கூறியதோடு, தாக்கியதாக 2 பொலிஸாரை அடையாளம் காட்டினார்.

5 ஆவது சாட்சி, பொலிஸாரால் காட்டப்பட்ட அறிக்கையில், சுமணனின் சடலத்தைக் கிளிநொச்சியில் பெற்றுக்கொண்டதாக உள்ளது. ஆனால் கிளிநொச்சியில் சடலத்தைப் பெறவில்லை. மொனராகலை வைத்தியசாலையில் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார். எனக்கு மொனராகலை தெரியாது. ஆனால் தமக்கு மொனராகலை எனத் தெரிவித்தனர். பின்னர் பொலிஸ் அதிகாரியிடம் எவ்வாறு இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று கேட்ட போது, கைது செய்யப்பட்ட சுமணன் களவெடுத்த பொருள்கள் கிளிநொச்சியில் இருப்பதாகத் தெரிவித்ததை அடுத்து, அங்கு சென்றபோது தம்மிடமிருந்து (பொலிஸாரிடமிருந்து) தப்பிக் குளத்தில் வீழ்ந்து உயிரிழந்தார் எனத் தெரிவித்தார். சுமணனை எனக்குப் பழக்கமில்லை. அவரின் தம்பி தான் எனக்கு நெருக்கமானவர் என்று சாட்சியமளித்தார்.

அதனைத் தொடர்ந்து பொலிஸ் சாட்சிகள் சாட்சியமளித்தனர். நிலையப் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார பொலிஸ் கூண்டில் இருந்து சுமணனை வெளியில் எடுத்து விசாரித்தமை, பின்னர் தம்மிடம் ஒப்படைத்தமை தொடர்பாகவும் மன்றில் அடையாளம் காட்டினர்.

மற்றொரு சாட்சி வேறொரு வழக்கில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருப்பதனால், அவர் முக்கியமான சாட்சி என மன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. அதனால் நீதிமன்ற அனுமதியுடன் அவர் அழைத்து வரப்பட்டார்.

அவர் தனது சாட்சியத்தில்,

'என்னைக் கைது செய்து 9 பேர் தாக்கினார்கள். நானும் சுமணனும் ஒரு அறையில் தான் இருந்தோம். எனக்கு அடித்ததை விட சுமணனுக்கு அதிகமாக அடித்தார்கள். இறுதியில் சுமணன் உயிரிழந்துவிட்டார். உயிரிழந்த பின்னரும் பொலிஸார் சுமணனைத் தாக்கினார்கள். பொலிஸார் சாராயம் குடித்துவிட்டும் ஒவ்வொருவராக வந்து தாக்கினார்கள். இரண்டு மேசைக்கிடையில் கம்பியினால் கட்டிப் போட்டும் தாக்கினார்கள்.

பின்னர் நாங்கள் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். இறந்த சுமணனை ஜீப்பில் கொண்டு சென்றார்கள். எங்களை வைத்தியசாலையில் என்ன காயம் என்ற கேட்டால், மரத்தால் விழுந்ததாகக் கூறச் சொன்னார்கள். இந்த வழக்கில் இருந்து விடுபட வேண்டும் என்றால் சுமணன் இறந்த விடயத்தை வெளியில் சொல்லக்கூடாது என்றும், சொன்னால் வேறு வழக்குகள் எனக்கு எதிராகப் பதிவு செய்வோம் என்றும் பொலிஸார் அச்சுறுத்தினார்கள். நகங்களைப் பிடுங்கியும் சித்திரவதை செய்து விசாரணை செய்தனர்' என்று சாட்சியமளித்ததோடு சந்தேகநபர்களில் 4 பொலிஸாரை அவர் மன்றில் நேற்று அடையாளம் காட்டினார்.

இந்த வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரை இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 5 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடிக்கப் பட்டது. (த-வ-4-6)

## மானிய...

வெள்ளைப் பூடு, கடலை, வட்டானா பருப்பு, பால் மா, குழந்தைப் பால்மா, வெள்ளைக் கௌபி, சிவப்புக் கௌபி, கோழி இறைச்சி, முட்டை, தேங்காய் எண்ணெய், உப்பு, கொத்தமல்லி, அரிசி, மா ஆகியனவே மானிய விலையில் வழங்கப்படவுள்ளன. (த-5)

## ஒரு...

நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலை, ஒருவார காலத்துக்குள் அங்கிருந்து அகற்றப்படும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என அமைச்சர் ஹக்கீமின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அலரிமாளிகையில், அமைச்சர் ஹக்கீமுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், செவ்வாயன்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே, பிரதமர் மேற்கண்ட வாக்குறுதியை வழங்கினார் என்று அமைச்சர் ஹக்கீமின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான தயா கமகே, குறித்த புத்தர்சிலை தொடர்பில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பற்றி அமைச்சர் ஹக்கீம், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் இதன்போது எடுத்துரைத்தார்.

இவற்றைச் செவிமடுத்த பிரதமர், பலாத்காரமாக நிறுவப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்ற ஒருவார காலம் அவ காசம் கேட்டுக்கொண்டதுடன், அதற்கான நடவடிக்கைகளைத் தான் முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தார். இந்தப் பேச்சில் அமைச்சர் மனோ கணேசனும் பிரசன்னமாகி இருந்தார் என ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது. (த-ய)

## மைத்திரி...

யமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுச் சபையில் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் சில நிமிடங்கள் மந்திராலோசனையில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதையடுத்து ஒரு சில நிமிடங்களில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வரவு-செலவுத் திட்ட உரையை நிகழ்த்த ஆரம்பித்தார். நிதியமைச்சர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது 2.15 மணியளவில் சபைக்குள் பிரசன்னமானார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அமர்வு ஆரம்பிக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ.தே.க சு..கவின் மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சபையில் அமர்ந்திருந்தனர்.

இதன்போது சபைக்குள் பிரசன்னமாகி தனது ஆசனத்தில் அமர்ந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது அருகிலிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடினார். இவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது அந்த இடத்துக்கு வந்தார் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர. பின்னர் மூவரும் சேர்ந்து ஒரு சில நிமிடங்கள் மிகவும் தீவிரமாகக் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள ச்மரவீர அவ்விடத்திலிருந்து சென்று தனது ஆசனத்தில் அமர்ந்தார். இதன் பின்னர், நிதி அமைச்சரின் வரவு-செலவுத் திட்ட உரையைச் சிறிது நேரம் செவிமடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுமார் 2.45 மணியளவில் சபையிலிருந்து வெளியேறினார். (த-5)

## அயலுறவு...

அதுல் கெசாப் சூசகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனநாயக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்து குடியரசுக் கட்சியின் ஆட்சி அமெரிக்காவில் மலர்ந்துள்ளதால் அந்த நாட்டின் அயலுறவுக் கொள்கை குறிப்பாக இலங்கை மீதான நிலைப்பாடு மாற்றமடையும் என்று தெரிவிக்கப்படும் நிலையிலேயே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கெசாப் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'2015 ஆம் ஆண்டு இலங்கை மக்கள் எவ்வாறு ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்தார்களோ அவ்வாறு அமெரிக்க மக்களும் வாக்களித்துள்ளனர்' என்று கெசாப் குறிப்பிட்டார். ஆட்சி மாற்றத்தின் காரணமாக அயலுறவுக்கொள்கை மாற்றமடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

'எந்த ஒரு நாட்டையும் போன்று அமெரிக்க அயலுறவுக் கொள்கை என்பது அமெரிக்காவின் தேசிய நலன்களையும் - தேசிய விழுமியங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. அமெரிக்க மக்களின் விழுமியங்கள் நிர்வாகங்கள் மாறுகின்றபோதும் கூட பொதுவாகவே அது தொடர்ச்சித் தன்மையுடையதாகவே உள்ளது' என்று கெசாப் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் அயலுறவுக் கொள்கை முன்னர் இருந்ததைப் போன்றே இருக்கும் என்று தனது அனுபவத்தின் அடிப்படையில் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்தார்.

'என்னுடைய (இராஜாங்கத்திணைக்கள) தொழில்சார் வாழ்க்கையில் அயலுறவுக் கொள்கைகளில் பெருமளவில் தொடர்ச்சித் தன்மை இருந்தமையை நான் கண்ணுற்றுள்ளேன். ஏனெனில் அயலுறவுக் கொள்கையென்பது நிறுவனங்கள், அமெரிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அமெரிக்க அரசமைப்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. அமெரிக்க ஜனாதிபதி இதனடிப்படையிலேயே அயலுறவுக் கொள்கை மீதான அதிகாரத்தைத் தன்னத்தே கொண்டிருக்கின்றார்' என்று கெசாப் குறிப்பிட்டார். (த-5)

## கண்ணீர்க் காணிக்கை

♣ எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான **திருமதி மருபியா இராஜபார்த்திபனின்** தந்தையார் **அமரர் பரமு நவரட்ணம்** அவர்களதும் (30.10.2016)

♣ எமது கல்வி வலய சங்கீத ஆசிரிய ஆலோசகர் **திருமதி சாந்தினிமாலா தர்மராஜனின்** தாயார் அமரர் **திருமதி மங்கையர்க்கரசி மார்க்கண்டு** அவர்களதும் (06.11.2016)

மறைவையொட்டி அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**யாழ்.கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் செல்வநேசா (தங்கராசா)



தச்சன்தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்வநேசா (தங்கராசா) கடந்த 05.11.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 06.11.2016 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி **யோ.தங்கமலர்**
(ஆசிரியை)

தச்சன்தோப்பு,
கைதடி.

(j/6031) (10,19)

### திருமதி இராசலட்சுமி இராசதுரை



அரியாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இராசதுரை நேற்று (10.11.2016) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பு இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, இராசகிளி, இராசரத்தினம், இராசேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டாக்டர் த. துரைராஜா, காலஞ்சென்ற இ. தவமணிதேவி மற்றும் திருமதி க.கமலா தேவி, த. தவேந்திரராஜா (முன்னைநாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டி) த. செல்வநேசன், இ.சின்னப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, இ.பொன்மணி, சுப்பிரமணியம் ஆகி யோரின் மைத்துனியும், இராஜிகுமார் (யா/கலட்டி றோ.க.பாடசாலை) செல்வனா, தர்சனா, காலஞ்சென்ற தர்சன்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், திருமதி இ. கேமாவதி (யா/சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை) இ. ஜங்கரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், இ. பவிஷானின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2016) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் **இ.ராஜிகுமார்**
**0778543892**

'செல்வநிலா'
மயிலிட்டி, அல்வாய்.

(N(173) (10,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீருக்காகத் தினமும் 11 கி.மீ. அலையும் அவல நிலை

## வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தை அண்டியுள்ள பிரதேச மக்கள் கவலை

யாழ்ப்பாணம், நவ.11

வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தை அண்டியுள்ள பிரதேசங்களில் நன்னீர் இன்மையால் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. 250 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இலங்கை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் வல்லிபுரப் பிரதேசத்திலிருந்து தொண்டமானாறு வரை குழாய்கள்மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது. வல்லிபுரப் பிரதேசத்திலிருந்து 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஜே/466 வல்லிபுரம் மற்றும் ஜே/417 துன்னலை வடக்கு ஆகியன இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. ஜே/416 பிரதேசத்தில் 250 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்கள் அனைவரும் 11 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் கடந்து, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் உள்ள பொது குழாய் நீரிலேயே அதிகாலையிலும், மாலையிலும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

250 குடும்பங்களும் ஆலய வாயிலில் உள்ள 2 தண்ணீர்க் குழாய்களையே நம்பியுள்ளனர். குடிதண்ணீர் வழங்கும் நடைமுறையானது நீண்ட வருடங்களாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக உள்ளது. மழை காலங்களில் பெண் குடும்பங்கள் தண்ணீர் எடுத்து வருவது பெரும் சிரமமாகும். இது குறித்து விரைந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

முதலில் பிரதான வீதிகளூடாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. உட்பகுதிகளுக்கான வேலைகள் கட்டம்கட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. துன்னாலை வடக்கு மற்றும் வல்லிபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக 28 மில்லியன் ரூபா நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் - என யாழ்.மாவட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய பொது முகாமையாளர் தெரிவித்தார். (ற-10,26)


### விசேட பொதுக்கூட்டம்

யா/ தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற பழைய மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர்**

**யா/ தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி**


# விஞ்ஞானமானி கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ.11

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இயற்கை விஞ்ஞானங்கள் பீடத்தால் 2016/2017ஆம் கல்வி ஆண்டுக்குரிய விஞ்ஞானமானி பட்டக் கற்கை நெறி நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பதாரி க.பொ.த. உயர்தர கணித அல்லது விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவராக அல்லது இலங்கை பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விஞ்ஞான அத்திபாரப் பாட நெறியில் சித்தியடைந்தவராகவோ இருக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை www.ou.ac.lk எனும் இணையத்தளத்தில் விண்ணப்பங்களை பெற முடியும். மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்துக்கு நேரடியாக வந்து பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது. (ற-8)


# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத் தொகுதிகள் என்பன குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2017

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 25.11.2016 வெள்ளிக்கிழமை பி.ப 3.00மணிவரை.

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 28.11.2016 திங்கட்கிழமை நண்பகல் 12.00மணி வரை.

கேள்விகள் திறக்கப்படும் திகதி : 28.11.2016 திங்கட்கிழமை பி.ப 2.00மணி.

| இல | குத்தகைவிவரம் | மாதவாடகை | ஆகக் குறைந்தகேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டிமலைவேம்படிச் சந்தை | - | 50,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | மல்லாகம் பொதுச்சந்தை | - | 93,610.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 250.00 |
| 04 | மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 331,100.00 | 10,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 29,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | கும்பலைமாட்டிறைச்சிக்கடை | 1250.00 | 272,912.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் சந்தைகோழிக்கடை | 1,750.00 | 495,110.00 | 10,000.00 | 1,000.00 |
| 08 | அளவெட்டிமலை வேம்படிகோழிக்கடை இல - 06 | 1,000.00 | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | அளவெட்டிமலை வேம்படிஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 1,000.00 | 19,250.00 | 1,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | - | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக்கடை | 1,050.00 | 55,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கீரிமலைமரக்கறிசந்தை | | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | - | 82,500.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 113,300.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 69,850.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு :

- மாதவாடகையாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்களமதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாளஅட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடைநடத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவிதநிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதியகாரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்குமுத்திரையிட்ட கடிதஉறையில் குறித்ததினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை "பிராந்தியஉள்ளூராட்சி உதவிஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்,யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை,அளவெட்டிமலை வேம்படிசந்தை, கூத்தன்சீமாசந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லதுவேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டிமலைவேம்படிசந்தை, கூத்தன்சீமாசந்தை, கும்பலைச் சந்தை, கீரிமலைமரக்கறிசந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறுஎவ்விடத்திலும் கோழிஇறைச்சிவிற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- சந்தையைகுத்தகைக்கு எடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

**வலிகாமம் வடக்குபிரதேச சபை.**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**
11.11.2016

திரு.இராமலிங்கம் பகீரதன்
செயலாளர்
வலிகாமம் வடக்குபிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).



MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்**

அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள் அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகின்றது.

காலம் :- 12.11.2016 தொடக்கம் 17.11.2016 வரை
நேரம் :- பிற்பகல் 5 மணி தொடக்கம்
தலைமை :- மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் (தலைவர் யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
பயிற்சி வழங்குபவர் :- மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு - இந்தியா)

**பயிற்சிகள்**

1. காயகல்ப பயிற்சி
2. எளியமுறை உடற்பயிற்சிகள்
3. எளியமுறை தியானப் பயிற்சிகள்
4. அகத்தாய்வுப் பயிற்சிகள்

**அகத்தாய்வு I பயிற்சி**

அகத்தாய்வு I பயிற்சியானது 12.11.2016. 13.11.2016 சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.
(இதில் மீள்பயிற்சி பெற விரும்புபவர்களும் பங்குபற்றலாம்)

**'மௌனம்'**

14.11.2016 பௌர்ணமி தினத்தன்று அறிவுத்திருக்கோவிலில் அனுஷ்டிக்கப்படும் மௌனத்தில் மனவளக்கலை பயின்ற அன்பர்கள் மற்றும் விரும்புபவர்களும் கலந்துகொள்ளலாம்.

நேரம்:- காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை.

பதிவுகளுக்கு :- 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அறிவுத்திருக்கோவில்
31,பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடி முறைக்கு தமிழரல்லாதோருக்கு அனுமதி

## வடக்கு முதலமைச்சரிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, நவ.11

முல்லைத்தீவு, களப்புப் பகுதியில் தடை செய்யப்பட்ட தொழில்முறைகளை தமிழர்கள் அல்லாதோர் மட்டும் மேற்கொள்வதற்கு நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்வாறு மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா வடக்கு முதலமைச்சரிடம் முறையிட்டுள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு நேற்று வடக்கு முதலமைச்சர் சென்றார். அதன்போதே இதுகுறித்து சமாசத் தலைவர் இவ்வாறு முறையிட்டார்.

சமாசத் தலைவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு - திருகோணமலை எல்லைப் பிரதேசத்தில் உள்ள களப்பு பகுதியில் கூட்டுவலை, இயந்திரப் படகு தொழில் முறைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டன என்று அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்த வேண்டிய நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் தமிழர்கள் அல்லாதோர் மட்டும் மேற்கொள்ள எழுத்து மூலமான அனுமதி வழங்கி யுள்ளார்.

இது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பணிப்பாளரும் கலந்து கொண்டிருந்தார். குறித்த தொழிலை தடை செய்யுமாறு மாவட்ட செயலாளர் கோரியிருந்தார்.

குறித்த விடயத்தை உடன் எழுத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் தடை செய்யப்படும் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் ஏப்ரல் 27ஆம் திகதி மாவட்டச் செயலாளர் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கடிதம் அனுப்பியிருந்தும் இன்று வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சிங்கள மீனவர்களும் முஸ்லிம் மீனவர்களும் தடை செய்யப்பட்ட முறையிலான தொழில் முறைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. குறித்தவிடயத்தில்கவனம்செலுத்தி, மேற்படி சட்டவிரோத தொழில் முறைகளைத் தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கோரியுள்ளோம் - என்றார். (ந-101)

> முல்லைத்தீவு – திருகோணமலை எல்லைப் பிரதேசத்தில் உள்ள களப்பு பகுதியில் கூட்டுவலை, இயந்திரப்படகு தொழில் முறைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்று அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது

# முல்லை. மாவட்டத்துக்கு மேலும் ஆயிரம் வீடுகள்

முல்லைத்தீவு, நவ. 11

மீள்குடியேற்ற அமைச்சால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு புதிதாக ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவை மாவட்டத்தைச் சேர்ந்த வீட்டு தேவை யுடைய பயனாளிகளுக்கு புள்ளித் திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது பிரதேச செயலக ரீதியாக பயனாளிகளை புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி பட்டியலிடும் நடவடிக்கையில் பிரதேச செயலக அதிகாரிகள் ஈடுப்பட்டுள்ளனர். இடம்பெயரும்போது குடும்பமாக இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்தவர்களுக்கு 15புள்ளிகளும், மீள்குடியமர்வின் பின்னர் புதிய குடும்பமாக பதிவு செய்தவர்களுக்கு 10புள்ளிகளும், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைகளுக்கான புள்ளிகளாக ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 5 புள்ளிகளும், 3 தொடக்கம் 5 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 7 புள்ளிகளும், 5க்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 10 புள்ளிகளும், குடும்பங்களின் வருமானமாக மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை பெறும் குடும்பத்துக்கு 10 புள்ளிகளும், 10 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட வருமானத்தை பெறும் குடும்பத்துக்கு 7 புள்ளிகளும், 20 ஆயிரம் ரூபா முதல் 25ஆயிரம் ரூபா வரை வருமானத்தைப்பெறும் குடும்பத்துக்கு 5புள்ளிகளும் இடப்படுகின்றன.

குடிசைகளில் வாழும் குடும்பமாயின் 10 புள்ளிகளும், பெண் தலைமைத்துவக் குடும்பமாயின் 10 புள்ளிகளும், போரில் குடும்பத்தில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர் உயிரிழந்து அல்லது ஊனமுற்றிருந்தால் 10 புள்ளிகளும், குடும்ப அங்கத்தவர் எவரேனும் புனர்வாழ்வு பெற்றிருந்தால் 10 புள்ளிகள் இடப்பட்டு அதில் முன்னிலையில் உள்ளவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படும். ஏனையோருக்கு அடுத்த கட்டத்தில் வழங்கி வைக்கப்படும் - என்றார். (ந-7,102)


## ஆண்டுகள் ஐந்து ஆகியும் ஆறாத நினைவுகளுடன்.....

'ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது'

தோற்றம்
01 . 01 . 1934



மறைவு
11 . 11 . 2011

### அமரர் கபிரியேற்பிள்ளை மரியாம்பிள்ளை


ஐந்து ஆண்டுகள் மறைந்து விட்டன தந்தையே!
அகலுமா உங்கள் பிரிவின் வேதனை
எம் கண்ணீருக்கும் தடைபோட முடியவில்லை
உங்கள் நினைவுகளுக்கும் தடைபோட முடியவில்லை
எங்களை நிர்க்கதியாய் விட்டு எங்கு சென்றீர்கள் தந்தையே!
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து விட்டு
எங்குதான் சென்றீரோ தந்தையே!

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### ஆறுப்பிள்ளை புஸ்பரத்தினம்



தோற்றம் 1943.12.22 மறைவு 2016.11.10

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை புஸ்பரத்தினம் நேற்று (10.11.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(11.11.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

(J 6012) (14.18.21)

தகவல்:
குடும்பத்தினர்.

077 187 8159/ 077 417 7030



பிறப்பு 25 . 05 . 1982 இறப்பு 04 . 11 . 2016

### சஞ்ஜீத்தா ஜுலியா விமலச்சந்திரன்

இலங்கை, மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் மொன்றியல், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சஞ்ஜீத்தா ஜுலியா விமலச்சந்திரன் மொன்றியலில் 04.11.2016 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சோமசுந்தரம் விமலச்சந்திரன், முத்துத்தம்பி சறோஜினிதேவி தம்பதிகளின் மூத்தமகளும், ஸ்ரீவன், சிமியோன், சிம்சோன், சுசன்னா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரோன் சஞ்ஜேய், ஆபேல் தனுஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (12.11.2016) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தெய்வானைப்பிள்ளை முத்துத்தம்பி (பேர்த்தியார்)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(J/6025) (11,18,21)



### திருமதி செல்வராணி (மணி) காசிநாதன்

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி காசிநாதன் நேற்று (10.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து காசிநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், சுதர்சினி (லண்டன்), கொங்காதரன் (சுவிஸ்), சுதாகரன் (யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்), கிருபாகரன் (லண்டன்), பத்மலோஜினி, மனோகரன் (கனடா), சசிகரன் (உதவிப் பணிப்பாளர் - கைத்தொழில் அபிவிருத்திச்சபை - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கா.சுதாகரன் (மகன் - யா/மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்) - 077 612 4276, கா.சசிகரன் (உதவிப்பணிப்பாளர் - கைத்தொழில் அபிவிருத்திசபை, கிளிநொச்சி) - 077 881 3176

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லெண்ணத் தூதுவரானார் நட்சத்திர வீரர் ராகுல் ராவிட்

பார்வையற்றோருக்கான இரண்டாவது உலகக்கிண்ணத் தொடருக்கான நல்லெண்ணத் தூதுவராக இந்திய அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர வீரருமான ராவிட் நியமிக்கப்பட்டார்.

பார்வையற்றோருக்கான இரண்டாவது உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி முதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை உட்பட 10 அணிகள் பங்கேற்கின்றன. இந்தத் தொடருக்கான நல்லெண்ணத் தூதுவராகவே ராவிட் நியமிக்கப்பட்டார்.

பார்வையற்றோர் கிரிக்கெட் சிறிய அளவில் தொடங்கியது. அதை பிரபலப்படுத்த போதிய வாய்ப்பு கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக அவர்களுக்கான ஆட்டங்கள் வேகமாக வளர்ந்து வருகிறது. அது சரியான திசையில் பயணிக்கிறது. அந்த வீரர்களிடம் அற்புதமான திறமைகள் இருக்கின்றன என ராவிட் தெரிவித்தார். (ம)



## பதிலடி கொடுக்குமா ஆஸி. இரண்டாவது ஆட்டம் நாளை

தென்னாபிரிக்கா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள்–முதலாவது ஆட்டம் உலகின் வேகமான ஆடுகளமான பேர்த்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றது. ஆஸியின் கோட்டையான குறித்த மைதானத்தில் ஆஸியைச் சாித்து அபார வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. இரண்டாவது ஆட்டம் ஓவல் மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது.

இந்த ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே தொடரில் தனது இருப்பை தக்கவைக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நெருக்கடி ஆஸிக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக தோல்வியடைந்தாலோ அல்லது சமநிலையில் முடிந்தாலோ அது ஆஸ்திரேலியாவுக்கு பெரும் பின்னடைவைக் கொடுக்கும். (ம)





# ரங்கன கேரத் மீண்டும் அபாரம் வழித்துத் துடைத்தது இலங்கை

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என வழித்துத் துடைத்தது இலங்கை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இலங்கை 504 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தனஞ்சய சில்வா 127 ஓட்டங்களையும், குணரத்ன 116 ஓட்டங்களையும், தரங்க 79 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திரிபானோ, கிரீமர் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மசகட்சா இரு இலக்குகளையும், மொவ்பு, வோலர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே 272 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சறி 80 ஓட்டங்களையும், எர்வின் 64 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 58 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

232 ஓட்டங்களுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய இலங்கை 258–9 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதிகபட்சமாக கருணாரத்ன 88 ஓட்டங்களையும், குசல் பெரேரா 62 ஓட்டங்களையும், குணரத்ன 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளையும் மும்பா 3 இலக்குகளையும், மோவ்பு, திரிபானோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

சிம்பாப்வேக்கு இலக்காக 491 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நான்காம் நாள் முடிவில் சிம்பாப்வே 180–7 என்றிருந்தது. எர்வின் 65 ஓட்டங்களுடனும் திரிபானோ ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் களமிறங்கினர்.

பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். 72 ஓட்டங்களுடன் எர்வினை வீழ்த்தினார் கேரத்.

மும்பா, மோவ்பு இருவரும் அவரிடத்தில் சிக்க முடிவில் 233 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே. பந்துவீச்சில் கேரத் 8 இலக்குகளையும் குமார, சில்வா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக் கேரத்தும், தொடராட்ட நாயகனாக கருணாரத்னவும் தெரிவாகினர். (ம)

## விடைபெறுகிறார் றொபின் பீற்றர்சன்

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான றொபின் பீற்றர்சன் பன்னாட்டு, முதல்தர ஆட்டங்கள் அனைத்திலுமிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

2002ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணிக்காக அறிமுகமான பீற்றர்சன் இதுவரை 15 டெஸ்ட், 79 ஒருநாள், 21 ரி–20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

கடந்தபலமாதங்களாக அணியிலிருந்து புறக் கணிக்கப்பட்டிருந்த அவர் அணிக்குத் திரும்பாமலேயே நேற்றுமுன்தினம் தனது அறிவிப்பை வெளியிட்டார். (ம)



# களத்தடுப்பால் பின்னடைவு சஞ்சய் பங்கர் தெரிவித்தார்



முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி எழுச்சி பெற்றமைக்கு இந்தியாவின் மோசமான களத்தடுப்பே காரணம் என குற்றஞ் சாட்டினார் அந்த அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளரான சஞ்சய் பங்கர்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இங்கிலாந்து அணி சுழலுக்குத் தடுமாறும் தன்மை கொண்டதால், அந்த அணி தடுமாறும் காட்டும் என்று பொதுவாகக் கணிக்கப்பட்டது. ஆனால் ஐந்நூறுக்கும் அதிகமான ஓட்டங்களை இங்கிலாந்து குவித்தது.

இங்கிலாந்தின் இந்த எழுச்சிக்கு இந்தியாவின் களத் தடுப்பைக் குற்றஞ் சாட்டினார் சஞ்சய்.

இந்திய அணியின் சுழல் வீரர்களான அஸ்வின், ஜடேயா வேகப் பந்து வீச்சாளர்களான உமேஸ், ஷமி ஆகியோர் தமது இயல்பான ஆட்டத்தை சிறப்பாகவே வெளிப்படுத்துகின்றனர். இங்கிலாந்து அணி ஐந்நூறுக்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்தமைக்குக் காரணம் இந்தியாவின் களத்தடுப்பு மோசமாக அமைந்தமையாலேயே.

முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அலிஸ்டர் குக்கின் வாய்ப்பை ரகானே தவறவிட்டார். பின்னர் கோக்லி, மீண்டும் ரகானே என வாய்ப்புக்கள் வீணடிக்கப்பட்டன. இது இங்கிலாந்து மனதளவில் பலம்பெற காரணமாக அமைந்தது. இதனாலேயே அந்த அணி எழுச்சி கண்டது என சஞ்சய் மேலும் தெரிவித்தார். (ம)

## கலந்துரையாடல்

கரணவாய், நவ. 11

வடமாகாண பாடசாலைகளின் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகளில் வடமாகாணத்துக்கு போதிய பதக்கங்கள் கிடைக்கப்பெறும் நோக்கத்தில் சில வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சகல வலயங்களையும் சேர்ந்த உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்தார். (ம–108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசெக்ஸ்ஸில் ஆமிர்; ஒப்பந்தம் கைச்சாத்து

பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளரான மொகமட் ஆமிர் இங்கிலாந்தின் பிரபல கழகமான எசெக்ஸுடன் ஒப்பந்தமாகியுள்ளார்.

ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டு தடை பெற்று மீண்டும் களத்துக்குத் திரும்பி மிரட்டி வருகிறார் ஆமிர். கழக மட்டத்தில் இவரை ஒப்பந்தம் செய்ய பல அணிகள் தமக்குள் போட்டி போட்டன.

இந்த நிலையில் இங்கிலாந்தின் எசெக்ஸ் கழகம் அவரை தனது ஒப்பந்தத்தில் இணைத்துள்ளது. ஒப்பந்தத் தொகை தொடர்பான விட யங்கள் வெளியிடப்படவில்லை. எதிர்வரும் ஜுன் மாதம் 19 ஆம்திகதி முதல் ஆமிர் எசெக்ஸுடன் இணையவுள்ளார். கழக மட்டத்தில் ஆமிர் இணைந்து கொள்ளும் முதல் ஒப்பந்தம் இதுவாகும். (ம)





மைலோ கிண்ணக் கால்பந்தாட்டம்

# பொம்மர்ஸை வீழ்த்தியது நாவாந்துறை மேரிஸ்

யாழ்ப்பாணம், நவ. 11

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மாவட்ட மட்டச் சுற்றுக்கள் நேற்று ஆரம்பமாகின. சென். மேரிஸ் அணி தான் எதிர்கொண்ட ஆட்டமொன்றில் பொம்மர்ஸ் அணியை அபாரமாக வீழ்த்தியது.




அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்து அதிரடியை ஆரம்பித்து வைத்தார் நிதர்சன். நட்சத்திர வீரர் ஜக்சன் 17 ஆவது நிமிடத்திலும், பிரான்சிஸ் 17 ஆவது நிமிடத்திலும் கோல்களை அடுக்கினர். 20 ஆவது, 25 ஆவது நிமிடங்களில் நிதர்சன் மேலும் இரு கோல்களைப் பதிவுசெய்ய, முதல் பாதியின் முடிவிலேயே 5:0 என முன்னிலை பெற்று தனது வெற்றியை கிட்டத்தட்ட உறுதிசெய்தது சென். மேரிஸ். இரண்டாவது பாதியின் 40 ஆவது நிமிடத்தில் நிதர்சன் தனது நான்காவதும் அணியின் ஆறாவதுமான கோலைப் பதிவுசெய்தார். 45 ஆவது நிமிடத்தில் எபிரேன் பதிவுசெய்த கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலாகவும் அமைந்தது. முடிவில் 7:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி மிக இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது. (ம-23)

# அரசியலில் குதிக்கிறார் மேனி பக்கியோ

உலக குத்துச் சண்டை ஜாம்பவானாக வலம் வரும் பிலிப்பைன்ஸ் வீரர் மேனி பக்கியோ, அரசியலில் தான் கவனம் செலுத்தப்போவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் லொஸ் வெகாஸ் நகரில் கடந்த சனிக்கிழமை, நடைபெற்ற உலக குத்துசண்டைப் போட்டியில், 27 வயதான அமெரிக்க வீரர் ஜெர்சி வர்காரஸை வீழ்த்தி உலகச் சம்பியனானார் பிலிப்பைன்ஸ் வீரர் மேனி பக்கியோ. கடந்த செவ்வாய்க்கிழமை தாயகம் திரும்பிய அவருக்கு பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தில் வைத்து மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே பக்கியோ இவ்வாறு தெரிவித்தார்.

குத்துச் சண்டையில் ஏராளமான விடயங்களைச் சாதித்துள்ளேன். இனிவரும் காலங்களில் அரசியலில் ஈடுபட ஆர்வமாய் உள்ளேன் என பக்கியோ மேலும் தெரிவித்தார். (ம)



# அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், நவ. 11

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மாவட்ட மட்டச் சுற்றுக்கள் நேற்று ஆரம்பமாகின. பாசையூர் சென். அன்ரனிஸ் அணி தனது லீக் ஆட்டமொன்றில் அபாரமான வெற்றியைப் பதிவுசெய்தது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து செபஸ்ரியன் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் சீரான இடைவெளியில் கோல் மழை பொழிந்து ஏக ஆதிக்கத்தை வலுவாக நிலைப்படுத்திய சென். அன்ரனிஸ் அணி முடிவில் 11:0 என்ற கோல் கணக்கில் செபஸ்ரியனை ஊதித்தள்ளியது. (ம-23)



# இந்தியாவை மிரட்டுகிறது பாக்; திட்டமிட்ட தொடர் வேண்டுமாம்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெறத் திட்டமிட்ட தொடர் திட்டமிட்டபடி நடைபெற வேண்டும், இல்லாவிடில் நட்டஈடு தரவேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுச் செயற்குழுத் தலைவர் நஜம் சேதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் நீண்ட காலமாக (மும்பைத் தாக்குலுக்குப் பின்னர்) இருதரப்புத் தொடர் நடைபெறவில்லை. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களிலேயே இரு அணிகளும் விளையாடி வந்தன. நீண்ட இழுபறி நிலைக்குப் பின்னர். இருதரப்புத் தொடரை நடத்த உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி இந்த வருடத்தில் இறுதியிலோ அல்லது அடுத்த வருடத்தில் மத்திய பகுதிக்குள்ளோ தொடரொன்று நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இருநாடுகளதும் எல்லையில் மாறிமாறி ஊடுருவல்கள் இடம்பெறுவதால் இருதரப்புத் தொடர் கைவிட்டுப் போனது.

இந்த நிலையிலேயே இருதரப்புத் தொடர் நடைபெறவேண்டும் என்று நஜம் சேதி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடனும் பன்னாட்டு கிரிக்கெட் சபையுடனும் இடம்பெற்ற எமது அண்மைய சந்திப்புகளில், பாகிஸ்தானுடன் இந்தியா, இருதரப்புத் தொடர்களில் பங்குபற்ற வேண்டும், இல்லையெனில், ஏற்படும் நட்டங்களுக்காக நட்டஈடு செலுத்த வேண்டும் என வெளிப்படுத்தியுள்ளோம். அவ்வாறு இருதரப்புத் தொடர் நடைபெறாவிட்டால் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தொடர்களிலும் இந்தியா, பாகிஸ்தான் அணிகளை ஒரே பிரிவில் சேர்க்கவேண்டாம் என வலியுறுத்தினோம் என சேதி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவியரை நொறுக்கியது யங்ஹென்றிஸ் மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், நவ. 11

மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் மாவட்ட மட்டச் சுற்றுக்கள் நேற்று ஆரம்பமாகின. இளவாலை யங்ஹென்றிஸ் அணி தனது லீக் ஆட்டமொன்றில் சென். சேவியரை வீழ்த்தியது.




அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுக் காலை இந்த ஆட்டம் நடைபெற்றது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து சென். சேவியர் அணி மோதியது. ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் முதற் கோலைப் பதிவு செய்தார் யங்ஹென்றிஸ் வீரர் தனேஸ். பதிலடி கொடுப்பதற்காக சேவியர் பலமுறை முயன்ற போதிலும் எந்த முயற்சியும் பயன் கொடுக்கவில்லை. வேறெந்த மாற்றங்களும் இல்லாமல் 1:0 என்ற யங்ஹென்றிஸின் ஆதிக்கத்துடன் முதற்பாதி முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் 48 ஆவது நிமிடத்தில் தனேஸ் தனதும், அணியினதும் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார்.

யங்ஹென்றிஸின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியான நிலையில் மகிபன் 50ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்து அணியை மேலும் பலப்படுத்தினார். சேவியரால் ஒரு கோலையேனும் பதிவு செய்ய இயலவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இளவாலை யங்ஹென்றிஸ்.

(ம-23)

# கரவெட்டி ஞானம்ஸ் இறுதியில்

கரணவாய், நவ. 11

கைதடி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தை 13 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ் அணி.

யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜீவன் 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெனி 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

69 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சாவகச்சேரி சிவன் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து 13 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ். காந்தன் அதிக பட்சமாக 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சேந்திரன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

(ம-108)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர் சேவை தரம் III
சனி,ஞாயிறு
9.30-3.30 மணிவரை
வடமாகாண ஆசிரியர்
சனி, ஞாயிறு
10.00-3.00 மணிவரை
வடமாகாண காணி வெளிக்கள போதனாசிரியர்
சனி
1.00-4.00 மணிவரை
B.Ed, M.Ed, வங்கிசார் பரீட்சைகள், அதிபர் EB வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

திறமையின் தேடல்
நீங்களும் அறிவிப்பாளராக ஊடகவியலாளராக மிளிர அரிய சந்தர்ப்பம்
100% கலையக பயிற்சி / New Trends Of Fm வானொலித்துறை, பத்திரிகைத்துறை, செய்தி, சந்தைப்படுத்தல், Public Relation & Advertising, Production Audio, Social Media, Media Ethics & Law போன்ற துறைகளை உள்ளடக்கிய 3 மாத கால பயிற்சி நெறியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.
- ஏனைய துறைகளில் உள்ளவர்களும் இத் துறையினைக் கற்று மேலதிக தகைமையினை வழங்கும் இக் கற்கை நெறியில் இணைந்து கொள்ளலாம்.
ICVE மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட 2 சான்றிதழ்கள்
- ஆரம்பம்: யாழ்ப்பாணத்தில் 13.11.2016
வவுனியாவில் 20.11.2016
சனி/ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்
பதிவுகளுக்கு முந்துங்கள்
North Mass media College
No. 221 , Kandy Road, Jaffna.
077 747 5733

## இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 11

ஐக்கியத்தின் கபடித் தொடர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து பருத்தித்துறை சித்திவிநாயகர் பி அணியும் பருத்தித்துறை சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

மைலோ கிண்ணத் தொடர் மைலோ கிண்ணத் தொடருக்காக நடைபெற்று வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணியும். தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23-108)


# மூன்று சதங்களுடன் இங்கிலாந்து அசத்தல்

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய நிலவரத்தின் படி இங்கிலாந்து அணி ரூட், மொயின் அலி, ஸ்ரோக்ஸ் மூவரினதும் சதங்களுடன் வலுவான நிலையில் உள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அலிஸ்டர் குக் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் நாள் முடிவில் அந்த அணி ரூட்டின் சதத்தின் உதவியுடன் 311-4 என்று பலமான நிலையில் இருந்தது. மொயின் அலி 99 ஓட்டங்களுடனும், ஸ்ரோக்ஸ் 19 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். சதம் கடந்தார் மொயின் அலி. 117 ஓட்டங்களுடன் அவரை போல்ட் செய்தார் ஆமிர். பரிஸ்ரெல சிறிது அடித்தாடினார். 4 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார். வோக்ஸ், ரசிட் இருவரையும் முறையே 4,5 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் ஜடேயா. ஸ்ரோக்ஸின் அதிரடிச் சதம் அரங்கேறியது. 128 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழக்க இங்கிலாந்து 517 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் ஜடேயா மூன்று இலக்குகளையும், யாதேவ், அஸ்வின், சமி மூவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 63 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முரளி விஜய் 25 ஓட்டங்களுடனும் கம்பீர் 28 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

(ம)



# உடற்கல்வி ஆசிரியர்களின் செயலமர்வு

கரணவாய், நவ. 11

கல்வி அமைச்சும் விளையாட்டு அமைச்சும் இணைந்து பாடசாலைகளில் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் தரம் ஏழில் கல்விகற்கும் சகல மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களின் திறமைகள் இனம் காணப்பட்டு அதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக வலய மட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு சகல கல்வி வலயங்களிலும் நேற்றும் இன்றும் நடைபெறுகிறது. இதன் தொடர்ச்சியாக வலயமட்ட வீரர்களைத் தெரிவு செய்வதற்கான விளையாட்டுத் திறமைகளைப் பரிசோதிக்கும் செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் அந்தந்த வலயங்களில் இடம்பெறும்.

(ம-108)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org